வெளியீடு—17—1—1968]
Issued—17—1—1968]

A.S.O(B)

# தமிழகச் சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

666

திங்கட்கிழமை, 1967 ஜூன் 19
Monday, 19th June 1967

தொகுதி II—எண் 2
Volume II—No. 2

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.
*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

V211,31 N67
67.2.2;1
64997

## உள்ளடக்கம்.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1 | வினாக்கள்—விடைகள் | 171–190 |
| 2 | 1967–68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவு திட்டத்தின் மீது பொது விவாதம் | 190–260 |
| 3 | பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் | 261–262 |



64997

A. 50—1.

666

# தமிழகச் சட்டப் பேரவை

*திங்கட்கிழமை, 1967 ஜூன் 19.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்-விடைகள்". மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடையளிப்பார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக் குறியிட்ட வினாக்கள்.

### *Earth tremors in Tambaram*

* 23 *Q*.—THIRU K. VINAYAKAM : THIRU MUNU ADHI : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) Whether the Government are aware of the fact that frequent earth tremors of considerable severity have occurred in Tambaram, near Madras; and

(*b*) the details of the opinion expressed by meteorological department after seismographic recordings?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** (அ) ஆம். ஆனால், நில நடுக்கங்கள் மிதமாகவே இருந்தன.

(இ) பூமிக் கடியில் மேலாக உள்ள அடுக்குகளில் அசைவுகள் ஏற்பட்டதால் இந்த நில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக இந்திய அரசினைச் சேர்ந்த இந்தியப் புவி இயல் ஆராய்ச்சித் துறையும் வானிலை ஆராய்ச்சித் துறையும் நடத்திய புலனாய்வுகள் மூலம் தெரிய வருகிறது. நில நடுக்கங்கள் மிதமானவையாகவே இருந்தன. அவை மீண்டும் ஏற்படக்கூடும். ஆனால், இதன் காரணமாக பீதி அடைய வேண்டிய அவசியமில்லை. நில நடுக்கங்கள் ஏற்பட்ட பகுதி புவி இயல் முறைப்படி மிக உறுதியானது. எனவே, பலமான நில அதிர்வு எதுவும் இங்கு ஏற்படுவதற்கில்லை.

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, to begin with, I wish to point out that my question has been wrongly worded. I had asked in clause (*b*) of my question, the details of the opinion expressed by the 'geological' department and not the 'meteorological' department as given in the questions circulated to us.

[1967 ஜூன் 19

That apart, may I know from the Hon. the Chief Minister whether there has been considerable damage to property and fear felt by the residents of Tambaram locality?

THE HON. THIRU C. N. ANNADURAI: The fear felt by the residents cannot be measured. As for the damages, the hon. Member has not asked about the same in his question and hence, details about the same have not been included in the answer to this question.

THIRU K. VINAYAKAM: When a question is put to the Hon. Ministers, they will have to anticipate supplementary questions connected with the main question and they cannot simply state that a particular thing has not been included in the main question and hence, they cannot answer supplementary questions connected with the main question. Even now, it is not too late for the Hon. Chief Minister to conjure up an answer to the supplementary to pacify the questioner. He can give us some details about the loss or damages to buildings and properties and other belongings of the local people.

THE HON. THIRU C. N. ANNADURAI: Since the hon. Member wants me to conjure up some answer, I may say that these tremors happened under a different regime. That apart, since the hon. Member is interested in knowing the details about the damages caused, I will look into the matter and let him know at the appropriate time.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், கே. விநாயகம் அவர்களுடைய கேள்வியில் Geological என்று எழுதியிருப்பதாகவும் Meteorological என்று இல்லையென்றும் சொன்னார்கள். அவர்கள் கைப்பட எழுதியது இது. அவர்கள் எழுதிய கேள்வி என்னிடத்தில் இருக்கிறது.

It is stated like this in it: "the details of the opinion expressed by the 'meteorological' department."

**திரு. முனு. ஆதி:** அந்த வட்டாரத்தில் சேதம் ஒன்றுமில்லை என்பதை நானும் அதிகாரிகளுடன் சுற்றிப் பார்த்தபொழுது அறிந்து இருக்கிறேன். எதிர்காலத்தில் இதைவிடத் தீவிரமாக நில நடுக்கம் இருக்குமோ என்று அந்த வட்டாரத்து மக்களிடத்திலே ஒரு அச்சம் இருக்கிறது. எனவே, அதைப் போக்குவதற்கு ஏதாவது வழிவகைகள் செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** இந்த அரசாங்கம் தந்திருக்கின்ற தகவல்களை மக்களிடத்திலே பரப்புவதின்மூலம் அந்த அச்சத்தைப் போக்கலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, இந்த நில நடுக்கம் ஏற்பட்டதற்குப் பின்னர் அந்தப் பகுதியிலே உள்ள சொத்துக்கள், மனைகள் இவற்றின் விலைகள் குறைந்திருப்பதாகச் சொல்லப்படுவது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா?



1967 ஜூன் 19]

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** மனைகள் வாங்குவது விற்பது என்பவற்றில் எனக்கு அனுபவம் இல்லை. அதைப்பற்றிய தகவல்களை பிறகு விசாரிக்கிறேன்.

### அகில இந்திய காங்கிரஸ் தலைவர்

*24 வினா.—திரு. கரு. சீமைச்சாமி: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அகில இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் (Security Officer) செலவையும் அந்தரங்க எழுத்தர் (Personal Clerk) செலவையும் தமிழ் நாடு அரசு ஏற்றுக்கொள்கிறதா?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன?

THE HON. THIRU C. N. ANNADURAI: (a) & (b) As regards the personal Clerk of Sri Kamaraj, President of the All-India Congress, the answer is in the negative.

As regards the alleged security arrangements for Sri Kamaraj, it is not desirable in the public interest to discuss details relating to security precautions taken in respect of political leaders and other V.I.Ps. on the floor of the Assembly.

DR. H. V. HANDE: May I know on what basis these security arrangements are made and the arrangement that is made for giving security to the leaders of other political parties?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கேள்வியை அனுமதிக்க முடியாமல் இருப்பதைப்பற்றி நான் மிகவும் வருந்தப்படுகிறேன். 'மேஸ் பார்லிமெண்டரி ப்ராக்டிஸில்' 351-வது பக்கத்திலே "An answer to a question cannot be insisted upon if the answer is refused by the Minister on any ground and the Speaker must refuse to allow supplementary questions under these circumstances." என்று இருக்கிறது. ஆகவே, என்னுடைய கடமையைச் செய்கின்ற வகையில் துணைக் கேள்விகளை நான் அனுமதிக்க முடியாமல் இருப்பதற்கு வருந்துகிறேன்.

### *Industrial Estates in Tirunelveli district*

*25 Q.—THIRU D. S. AUTHIMOOLAM: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state the names of the revenue divisions selected in Tirunelveli district for the location of industrial estates?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நான்கு வருவாய்த் துறைக் கோட்டங்களில், திருநெல்வேலி (பேட்டை), கோவில்பட்டி (கோவில்பட்டி),

தூத்துக்குடி (தூத்துக்குடி) ஆகிய மூன்று வருவாய்க் கோட்டங்களில் தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தைச் சேர்ந்த சேரன்மாதேவி வருவாய்க் கோட்டத்தில் தொழிற்பேட்டை நிறுவுவது குறித்து இனிமேல்தான் ஆலோசிக்க வேண்டும்.

THIRU T. MARTIN : May I request the Hon. the Minister to state on what basis these Industrial Estates have been selected by the Government?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** என்ன அடிப்படையில் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகின்றன என்ற விளக்கங்கள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் கூற இயலும். பொதுவாக, எல்லா வருவாய்க் கோட்டங்களிலும் ஒவ்வொரு தொழிற்பேட்டை நிறுவப்பட வேண்டுமென்ற அடிப்படையில்தான் கடந்த இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலே தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 36 தொழிற்பேட்டைகள் இதுவரை அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், அவை இல்லாத இடங்களிலேயும் நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. மு. ச. சிவசாமி :** தலைவர் அவர்களே, தூத்துக்குடி கூட்டுறவுத் தொழிற்பேட்டை சம்பந்தமாக எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன. இன்னும் மூன்று இலட்சம் ரூபாய் அதற்குக் கொடுக்க வேண்டியதை துரித காலத்தில் கொடுத்தால் சீக்கிரத்திலேயே அதை ஆரம்பிக்க முடியும். எனவே, அந்தத் தொகையை சீக்கிரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்தத் தொழிற்பேட்டை சம்பந்தமான கோரிக்கை வந்திருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. அது முறைப்படி கவனிக்கப்படும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, தொழிற்பேட்டைகள் இன்னும் நிறுவப்படாத கோட்டங்கள் இருக்கின்றன என்று சொன்னீர்களே, அவை என்ன என்ன என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** 1967-68-ல் மேலும் 7 இடங்களில் தொழிற் பேட்டைகள், கூட்டுறவுத் துறையின் மூலமாகவும், அரசாங்கத்தின் சார்பாகவும் அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இன்னும்

Ancillary Industrial Estate, Vadalur.

Industrial Estate for Instruments Industries at Madras.

Auto Parts Co-operative Industrial Estate near Madras.

Electronic Industrial Estate at Madras or Madurai.

Industrial Estate for Drugs and Pharmaceuticals at Madras or Mettur.





போன்ற இடங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. சாதாரண மான
போன்ற இடங்கள் ஆராயப்பட்டு வருகின்றன. சாதாரணமான
போன்ற இடங்களில் வைக்கலாமா என்று ஆராயப்பட்டு வருகிறது. முடிவு இனிமேல்தான் எடுக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** தஞ்சை ஜில்லா விவசாயம் அதிகமாக இருக்கக்கூடிய ஜில்லாவாக இருப்பதால் அங்கு எந்தவிதமான தொழிற்பேட்டையும் பெரிய அளவில் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, விவசாய மக்கள் தொழிற் பயிற்சியிலும் ஈடுபடத்தக்க விதத்தில் பெரிய தொழிற்பேட்டைகளில் தொழில் செய்து வாழ்வதற்கேற்ற வகையில் புதிய திட்டத்தை ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, இது திருநெல்வேலியைப்பற்றிய கேள்வி என்றாலும், தஞ்சையைப் பொறுத்தவரையில் மாயவரம், மன்னார்குடி என்ற இடங்களில் ஐந்தாண்டுத் திட்டங்களிலே தொடர்ந்து ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மாயவரத்திலும், பட்டுக்கோட்டையிலும் தொழிற்பேட்டை வைப்பதற்கான நிலைமை பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

THIRU T. MARTIN : May I request the Hon. Minister to state whether the backwardness of a particular area has been taken as the basis or any other basis has been taken into account while selecting these Industrial Estates?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தொழிற்பேட்டை ஆரம்பிப்பதற்கு கூடுமானவரை தொழில் வளர்ச்சி இல்லாத பக்கத்திலே தொழிற்பேட்டை ஆரம்பிக்க போதுமான உதவிகள் செய்ய முன்வருகின்றவர்கள் இருக்கின்றார்களா என்ற அளவிலேயும், தொழிற்பேட்டைக்கான மூலப்பொருட்கள் கிடைக்கின்றன நிலைமை இருக்கிறதா என்ற அளவிலேயும் பார்த்து இப்படிப்பட்ட பல வகைகளை உள்ளடக்கித் தான் தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படுகிறது. அதிலே தொழிற்பேட்டை இல்லாத பிற்பட்ட பகுதிகளும் முக்கியமாக பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** ஐயா, இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் இடத்தை வாடகைக்கு பெறும் பலர் உள்வாடகைக்கு வேறு ஒருவருக்கு விட்டுவிடுவது அரசினருக்கு தெரியுமா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய விவரம் இல்லை. கனம் உறுப்பினர் அவர்கள் அதைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1967 ஜூன் 19

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திருநெல்வேலியில் துவக்கப் படுகிற தொழிற்பேட்டைக்கு எவ்வளவு செலவாகுமென்று அரசாங்கம் ஆராய்ச்சி செய்திருக்கிறது? 'ஆவரேஜ்' ஆக ஒரு தொழிற்பேட்டைக்கு எவ்வளவு செலவாகும் என்று அரசாங்கம் ஆராய்ச்சி செய்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

கோவையில் கூட்டுறவு நூற்பு ஆலை

*26 வினா.—திரு. நா. மருதாசலம்: மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

கைத்தறி நெசவாளருக்கு கோவையில் ஒரு கூட்டுறவு மில் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் போதிய அளவு நூல் கிடைப்பதற்காக நிறுவிய எட்டு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ஒன்று தாராபுரத்திலுள்ளது. இதைத் தவிர கைத்தறி நெசவாளர்களுக்காக கோயம்புத்தூரில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை

**திரு. என். எஸ். வி. சித்தன்:** இது போன்ற கூட்டுறவு நூற்பாலைகள் லாப அடிப்படையில் ஏற்படுத்தப் படுகின்றனவா அல்லது வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஏற்படுத்தப் படுகின்றனவா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** லாப அடிப்படையில் அல்ல. கைத்தறி நெசவாளர்களுக்கு மலிவான விலையில் நூல் கொடுக்க வேண்டுமென்ற முயற்சியின் அடிப்படையில்தான் இத்தகைய கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

**திரு. ந. மருதாசலம்:** கோவையில் கூடிய சீக்கிரம் ஒரு நூற்பு ஆலையை ஏற்படுத்த சர்க்கார் முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போது தாராபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை இருக்கிறது. புதியதொரு கூட்டுறவு நூற்பாலையை நிறுவுவதைவிட இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்திச் சக்தியை விரிவுபடுத்தலாமா என்று தொழிற் துறை இயக்குநர் அவர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

**திரு. எ. பாலசுப்பிரமணியன்:** கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து வெளிவரும் நூல் நெசவாளர்களுக்கு மலிவாகக் கிடைக்க வேண்டியிருக்க, தனியார் துறை நூல் விலை அளவேதான் விற்கப் படுகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?



1967 ஜூன் 19]

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அது பற்றிய விவரம் இல்லை. அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், பரிசீலிக்கப்படும்.

**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** கோவை ஜில்லா, ஈரோடு தாலூகா, விஜயமங்கலத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைக்க ஏற்கனவே இருந்த அரசு அனுமதி கொடுத்திருந்தது. பிறகு அந்த நூற்பாலை தாராபுரத்திற்கு மாற்றப்பட்டது. மறுபடியும் விஜயமங்கலத்தில் நூற்பாலை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

**திரு. பி. வேலுசாமி:** கூட்டுறவு நூற்பாலையில் தயாரிக்கப்படுகிற நூல்கள் சாதாரணமாகத் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விற்கப்படுகின்றன. கூட்டுறவு நெசவாளர்களுக்குக் கிடைப்பதில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அது பற்றிய விவரம் இல்லை. அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பற்றிக் கவனிக்கலாம்.

**திரு. கே. பி. எஸ். மணி:** அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுக்காகப் போதுமான அளவுக்கு நூல் உற்பத்தி செய்து கொடுக்க வழி வகை செய்து கொடுத்தும் இன்னும் அவர்கள் நூல் பற்றுக்குறை என்று சொல்லி தெருவில் பிச்சையெடுக்கின்ற நிலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் என்ன வழிவகை செய்ய இருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** கைத்தறி நெசவாளர்களுடைய குறையைப் போக்க வேறுபல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே மலிவாக நூல் கிடைக்க வழி செய்யும் முறை ஒன்று. அதற்கான முறையில் கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்திச் சக்தியை விரிவுபடுத்த அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

**திரு. தி. பொன்னுமலை:** சேலம் கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து பல விண்ணப்பங்கள் அனுப்பியும் இதுவரை அவற்றின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலனையில் இருந்து வருகின்றன.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நெசவாளர்கள் நிறைந்த கோயில்பட்டி வட்டாரத்தில், பாரதி பிறந்த எட்டயாபுரத்தில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றை ஏற்படுத்தும் யோசனை முன்னாள் அரசுக்கு இருந்தது. அது பற்றி இப்போதைய அரசினரின் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய விவரம் இல்லை. அடுத்து, ஏழு புதிய நூற்பாலைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சேலத்தில் வீவர்ஸ் கோவாப்பரெட்டிவ் சொசைடி மூலமும், கோயம்புத்தூர், இராமநாதபுரம், திருச்சி ஆகிய இடங்களில் காட்டன் குரோயர்ஸ் அண்டு காட்டன் மார்க்கெட்டிங் கோவாப்பரேட்டிவ் சொசைடிஸ் மூலமும், திருச்சியில் பவர்லூம் ஓனர்ஸ் அண்டு பவர்லூம் கோவாப்பரேட்டிவ் சொசைடிஸ் மூலமும் ஆரம்பிப்பதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. கோயம்புத்தூரிலிருந்தும் நூற்பாலைகள் ஆரம்பிப்பதற்கான விண்ணப்பங்கள் வந்து, அவை பரிசீலனையில் இருக்கின்றன.

**திரு. பி. துரைராஜ் :** கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு நூல்களைக் குறிப்பிட்ட சதவிகிதம் விற்பனை செய்ய அரசாங்கம் நிபந்தனை விதிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த விகிதத்தில் தற்போது விநியோகிக்கப்படுகிறது என்ற விவரம் இல்லை. குறிப்பிட்ட சதவிகிதத்தில் விநியோகிப்பதற்கு வழி இருக்குமானால் கவனிக்கப்படும்.

**திரு. ப. மகாதேவன் :** கன்னியாகுமரி நூற்பாலையில் மூன்றாவது ஷிப்ட் தொடங்கப்படுமா ? எப்போது ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றி விவரம் இல்லை. பொதுவாக மூன்றாவது ஷிப்ட் தொடங்குவது பஞ்சு பற்றாக் குறையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆறு நாள் நடைபெற வேண்டிய நூற்பாலைகள் ஐந்து நாள் நடைபெற வேண்டுமென்ற நிலை இருப்பதைப் பார்க்கும்போது மூன்றாவது ஷிப்டுக்கு வசதி ஏற்படுமா என்பது கவனிக்கப்பட வேண்டியது.

**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** நூற்பாலைகளிலிருந்து கிடைக்கக்கூடிய நூல் நெசவாளர்களுடைய கைக்குக் கிடைக்கும்போது நேரடியாகக் கிடைப்பதில்லை. ஏஜண்டுகள் மூலமாக வாங்குவதால் பல கட்டங்களில் விலை ஏறுகிறது. ஆகவே, நேரடியாக நூற்பாலைகளில் இருந்து நெசவாளர்கள் கைக்கு நூல் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவற்றில் உள்ள சிக்கல்கள் என்னவென்று ஆராய்ந்து சிக்கல்களை நீக்குவதற்கு வழிவகைகள் இருக்குமானால் கவனிக்கப்படும்.

**திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் :** கைத்தறி நெசவாளர்கள் கூலி கட்டாமல் கஷ்டப்படக்கூடிய நிலையில் நூல் விலையும் மிக அதிகமாக இருக்கிறது. கூட்டுறவு மில்களில் தயாரிக்கப்படுகின்ற நூலாவது அவர்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கூடுமான வரையில் குறைந்த விலைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இத்தகைய கூட்டுறவு ஆலைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. முடிந்த அளவுக்கு செயல்படுத்தப்படும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** நூற்பாலைகளுக்கு இப்போது போதிய நூல் கிடைப்பதில்லை. ஈஜிப்ஷன் காட்டன் நம்முடைய நாட்டுக்கு வருவதும் அரிதாக இருக்கிறது. உற்பத்திச் செலவால் நூல் விலை கூடுதலாக இருப்பதால் சரியானபடி மார்க்கெட் கிடைப்பதில்லை. எனவே, நூல் ஆலையிலிருந்து சர்க்காரே அந்த நூலை வாங்கி கைத்தறி நெசவாளர்களுக்கு சப்சிடைஸ்டு முறையில் விநியோகிக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

THIRU T. MARTIN : Sir, will the Hon. Minister be pleased to state whether there is any proposal to issue directions to the co-operative mills to give appointments to the landless poor people and also the repatriates from Ceylon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த ஆலைகளில் பணிபுரிவதற்கு தகுதியுடையவர்களாக அவர்கள் இருப்பார்களேயானால் அவர்களுக்கு முதற் சலுகை கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** இப்போது நடக்கின்ற மில்களிலேயே ஆறு நாட்களுக்குப் பதிலாக ஐந்து நாட்கள் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கும்போது மேற்கொண்டும் கூட்டுறவுத் துறையில் நூற்பாலைகளை ஆரம்பிக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. ஏற்கனவே நூற்பாலைகளை லாபகரமாக நடத்த முடியாத நிலையில், பஞ்சு போதிய அளவு கிடைக்காத நிலையில் மேற்கொண்டு புதிய கூட்டுறவு நூற்பாலைகளை ஆரம்பிப்பது நிறுத்தி வைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அந்த நோக்கத்தின் அடிப்படையில்தான் புதிய நூற்பு ஆலைகளைத் திறப்பதற்குப் பதிலாக இருக்கின்ற நூற்பாலைகளிலேயே அதன் உற்பத்திச் சக்தியை விரிவுபடுத்தலாமா என்று அரசாங்கம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. க. ரா. நல்லசிவம் :** தற்போதுள்ள கூட்டுறவு ஆலைகளில் கூட நெசவாளர்களின் நிலைமைகளை அனுசரித்து அவர்களுக்கு நூல் விநியோகம் செய்வதாகத் தெரியவில்லை. அப்படியிருக்க கோவை போன்ற ஜில்லாக்களில் பருத்தி உற்பத்தியாளர்கள், பவர்லூம் உரிமையாளர்கள் இவர்கள் எல்லாம் சேர்ந்து விண்ணப்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். யார் ஆரம்பித்தாலும் கூட்டுறவு நெசவாளர்களுக்கு குறைந்த

விலையில் நூல் கிடைக்கும் அடிப்படையான கருத்தோடு ஆரம்பிக்க ஏதாவது திட்டவட்டமான கருத்தை வற்புறுத்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றி ஆலோசித்து அப்படி இயலுமானால் அதற்குத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கலாம்.

### கிராமச் சிப்பந்திகளின் சம்பளம்

* 27 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டில் இருக்கும் எல்லா கிராம சிப்பந்திகளுக்கும் (மணியம், கர்ணம், தலையாரி, தோட்டி) விலைவாசியை முன்னிட்டு சம்பளத்தை உயர்த்த உத்தேசம் ஏதேனும் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது அமுலாக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) இந்த உத்தேசம் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM: Mr. Speaker, Sir, is the Minister for Food aware of the fact that the scales of pay paid to the Village headman, karnam, talaiyari and thotti are tantalisingly negligible when compared to the services rendered by them to the society, and in view of this disparity will the Government think of revising their salaries at least in the coming period?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அந்த உத்தேசம் இப்போது இல்லை. 1964-ம் ஆண்டில் ஆக்டோபர் முதற் கொண்டு வில்லேஜ் ஹெட்மென்னுக்கு சம்பளம் 17 ரூபாய் என்றிருந்ததை 34 ரூபாயாகவும் கர்ணங்களுக்கு 18 ரூபாயாக இருந்ததை 36 ரூபாயாகவும் கடைநிலை ஊழியர்களுக்கு 11 ரூபாயாக இருந்ததை 28 ரூபாயாகவும் திருத்தியமைக்கப்பட்டது. ஆதோடு கிராம முன்சீப், கர்ணம் போன்றவர்களுக்கு டெவலப்மெண்ட் அலவன்ஸ் என்ற பெயரால் நாமினல் சார்ஜாக சில கிராமங்களில் மணியகாரர்களுக்கு 7 ரூபாயும், வேலைப்பளு குறைவாக உள்ள இடங்களில் 3 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருகிறது. அதிகவேலை உள்ள இடங்களில் கர்ணங்களுக்கு 15 ரூபாய் அலவன்ஸும், சாதாரண வேலை உள்ள இடங்களில் 12 ரூபாயும் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஊதிய சீர்திருத்த அமைப்பு விலைவாசியை யொட்டி போதுமானதாக இல்லாமலிருந்தாலும் இது பற்றி ஒரு கமிட்டி 1955-ல் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், இப்போது மேல் அவைத் தலைவராக இருக்கிற திரு. மாணிக்கவேலு அவர்கள், முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள்—இவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி மணியக்காரர்கள். கணக்குப் பிள்ளைகள் இவர்கள்





சம்பளம் பற்றி திருத்தியமைக்கலாமா என்ற கொள்கையை ஆராய்ந்தது. அதன் விளைவாக இரண்டு மூன்று கிராமங்களை இணைத்து அந்தக் கிராம மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளை இவர்கள் வேலையை ஒன்றாக இணைந்து, அதன்கீழ் மூன்று உத்தியோகஸ்தர்களை நியமித்து அப்படிச் செய்யலாம் என்ற பரிந்துறையை வழங்கியது. அந்தப் பரிந்துறையை திரு. பக்தவத்சலம் அவர்களை முதல் அமைச்சராக கொண்டிருந்த சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. அது சரியான பரிந்துரை அல்ல அதனால் பல கொடுதல்கள் வரும் என்று கருதியது. பக்தவத்சலம் பரிந்துரையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

28 வினா.—திரு. கெ. இரா. ஞானசம்பந்தன்: மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் எத்தனை கிராம மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள் இருக்கின்றனர்?

(இ) அவர்கள் சர்க்காரின் பகுதிநேர ஊழியர்களா? முழு நேர ஊழியர்களா?

(உ) முழு நேர ஊழியர்கள் இல்லையென்றால், இவர்களை முழுநேர ஊழியர்களாக்கி, மற்ற அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவது போல் சம்பளம் முதலியன இவர்களுக்குக் கொடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) கிராமத் தலைமை அலுவலர்கள் 11,765. கிராம கணக்கர்கள் 11,374.

(இ) அவர்கள் பகுதி நேர அரசாங்கப் பணியாளர்கள்.

(உ) இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: கிராம மணியக்காரர், கணக்குப் பிள்ளை இவர்களை நியமிப்பதில் பரம்பரை முறையைத் தவிர, தகுதி முறையை அடிப்படையாகக் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இவைபற்றி முடிவுகள் பரிந்துரையில் இருக்கின்றன. இதுபற்றி விரிவான முடிவை அரசாங்கம் எடுக்கவில்லை.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: கிராமங்களில் ஏற்படும் அத்தனை பூசல்களுக்கும் கிராமக் கர்ணங்கள், மணியக்காரர்கள் இவர்கள் காரணமாக இருப்பதால் இந்த முறையை, கர்ணம், மணியக்காரர்கள் இவர்களை ஒழித்து விட்டு அரசாங்கமே கிராம சர்வீஸ் என்ற அடிப்படையில் அதற்கான கல்வித் தகுதி போன்ற யோக்கியதாம்சங்களை நிர்ணயித்து ஒரு புதிய சர்வீஸை ஆரம்பிக்க அரசு உத்தேசிக்குமா?

[1967 ஜூன் 19

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் சுப்பிரமண்யம், மாணிக்கவேலர் கமிட்டி சிபார்சு செய்தது. அப்படி இணைக்கிற காரணத்தினால் மணியக்காரர்கள், கணக்குப்பிள்ளைகள் வேலைப் பளு அதிகமாகிறது. அதனால் திறமை குறையலாம். சில பரம்பரை முறை கிராம நிர்வாக முறையில் இருந்து வருகிறது, அதற்கும் கெடுதல் ஏற்படலாம். மேலும் எந்தக் கெடுதல்களைப் போக்க வேண்டுமென்று நிர்வாகம் விரும்புகிறதோ, அந்தக் கெடுதல் அதைவிட பத்து மடங்காகப் பெருகும் என்ற காரணத்தினால் இந்த முறையையே இன்று நீடிக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**திரு. மு. சண்முகம் :** பஞ்சாயத்துக்களில் கிராம மணியக்காரர்களை அதன் தலைவர்களாக நியமனம் செய்து அவர்களை முழு நேர வேலைக்காரர்களாக பயன்படுத்திக் கொள்ளும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற முறையை மாற்றியமைக்கிற காரணத்தினால் 11,000 பேர்களுக்கு மேல் வேலை இழக்கவேண்டியிருக்கும். ஏற்கனவே கிராம நிர்வாகத்தில் சீர்கேடான நிலை இருக்கிறது. ஆகவே, இப்படிச் செய்வதால் மேலும் கெடுதலாகப் போகும் வாய்ப்பிருப்பதால், இப்பிரச்னை அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. சௌந்தராஜ மூப்பனார்:** தற்போது சில பெரிய கிராம வட்டங்களில் பஞ்சாயத்து வரி வசூல் செய்வது ட்ராயூன் ஆபிசர்கள் என்பது தெரியுமா ? அந்த இடங்களில் தனியாக பில் கலெக்டர்களைப் போட்டுக்கொள்ள அனுமதி வழங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** சில மணியக்காரர்களுக்கு அப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன. அதேமாதிரி மணியக்காரர்களிடமிருந்து வசூலாகவில்லை என்ற தகவலும் இருக்கிறது.

**திரு. முனு. ஆதி:** டெவலப்மென்ட் அலவன்ஸ் என்று கொடுப்பது, அவர்கள் வீட்டு வரி, தொழில் வரி, வாகன வரி போன்றவற்றை வசூலிப்பதற்காகத்தான். அவர்களுக்கு அந்த அலவன்ஸை உயர்த்திக் கொடுத்து வரி வசூல் செய்வதற்கு உற்சாகப்படுத்தப்படுவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த அலவன்ஸ், சம்பளம் இவற்றை திருத்தியமைப்பது சம்பந்தமாக கிராம மணியக்காரர்கள் சங்கம் முன்னாள் ரெவின்யூ அமைச்சர் அவர்களை கடந்த டிசம்பரில் சந்தித்து விவாதம் நடத்தினார்கள். தீர்மானம் போட்டார்கள். அந்த நேரத்தில் நில வரி ஒழிப்பு சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனையில் ஈடுபட்டிருந்தால், அதுகுறித்து அதன் தனி அலுவலரை திரு. கெய்வார் அவர்களிடம் இந்த



1967 ஜூன் 19]

அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன. நில வரி சம்பந்தமாக அரசாங்கம் என்ன முடிவு எடுக்கப்போகிறதோ, அதன்பிறகு அதன் அடிப்படையில் இவர்கள் சம்பள விகிதத்தை மாற்றியத்தல் அல்லது அலவன்ஸ் கொடுத்தல் இவைபற்றி முடிவு செய்யலாம் என்று கெய்வார் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்தார்கள். இதில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புன்செய் நில வரி ரத்து செய்யப்படுகிறது என்று நிதி நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக வேலைப் பளு குறையலாம். இன்னும் நில வரியை அதிகமாக எடுக்கப்போகிற நேரத்தில் மணியக்காரர்களுக்கு என்ன வேலை இருக்கிறது என்ற அடிப்படையில் இந்த நிலைமைகளை எல்லாம் அரசாங்கம் பரிசீலனை செய்ய இருக்கிறது.

**திரு. எஸ். பி. பச்சையப்பன் :** கிராம உத்தியோகஸ்தர்களுக்கு இசும் பாத்தியதை எடுக்கப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக வேறு ஏதாவது சலுகை அவர்களுக்குத் தரப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** விவரமான பரிசீலனை செய்த பிறகு முடிவு செய்யப்படவேண்டிய விஷயம் இது.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** கிராம உத்தியோகஸ்தர்களுக்கு தற்போது கொடுக்கக்கூடிய சம்பளம் மிகவும் குறைவாயிருக்கிறது. சாதாரண சிப்பந்திகளுக்குக் கொடுப்பதில் பாதிதான் இருப்பதால், அதைப் பரிசீலனை செய்து, இவர்களுக்கு அந்த அலவன்ஸை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் முதலிலேயே குறிப்பிட்டேன். கிராம மணியக்காரர்கள் சர்க்காரின் முழு நேர ஊழியர்கள் அல்ல என்று.

**திரு. அ. லெ. சுப்பிரமணியம்:** இனிமேல் நியமிக்கப்படும் கிராம முன்சீப்புகள், கணக்குப்பிள்ளைகள் இவர்கள் வேலைக்கு கல்வித் தகுதியாக எஸ்.எஸ்.எல்.ஸி. படிப்பு நிர்ணயிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இன்றிருக்கிற முறைகளை எப்படி அமைக்கலாம் என்பது இப்போது ஏற்பட்டிருக்கிற நில வரி ரத்துக்குப் பிறகு இதற்காக நியமிக்கப்பட்டுள்ள ரெவின்யூ போர்ட் அதிகாரிகளின் அபிப்பிராயங்களைத் தெரிந்து, அவர்களைக் கலந்து அரசாங்கம் முடிவு செய்யப்படவேண்டிய விஷயம்.

**திரு. இரா. மாணிக்கவாசகம் :** தலைவர் அவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களுக்கு வெகு விரைவில் சென்று வேலைகளைக் கவனிக்கும் வகையில் துவிச்சக்கர வண்டி வழங்குவது பற்றி அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். 9-30 மூற் பகல்

(பதில் இல்லை.)

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், கடந்த கால அரசு இந்த கிராம உத்தியோகஸ்தர்களைப் பொறுத்தவரையில் ஒரு பரிவுரை கொடுத்து, அவர்கள் பல்வேறு தொல்லைகளைக் கொடுத்தாலும், அவைகளைப் பொறுத்துக் கொண்டு பரம்பரை முறையை மாற்றக் கூடாது என்று ஏற்றுக் கொண்டிருப்பது, அப்படி மாற்றி, அமைத்

தால் வரக்கூடிய தொல்லைகளைத் தாங்க முடியாது. அரசாங்கத்திற்குத் தொந்தரவு வரும் என்ற காரணத்தினால் தான். அப்படி மாற்றி அமைத்தால் இந்த ஆட்சிக்கும் தொல்லை கொடுப்பார்கள் என்பதற்காக பரம்பரை முறை மாற்றப்படாது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாற்றப்படாது இருக்கிறது என்ற கேள்விக்கு இடமில்லை. இன்றைக்கு ஒரு ஏற்பாடு அமுலில் இருந்து வருகிறது. அந்த ஏற்பாட்டை மாற்றி அமைப்பது முன்னேற்றத்திற்கு அறிகுறியாக இருக்கவேண்டுமே தவிர, மேலும் இடைஞ்சல்களை வரவழைத்துக்கொள்ள அரசாங்கம் விரும்பவில்லை.

**திரு. ப. மகாதேவன்:** ஆன் எ. பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள், அலுவலர்களைத் தவிர, சபாநாயகர் காலரி, ப்ரெஸ் காலரி தவிர, வேறு இடங்களில் இருக்க யாருக்காவது அனுமதி உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் இருக்கிறார்கள்?

**திரு. ப. மகாதேவன்:** அந்தப் பக்கத்தில் உறுப்பினர்களுக்குப் பின்னால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலவை உறுப்பினர்களுக்கென்று தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படித் தனியாக ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர்கள் இருக்க முடியும்.

**திரு. ப. மகாதேவன்:** அப்படியானால் சரி.

**திரு. க. ரா. நல்லசிவம்:** தலைவர் அவர்களே, தற்போது கிராம அதிகாரிகளுக்குப் பரம்பரை பாத்தியதை இருக்கிறது என்ற அடிப்படையில் அவர்கள் மீது லஞ்ச லாவணக் குற்றச்சாட்டுக்களை எழுதிக் கொடுத்தாலும் மேலே இருக்கிற அதிகாரிகள், பரம்பரை பாத்தியதை அடிப்படையில் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று தொல்லை கொடுப்பார்கள் என்று அதிகமாக நடவடிக்கை எடுப்பது கிடையாது. பாரம்பரை பாத்தியதையைக் கூட நாங்கள் ஓரளவுக்குப் பொறுத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அவர்கள் மீது லஞ்சம் போன்ற எந்தக் குற்றச்சாட்டுக்களைக் கொடுத்தாலும் 100-க்கு 90 குப்பைக் கூடைகளில் போகின்றன. இதைத் தடுத்து, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுத்து ஒழித்துக்கட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது சம்பந்தமாக சுப்ரீம் கோர்ட்டில் நடந்த வழக்கு ஒன்றில், பரம்பரை பாத்தியதை இனி செயல்படலாகாது, அதைத் தொடர வேண்டியதில்லை என்று தீர்ப்பு இருக்கிறது. அந்த அடிப்படையில் இப்போது நியமனமாகிற ஊழியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள் என்று கூற விரும்புகிறேன்.



**திரு. நா. சௌந்தரபாண்டியன்:** இப்போது கிராம அதிகாரிகள் தாலுகா தலைமையிடம் கிஸ்து சென்டர் முதலியவைகளுக்குப் போவதற்கு பிரயாணப்படி, தினப்படி முதலியவைகள் கொடுப்பதில்லை. இனிமேல் அந்தப் படிகளைக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவைகளுக்காகத்தான் பொதுவாக நாமினல் அலவன்ஸ் என்று கொடுக்கப்படுகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, கிராம முன்சீப்புக்கள், கணக்குப்பிள்ளைகள் பொது மக்களுக்கு அத்தாட்சிகள் கொடுக்கும்போது பணம் வாங்கிக்கொண்டு கொடுக்கிறார்கள். இதுபோன்ற நிலைமையை மாற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது போன்ற நிலைமைகள் ஏதாவது இருந்தால், அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு உறுப்பினர்கள் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. கெ. இர. ஞானசம்பந்தன்:** தலைவர் அவர்களே, கிராம கணக்குப்பிள்ளைகள், மணியக்காரர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுக்காததால், அவர்கள் வசதி படைத்தவர்களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. அதைத் தடுக்க அரசாங்கம் அவர்களின் ஊதியத்தை உயர்த்த முன் வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதற்கு நான் முன்பே பதில் சொல்லி விட்டேன்.

### சிதம்பரம் தாலுகா ஆபீசுக்கு புது கட்டடம்

* 29 **வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சிதம்பரம் தாலுகா, தாசில்தார் ஆபீசுக்கு புதுக் கட்டடம் ஒன்று கட்டும் திட்டம் அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும்?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் வரவில்லையாதலால், வினா எண். 30 தள்ளிப் போடப்படுகிறது.

## தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்

* 31 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் தற்போது இந்த அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இன்று பரிசீலனையில் இல்லை என்று சொன்னாலும், இனிமேலாவது அது பரிசீலனையில் எடுக்கப்பட்டு அதன்படி செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை, மத்திய அரசும் மாநில அரசும் இணைந்து செயல்படும் பிரச்னை. இந்தப் பென்ஷன் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி மத்திய அரசினர் பரிசீலித்து வருகிறார்கள். மாநில அரசின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட பின்னல் முடிவு எடுக்கப்படும்.

DR. H. V. HANDE : Mr. Speaker, may I know whether the State Government have given any advice to the Central Government with regard to pension to the industrial workers?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது வரையில் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை. அது பற்றி நாங்களே மத்திய அரசாங்கத்திற்கு எழுதுவதாக முடிவு செய்திருக்கிறோம். எழுதி அவர்களுடைய கருத்து தெரிந்தவுடன் இந்த அரசாங்கத்தின் கருத்தைத் தெரிவிக்கப்படும்.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், பென்ஷன் கொடுக்கும் அறிகுறி இல்லையென்றாலும், சிறு சிறு தொழிற்சாலையாக இருந்தாலும், கட்டாய இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமல் நடத்த அவர்களை அரசாங்கம் நிர்ப்பந்திக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போது தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. ஸ்கீம் என்று இருக்கிறது. குறிப்பாக, எந்தத் தொழிற்சாலையைப் பற்றியாவது உறுப்பினர் அவர்கள் கேட்டால் பதில் அளிக்கப்படும்.

## பஞ்சாயத்து வரிப்பணம் வசூல்

* 32 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஞ்சாயத்து வரிப் பணத்தை வசூலிக்க கிராம கர்ணம், -களுக்கு தனியாக மாதம் எவ்வளவு கொடுக்கிறார்கள் ?





(இ) இதை, அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) பஞ்சாயத்து வரிகளை வசூலிப்பதற்காக கணக்குப்பிள்ளை, கிராம மணியம் ஆகியோர்க்கு கீழ்க்கண்ட வீதத்தில் பஞ்சாயத்து வளர்ச்சிப்படி அளிக்கப்படுகிறது :—

(ஆ) மாதம் ஒன்றுக்கு படி வீதம்—

| | இயல்பான பொறுப்பு. | எளிதான பொறுப்பு. |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| (1) கணக்குப் பிள்ளை .. | 15·00 | 12·00 |
| (2) கிராம மணியம் .. | 7·00 | 5·00 |

(இ) இல்லை.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், கிராம மணியக்காரர், கணக்குப்பிள்ளை இரண்டு பேர்களுக்குமே ஏறக்குறைய ஒரே மாதிரியான வேலை. கர்ணம்களுக்கு 15 ரூபாயும், 12 ரூபாயும், மணியக்காரர்களுக்கு 7 ரூபாயும் 5 ரூபாயும் என்று இப்படிப் பாகுபடுத்தும் தன்மையில் கொடுக்கக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இது வருவாய்த் துறை அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வி.

**திரு. நா. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, பஞ்சாயத்து வரி வசூல்களை கிராம முன்சீப்புகளிடமிருந்து எடுத்து, பஞ்சாயத்துக்களுக்குத் தனிச் சிப்பந்திகளை நியமிக்க இந்த அரசாங்கத்திற்கு ஏதேனும் கருத்து உண்டா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** தனிக் கேள்வி போடவும்,

THIRU K. VINAYAKAM : Mr. Speaker, is the Hon. Minister aware of the fact that in many of the village panchayats, karnams and village headmen concentrate upon only revenue collections due to the Revenue Department and not on local self-government taxes and more often there are factions between the presidents and the collection authorities. So, will the Government think of the possibility of giving them separate remuneration and compel them to do as much good work as they do with regard to the revenue collections, in the case of local self-government taxes also?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதுபோன்ற குற்றச்சாட்டுகள் எதுவும் இது வரையில் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி இருந்தால் அது பற்றிய யோசனைகளை அரசு ஆராயும்.

**திரு. ஆர். நாகசுந்தரம் :** வேண்டியவர்களாக இருந்தால் கரும்பு பயிரிட்டால், கம்பு பயிரிட்டார்கள் என்றும், வேண்டாதவர்களாக இருந்தால், கம்பு பயிரிட்டாலும் கரும்பு பயிரிட்டார்கள்

என்றும் ரிஜிஸ்டரில் பதிவு செய்து தீர்வை விதித்திருக்கிறார்கள் சில கிராம உத்தியோகஸ்தர்கள். அப்படிப்பட்ட புகார்கள் ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** இதுபோன்ற குறைகள் இருக்குமானால், தயவுசெய்து குறிப்பாக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதி அனுப்புமாறு பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. சகாதேவ கண்டர் :** பஞ்சாயத்து வரிவசூலை செய்வதற்கு பில் கலெக்டரை நியமித்தால் சௌகரியமாக இருக்கும் என்பதுபற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இதுபற்றி தனியாக எழுதி அனுப்பினால், பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஆலடி அருணா:** ஊராட்சி வரி வசூல் பொறுப்பை கிராம அதிகாரிகளிடம் ஒப்படைத்ததால், ஊராட்சி எழுத்தர்கள் பகுதி நேர ஊழியர்களாக மாற்றப்பட்டு, சம்பளம் இழந்துள்ள நிலைமையில் இருக்கிறார்கள். இதற்குப் பரிகாரம் தேடுவதற்கு அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அம்மாதிரி எழுத்தர்கள் வேலை இழந்ததாக அரசாங்கத்தின் கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை. ஆகவே அதுபற்றி பிரச்சினைக்கு இடமில்லை.

**திரு. க. சோமதிசங்கர தீட்சிதர் :** மைனர் பஞ்சாயத்துக்களில் சிறிது நேரம் வேலை பார்த்துவரும் கணக்கர்கள், தங்களுடைய ஊதியத்தை உயர்த்தவேண்டும், வீட்டுவரி முதலியவைகளை வசூலித்துக்கொள்வதற்கு தங்களுக்கு அனுமதி கொடுத்து, முழு நேர ஊழியர்களாக ஆக்கி தங்கள் சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று அம்பாசமுத்திரம் தாலூகா கணக்கர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் அரசாங்கத்திற்கு வந்ததா ? அதைப் பற்றி சர்க்கார் கவனத்தில் எடுத்துக்கொள்வார்களா என்று நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அதுபற்றி தகவல் இல்லை.

THIRU T. MARTIN : Will the Hon. Minister for Local Administration be pleased to state whether there is any proposal to give incentive bonus to these village officials depending upon the collections they make?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** வரிகள் பாக்கியிருப்பதை முன்னிட்டு இதுபோன்ற கமிஷன் கொடுக்கிற முறைகளைப் பரிட்சார்த்தகரமாக சென்னை அரசாங்கம் அமல் நடத்திக் கொண்டிருந்தது. 100-க்கு 2½ வீதம் கமிஷன் வழங்குகிற அந்த முறை பலன் அளிக்கத்தக்கதாக இருக்கிறது என்று கருதப்பட்டு, அந்த முறையை மேற்கொண்டு தொடர்ந்து கைக்கொள்ளலாமா என்பது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.



**திரு. வி. கே. கோதண்டராமன்:** வருஷத்திற்கு ஒரு முறை ஜமாபந்தி என்ற ஒரு நாடகம் நடக்கிறது. அந்த சமயத்தில் 15 நாட்களுக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு, கரும்பை காம்பு, என்றும் காம்பை கரும்பு என்றெல்லாம் எழுதுகிறார்கள். ஆகவே இதைச் செக் செய்ய ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், தாசில்தார்கள் நியமிக்கப்படுவது போதாது. திடீரென்று மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தக் கணக்குகளை எழுதும் முறையை செக் செய்யக் கூடிய அளவுக்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** இது உணவு அமைச்சர் அவர்களிடம் கேட்கவேண்டிய கேள்வி.

**திரு. முனு ஆதி :** இந்தப் பஞ்சாயத்து வரிகளை வசூலிக்கின்றார்களா, இல்லையா என்று மேலதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை. தாசில்தார் ஆர்.டி.ஓ-க்கள் தங்களுடைய ரெவின்யூ கணக்கைப் பற்றி அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்களே தவிர, பஞ்சாயத்து வரிகளை வசூல் செய்வது பற்றி அக்கறை கொள்வதில்லை. நடைமுறையில் இந்தக் குறைபாடு இருக்கிற காரணத்தினால், அமைச்சர் அவர்கள் 6 மாதங்களுக்கு ஒரு முறை இந்தப் பிரச்சினையைப் பற்றி தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆர்.டி.ஓ-க்களுக்கு உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** அங்கத்தினர் அவர்களுடைய கருத்து தவறானதாகும். ஜமாபந்தி நடக்கிற காலத்தில் பஞ்சாயத்துக் கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டு, சரியான முறையில் இருக்கிறதா என்று பார்த்த பிறகுதான் அதைச் சீர் செய்கிறார்கள். அதைவிட்டு விட்டு, வருவாய்த் துறை மட்டும் தான் அவர்கள் கவனத்திற்கு வருகிறது என்று கூறுவது சரியானதல்ல.

**திரு. கே. பி. எஸ். மணி :** கர்ணங்கள் பஞ்சாயத்து வரிகளில் அக்கறை காட்டாமல் இருக்கிறார்கள் என்று பல புகார்கள் சொல்லப்பட்டும், கலெக்டர், ஆர். டி. ஓக்கள் அது பற்றி எச்சரிக்கை செய்தும், அவர்களுடைய உத்தரவு அலட்சியம் செய்யப்பட்டு வருகிறது. ஆகையால், அப்படிப்பட்ட கர்ணங்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கலெக்டர்களுக்கு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், நிச்சயம் அதற்குரிய தண்டனையை வழங்குவதற்கு அரசாங்கம் தயங்காது.

DR H. V. HANDE : Is the Minister for Local Administration satisfied with the work of the Karnam and the Munsiff and, if he is not satisfied, what steps is he going to take to see that they collect all the revenues due to this Department?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** தற்போதைய நிலையில் அவர்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் சீரிய முறையிலே பணியாற்றி வருகிறார்கள். அதில் இருக்கக்கூடிய வரிவசூல் பற்றிய

குறைகளுக்குக் காரணம், வாகன வரி போன்றவைகள் சரியான முறையில் முதலில் நிர்ணயிக்கப்படாமல் இருப்பது தான் குறையாக இருக்கிறதே தவிர, கிராம உத்தியோகஸ்தர்களால் ஏற்படுகிற குறைகள் அல்ல என்பது அரசாங்கத்தின் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30-வது எண்ணுள்ள வினாவுக்கு நாளை விடை அளிக்கப்படும். ஆகவே, வினாக்கள்-விடைகள் இத்துடன் முடிவடைகின்றன.

[குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

## 2. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து, வரவு செலவு திட்டத்தின் மீது பொது விவாதம். இதற்கு 7 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரு நாள் அமைச்சர்களும் கட்சித் தலைவர்களும் பேசுவார்கள். மீதி 6 நாட்களில் 24 மணி நேரம் இருக்கிறது. 24 மணி நேரத்தில் ஏறத்தாழ 100 உறுப்பினர்களுக்கு மேலே, இன்னும் அதிகமாகவே, பேச விரும்புவார்களாதலால் உறுப்பினர்கள் ஆற்றுகிற உரைக்கு ஒரு காலவரம்பு நியமித்துக் கொள்ள வேண்டுமென்று நேரிடும்பொழுது, 100 பேர்களுக்கு 24 மணி நேரம் என்றால், ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஏறத்தாழ 15 நிமிடங்களுக்கு மேலே காலவரம்பு இருக்க முடியாது என்ற நிலைமை இருக்கிறது என்பதைக் கூறி, திரு. மார்டின் அவர்கள் முதலில் விவாதத்தை . . .

**திரு. செ. பாலசுப்பிரமணியன் :** ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர் கனம் சபாநாயகர் அவர்களே, தங்களிடம் ஒரு உரிமை மீறல் பிரச்சினை சம்பந்தமாக ஒரு பிரேரேபணையைக் கொடுத்திருக்கிறேன். தாங்கள் அது பற்றி இன்று தீர்ப்பு அளிப்பதாக வாக்களித்திருந்தீர்கள். அது என்ன ஆயிற்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த உரிமைப் பிரச்சினை மீது நாளை தீர்ப்பு அளிக்கிறேன். அது எனது கவனத்திலிருந்து விலகி விட்டது பற்றி வருந்துகிறேன். இப்போதுமு விவாதத்தை திரு. டி. மார்டின் அவர்கள் தொடங்கி வைப்பார்கள்.

*** திரு. டி. மார்டின் :** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழக அரசின் முதலாவது முறையான வரவு செலவு திட்டத்தின் மீது நடக்க இருக்கும் விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை இந்தப் பேரவையின் முன்பு வைக்க நான் எண்ணுகிறேன். கவர்னர் பெருமான் உரையின் மீது நடந்த விவாதத்தின்போது பழைய கள்ளையே புதிய மொந்தையில் கொடுத்திருக்கிறார்கள் என்று





எதிர்க்கட்சியில் உள்ளவர்களால் சொல்லப்பட்டபொழுது விவாதத்திற்கு பதில் அளிக்கும் முகத்தான் கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'வருகிற புது பட்ஜெட்டில் பாருங்கள், மருந்து தயாராக இருக்கும்' என்று கூறினார்கள். எனவே மிக ஆவலோடு இது சித்த முறையில் தயாரிக்கப்பட்ட மருந்தாக வருமோ, அல்லது ஹோமியோபதிக் மருந்து அதிலிருந்து கிடைக்குமோ, அல்லது அலோபதிக் முறையின்படி தயாரிக்கப்பட்ட மருந்து அதிலிருந்து வருமோ, அந்த மருந்தைச் சாப்பிட்டவுடன் பிணியை அகற்ற வல்ல மருந்தாக அது அமையுமோ என்று எதிர்பார்த்தோம். ஆனால், நடந்தது என்னவென்றால் சுமார் 2 மணி நேரமாக பட்ஜெட் உரையை வாசித்தபொழுது தனக்கு ஏற்பட்ட களைப்பையும், தொண்டை வறட்சியையும் போக்கிக்கொள்வதற்கு இடை இடையே முதல் அமைச்சர் அவர்கள் தண்ணீர் குடித்துக் கொண்டே அதை வாசித்து முடித்தார்கள். அவர்கள் வாசிக்கிற நேரத்தில் முதல் அமைச்சர் அவர்களுக்குக் களைப்பையும், சற்று நா வறட்சியையும் கொடுத்த பட்ஜெடாக இருந்ததே தவிர, மக்களுடைய வறுமையை போக்கக் கூடிய நிலையில், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தக் கூடிய நிலையில் இல்லாதபடி திருவிழா காலங்களில் வீதியில் விற்கக்கூடிய பச்சை நிறம், சிவப்பு நிறம் மலிவு சர்பத்தாக அது காட்சி அளித்தது. பரிகாரமான திட்டம் இந்த பட்ஜெட்டில் பெற முடியவில்லை. புதுமையான திட்டத்தை இந்த பட்ஜெட்டில் நாம் காணமுடியாது. மேலும் நம்முடைய முதல் அமைச்சர் . . .

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, கனம் முதல் அமைச்சர் அவர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டதை பணித்துறை வெளியீட்டிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதாவது, முதல் அமைச்சர் அவர்கள் தண்ணீர் குடித்துக்கொண்டே பேசினார்கள் என்றெல்லாம் எங்களுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை தயவு செய்து ப்ரொசீடிங்சிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை:** நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்கு மாறாக, நான் அதை நீக்குவது நல்லதல்ல என்று நினைக்கிறேன். ஏனென்றால், சில உறுப்பினர்கள் எதை எதை பேசுகிறார்கள் என்று நாட்டிற்குத் தெரிவது நல்லது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மார்டின் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், நமது விதிகளிலே எந்த ஒரு உறுப்பினரைப்பற்றியும் குறிப்பிட்டுப் பேசக் கூடாது என்று தெளிவாக விதி இருப்பதால் தனிப்பட்ட முறையில் மற்ற உறுப்பினர்களைக் குறிப்பிட்டுப் பேச வேண்டாம் என்று நான் பணிவோடும், அன்போடும் கேட்டுக்கொள்கிறேன். முதலில் இந்த விவாதத்தில்

உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். இந்த விவாதத்தில் முதல் உரை நிகழ்த்தும்பொழுது, பேச்சு கண்ணியமான முறையில்—நம்முடைய சட்டப் பேரவையின் விதிகளில் 'டிக்னிபைடு' ஆக இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. அந்த விதியின்படி, உயர்ந்த முறையில் விவாதத்தை நடத்தும்படி மீண்டும் ஒரு முறை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. மார்டின் :** நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் துறைக்கும் அமைச்சராக இருக்கிறார்கள். நாடு கடந்து வந்த கதியற்றவர்களுக்கு உதவியளிக்கும் திட்டத்திற்கும் அமைச்சராக இருக்கிறார்கள். ஆக, இப்படி பெரும் பொறுப்புக்களை வகிக்கின்றபோது, அவற்றைத் தாங்க அவர்களுக்குச் சக்தி இருக்கலாம், தகுதி இருந்தாலும்—இப்படிப் பல்வேறு இலாகாக்களையும் வைத்துக்கொண்டு, நிதி அமைச்சராகவும் இருப்பதால், தான் வகிக்கும் துறைகளுக்கு அதிகமாகப் பணத்தை வாரி வாரி கொடுத்துவிடுவார்கள் என்கின்ற எண்ணம், மற்ற இலாகாக்களைப் பட்டினி போட்டுவிடுவார்கள் என்கின்ற எண்ணம் பொதுவாக பாராளுமன்றம் இருக்கும் நாடுகளில் இருப்பதால் அந்த முறைக்கு மாறான நிலை இருக்க வேண்டும் என்ற ஒரு மரபு இருக்கிறது, என்பதை இந்தச் சபையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கருத்தினை முதல் அமைச்சர் அவர்களே 6-5-57-ல் குறிப்பிட்டிருக்கிறார்கள். பாராளுமன்றத்தில் நிதி அமைச்சராக இருப்பவர் செலவு ஆகும் இலாகாக்கள் எதையும் தம்மிடம் வைத்துக் கொள்ளாமல் இருப்பதுதான் ஜனநாயகப் பண்பாட்டுக்கு உகந்ததாக இருக்கும் என்று பல்வேறு நாடுகளில் வலியுறுத்தப்படுகின்றது. இந்த பட்ஜெட் விலைவாசிகளை ஏற்றிடும் பட்ஜட்டாக இருக்கிறது. இன்றைக்கு ஒரு கிலோ ரூ. 2.20 ஆக விற்ற புளி இன்று கிலோ ரூ. 3.20 ஆக இருக்கிறது ; ஒரு கிலோ 1.50 ஆக விற்ற மஞ்சள் இன்று ரூ. 2.20 ஆக விற்கிறது, ஒரு கிலோ ரூ. 1-80 ஆக விற்ற கடுகு இன்று ரூ. 2.20 ஆக விற்கிறது ; ஒரு கிலோ ரூ. 4.80 ஆக விற்ற சீரகம் இன்றைக்கு ரூ. 5·90 ஆக விற்கிறது, இரண்டு லிட்டர் துவாம்பருப்பு ரூ. 1.60 ஆக விற்றது இன்றைக்கு ரூ. 3.05 ஆக விற்கிறது, எண்ணெய்களின் விலைகளெல்லாம் ஏற்றமாகவேதான் இருக்கிறது. விளக்கெண்ணெய் விலையைத் தவிர மற்ற எல்லா எண்ணெய்களின் விலைகள் ஏறியிருக்கின்றன. இந்த நிலையில் எண்ணெய் வித்துக்களுக்குப் புதிதாக அதிகமான வரியைப் போடுவதால் விலை இன்னும் ஏறத்தான் செய்யும், விலை இறங்காது.

அடுத்து, பதனிடாத தோல் அண்டை மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு வருகிறது. இங்கே குறைந்த வரி விகிதம் இருந்ததால்தான் அப்படி வந்து கொண்டிருக்கிறது. இன்றைக்கு வரியைக் கூட்டுவதால், பதனிடாத தோல் வருவது கஷ்டமாகிவிடும். அதனால், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் ... கிக்கப் படும்.





மேலும், நிதி அமைச்சர் புது வரிகளின் மூலமாகத்தான் வருவாயை அதிகரிக்க வேண்டும் என்கிற பழங்காலக் கொள்கையை இன்னமும் கையாண்டு வருகிறார்கள். வரியை மட்டும் கொண்டு வருவாயை அதிகரித்திட முனைவதை மக்கள் பாராட்ட மாட்டார்கள், போற்ற மாட்டார்கள். அதே நேரத்திலே புது வரிகள் ஏதும் வந்திடாமல், வருவாயைப் பெருக்கும் திட்டத்தை கையாண்டால் அதை மக்கள் போற்றுவார்கள். அதற்காக இந்த மாமன்றத்திலே இன்றைய முதல் அமைச்சர் முன்பு சில தொழில்களை வருவாயைப் பெருக்க அரசாங்கம் கைக்கொள்ளவேண்டும் என்று எடுத்துரைத்தார்கள். அவற்றை உடனடியாக சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்றும் எடுத்துக் குறிப்பிட்டார்கள். அவ்வாறு அவர்கள் குறிப்பிட்டவற்றில் பேப்பர் ஃபாக்டரி ஒன்று இங்கே பத்திரிகைகள் ஏராளமாக நடை பெருகின்றன. ஆகவே, இங்கே ஒரு காகித உற்பத்திசாலையை அமைப்பதன் மூலம் வருவாயைப் பெருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அடுத்து சிமெண்ட் பாக்டரி. சாத்தான்குளம், பள்ளம்பாறை போன்ற பகுதிகளில் சுண்ணாம்புக் கற்கள் கிடைக்கின்றன. அந்த இடத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை அமைப்பதன் மூலம் வருவாயைப் பெருத்த முடியும். இவைகளைப் பற்றி, இந்த பட்ஜெட்டில் எந்தத் திட்டங்களையும் நாம் காணவில்லை.

இறைச்சியை எடுத்துக் கொண்டால், ரூ. 3.50-க்கு விற்றுக் கொண்டு இருந்தது, இன்றைக்கு ஒரு கிலோ ரூ. 6 என்றிருக்கிறது. நம் மாநிலத்தில் தரிசு நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கே அதிகப்படியாக புல் வளர்த்து ஆடு மாடுகளையும் வளர்த்து, அரசாங்கமே கசாப்புக்கடைகளை ஏற்று நடத்தலாம். அதோடு நாம் டின்களில் அடைத்து, பதனிட்டு, வெளி நாடுகளுக்கும் இறைச்சியை அனுப்பலாம். ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கிலாந்துக்கு இறைச்சி அனுப்பப்படுவதுபோல நாமும் வெளிநாடுகளுக்கு அனுப்பி அன்னியச் செலாவணியைப் பெருக்கிக் கொள்ளலாம். அதற்கான திட்டங்கள் ஒன்றும் இந்த பட்ஜட்டில் காணப் படவில்லை.

நமக்கு நீண்ட நெடும் கடற் கடற்கரை இருந்தும், அதை நாம் இன்னும் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை நீண்ட நெடும் கடலோரப் பகுதியில் உள்ள, பெரியதாழை, மணப்பாடு, உவரி, ஆலந்தலை, கூத்தங்குளி போன்ற இடங்களில் அன்னியச் செலாவணியை அதிகமாகக் கொடுக்கும் இரா என்ற மீன் வகை அதிகமாகக் கிடைக்கிறது. அந்த மீன்களை கொச்சியிலிருந்து வியாபாரிகள் கார்களில் வந்து வாங்கிச் செல்லுகின்றனர். அவற்றைப் பதன்படுத்தும் வசதி இல்லாததால் மீனவர்கள் குறைந்த விலையில் அவற்றை விற்று விடுகிறார்கள். அங்கேயெல்லாம் குளிர்ப் பதன சாதனங்கள் அமைத்துக் கொடுத்தால், நலமாக இருக்கும். இவை டாலர் கொடுக்கும் ஃபிஷ்கள். இவற்றைப் பதனிட்டு குளிர்ந்த சாதனத்தில் வைத்து விற்றால்

அதிகப்படியாக விலை கிடைக்கும். அதன் மூலம் வருவாய் அதிகமாக கிடைக்குமாதலால் வரிகள் போடாமல் இருக்க சாதகமாக இருக்கும்.

முன்பு முதல் அமைச்சர், இந்தப் பேரவையில் காங்கிரஸ் சர்க்கார் சினிமாவை தேசீயமயமாக்கினால், நாங்கள் எவ்வளவு கதைகள் வேண்டுமானாலும் எழுதிக் கொடுப்பதாகவும், நடிக்கவும் வருவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் எந்த விதமான கதையோ வசனமோ, நடிப்போ, காணப்படவில்லை. சினிமாவை தேசீயமயமாக்குவதைப் பற்றியும் ஒன்றையும் காணவில்லை. அப்படிச் செய்திருந்தால் வரிகளை உயர்த்தாமல் இருந்திருக்கலாம்.

இன்றைக்கு கோழி முட்டை ஒன்று 22 பைசாவிலிருந்து 28 பைசா வரை விற்கிறது. முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக குறிப்பிடப்பட்ட கோழித் திட்டத்தை இந்த வரவு செலவுத் திட்டத்தில் காணவில்லை. அவர்கள் குறிப்பிட்டார்கள், ஒரு கோடி கோழி வாங்கினால், அவை கோழிக்கு ஒரு முட்டை வீதம் தினம் ஒரு கோடி முட்டைகளைக் கொடுக்கும். அவற்றை விற்று 25 பைசா வீதம் 25 லட்சம் வருவாய் சர்க்காருக்கு வரும் என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்வதற்கான திட்டத்தைக் காணவில்லை. ஆகவே, அப்படி புதுப்புதுத் தொழில்களை உண்டாக்கி வருவாயைப் பெருக்கும் திட்டங்களை இந்த பட்ஜெட்டில் நாம் காணவில்லை.

முந்திரி தொழிற்சாலையைப்பற்றிக் குறிப்பிடும்போது, முதல் அமைச்சருக்கே நன்கு தெரிந்த ஆத்தூர் பகுதியில் அதிகமாகப் பயிரிடலாம். நான் முந்திரி என்று குறிப்பிடும் போது, முந்திரிப் பழத்தைக் குறிப்பிடவில்லை. அதிலிருந்து எடுக்கக்கூடிய உப பொருள்களைப்பற்றித்தான் குறிப்பிடுகிறேன். ப்ளாஸ்டிக் போன்ற பொருள்களை அதிலிருந்து உற்பத்தி செய்யலாம். ஆகவே, ஆத்தூரில் அதற்கான தொழிற்சாலையை நிறுவலாம். சாத்தான்குளம், திருச்செந்தூர் பகுதிகளில் முந்திரி அதிகமாகக் கிடைக்கிறது. இந்தத் திட்டங்கள் பற்றியெல்லாம் முன்பு குறிப்பிட்டிருந்தார்கள். இவையெல்லாம் நல்லத் திட்டங்கள் என்று நான் கருதுகிறேன். இந்த திட்டங்களெல்லாம் வரும் என்றும் எதிர்பார்க்கிறேன். கடலோரப் பகுதியான விளவங்கோடு முதலிய இடங்களில் கடல் அரிப்பினால் சேதம் ஏற்பட்டது. அந்தச் சமயம் பொதுப்பணித் துறை அமைச்சர் பம்பாயில் இருந்தார்கள். அவர் ஓடோடி வந்து கடலோரப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்க ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்த்த மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் நிலையில், கிழக்குக் கடற்கரையில் முழுவதும் அப்படிப்பட்ட தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டுவது அவசியம். இந்தச் சந்தர்ப்பத்தில் முன்பு இன்று உணவு அமைச்சராக இருக்கும் திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். லாலா கடையில்



மைசூர் பாகு வைப்பது போல 'அட் லீஸ்ட்' செங்கற்களையாவது, ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைத்து, கடல் அரிப்பைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இன்றைக்கு தமிழகத்தில் கரும்பு பயிரிடுவது சமூக விரோதச் செயல் என்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்கள். கரும்பு பயிரிடுவதில் என்ன குற்றம்? ஆனால் அதை விளைவிப்பதால், உணவுப் பொருளின் உற்பத்தி குறைவுபடும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் இருபது லட்ச ரூபாய் கரும்பாலைகளுக்கென்று பங்கு மூலதனத்திற்கு உதவித் தொகையாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே கரும்பு இதுவரைக்கும் தலைகாட்டவில்லை. ஆனால், இன்று பச்சையாறு என்ற கரும்பாலை ஒன்று வருகிறது, அதனால் கரும்பு பயிரிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக, ஏற்கனவே பற்றாக்குறையாக இருக்கும் திருநெல்வேலி மாவட்டம் இனி உணவு உற்பத்தியில் மேலும் பற்றாக்குறை ஆகுமல்லவா? செங்கற்பட்டு மாவட்டத்தில் எங்காவது கரும்பு பயிர் செய்தால், அதற்குத் தண்ணீர் கொடுக்கும் திறவுகோல் என்னிடம் இருக்கிறது, அதை நான் பார்த்துக் கொள்ளுவேன் என்று சொல்லிய அமைச்சர் அவர்கள், நெல்லை மாவட்டத்திலும் அந்த விதமாகக் கரும்பு யாராவது பயிர் செய்தால் அதையும் தடுப்பேன் என்று கூறுவார்களா?

அடுத்து, இன்றுள்ள கொள்முதல் கொடுமையைப்பற்றிக் கூற வேண்டியவனாக இருக்கிறேன். சாயல்புரம் பகுதியில் விவசாயியைக் கட்டி வைத்து அடித்துக் கொள்முதல் செய்திருக்கிறார்கள். கொள்முதலைத் தீவிரமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லுபவன் நான்; கொள்முதலின் தீவிரத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லுபவன் அல்ல. ஆனால், அதே நேரத்தில், கொள்முதலைச் செய்கின்றபோது விவசாயிகளை இவ்வளவு துன்புறுத்த வேண்டுமா என்று நான் கேட்கின்றேன்.

புத்தன்தருவை பஞ்சாயத்தில் கபீர் என்பவர், தான் அளக்க வேண்டிய நெல்லை ஏற்கனவே அளந்து விட்டார். அளந்த பிறகும், திரும்பவும் தாசில்தார் வந்து, அவருடைய நெல்லை எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறார். அவ்வாறு சென்ற பிறகு, திரு. கபீர் என்பவர் எழுதியிருக்கிறார். முதலில் எடுத்தது கொள்முதல், இரண்டாவது எடுத்தது கொள்ளையா? என்று கேட்டு சர்க்காருக்கு எழுதியிருக்கிறார். அதற்கு இன்னும் அவர்கள் பதில் சொல்லாதிருக்கிறார்கள்.

இன்று எங்கு பார்த்தாலும் கழகத் தோழர்களும், முன்னணி வீரர்களும் கொள்முதலுக்காக உத்தியோகஸ்தர்களுடன் செல்லுகிறார்கள். அந்த முறை நல்லதல்ல என்று நான் சொல்லிக்

கொள்ளுகிறேன். அந்த முறை நீடித்தால், அது சிறுவில் நடைபெறும் செங்காவல் படையினர் முறையாக மாறிவிடும் என்று நான் அரசுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும், இன்றைய வரி விதிப்பைப் பார்க்கின்றபோது, ஏழை மக்களின் மீது இந்த வரிச் சுமை விழாது என்று கூற முடியாது. உணவுப் பண்டங்களை ஏழைகள் உபயோகிக்கிறார்கள்; என்னைப் போன்ற உணவுப் பண்டங்களை ஏழைகளும் உபயோகிக்கிறார்கள்; பணக்காரர்களும் உபயோகிக்கிறார்கள், ஏழை மக்களின்மீது வரிச் சுமையை அதிகப்படுத்துகின்ற இந்த பட்ஜெட் மக்களுக்கு நன்மை தரக்கூடியதல்ல என்று நான் கூறிக்கொண்டு, என்னுடைய சிற்றுரையை முடிக்கின்றேன்.

* திரு. இராம. அரங்கண்ணல் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநிலம் எவ்வளவு ஆசைகளை இவ்வளவு காலம் தேக்கி வைத்துக் கொண்டிருந்ததோ அந்த ஆசைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கு ஒரு எடுத்துக் காட்டுபோல்----இன்றைய அரசினுடைய நிதி நிலை அறிக்கை அமைந்திருப்பது கண்டு தமிழ் நாட்டு மக்கள் அத்தனை பேரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. நம்முடைய தமிழக அரசு—திராவிட முன்னேற்றக் கழக அரசு—ஏற்பட்டு, கிட்டத்தட்ட நூறு நாட்கள் கூடப் பூர்த்தியாகவில்லை. இந்த நூறு நாட்களுக்குள், கடந்த இருபது ஆண்டுக் காலமாக என்னென்ன எண்ணங்கள் மக்கள் மன்றத்திலே இருந்தனவோ, அதிகாரத்தைப்பற்றி என்னென்ன கருத்துக்கள் மக்கள் மன்றத்திலே இருந்தனவோ, 'சர்க்கார்' என்று சொன்னால் என்னென்ன பீதிகள் மக்கள் மன்றத்திலே இருந்தனவோ அவைகள் அத்தனையும் ஓரளவு போக்கடிக்கப்பட்டு, அரசு, நம்முடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களுக்காக இருக்கின்ற அரசு, மக்களுடைய சுக துக்கங்களை மதிக்கின்ற அரசு, என்கிற உணர்வைக் கடந்த மூன்று மாதங்களுக்குள்ளே ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நாம் அத்தனை பேரும் கண்டு மகிழவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அந்தச் சூழ்நிலையில் இன்றையதினம் இருக்கின்ற அரசு தங்களிடத்தில் இருக்கும் வருமான இனங்களையும், செலவினங்களையும் மனத்திலே வைத்து ஒரு அருமையான நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தினுடைய வருவாயை எடுத்துப் பார்த்தால்—நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும்—வருமானம் வருவதற்குரிய வழிகள் நமக்குக் குறைந்தே இருக்கின்றன. அப்படிக் குறைந்திருக்கின்ற காரணத்தினாலே தான், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டும், அவற்றை அடுத்து நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்கிற நிலையில், ஏராளமான கடனுக்கு நம்முடைய மாநிலம் ஆளாகியிருக்கிறது.



1950-ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாய்தான் நம்முடைய மாநில அரசு கடன் கொடுக்க வேண்டியதாக இருந்தது. ஆனால், இன்றைய தினம் 300 கோடி ரூபாய்க்கு நம்முடைய மாநிலம் கடன்பட்டிருக்கிறது என்பதை நாம் யாரும் மறந்துவிட முடியாது. இந்த 300 கோடி ரூபாய் கடன் எப்படி வந்தது? யார் யார் கடன்காரர்களாக ஆகியிருக்கிறார்கள்? இதனுடைய விளக்கங்களுக்குள் நான் செல்ல விரும்பவில்லை. 300 கோடி ரூபாய்க்கு நம்மைக் கடன்காரர்களாக ஆக்கியிருப்பது மட்டுமல்ல; அந்த 300 கோடி ரூபாய்க்கு வட்டி மட்டும் ஆண்டொன்றுக்கு 14 கோடி ரூபாய். யாருக்கு? நமக்கு மேலாக இருக்கின்ற மத்திய அரசுக்கு. இந்திய அரசியலமைப்பின்படி நாம் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டிருக்கிற, மேலே இருக்கின்ற அரசுக்கு ஆண்டுதோறும் 14 கோடி ரூபாய் வரை வட்டி கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இவைகளை நாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலேதான், நம்முடைய சிந்தனையாளர்—முதல்வர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். கடன் வாங்குகிற பொறுப்புக்கள் எப்படி, அந்தக் கடனைத் திருப்பிக் கொடுப்பதிலே என்ன முறையை நாம் கடைப்பிடிக்கவேண்டும்; வட்டி கொடுப்பது எப்படி இருக்கவேண்டும் என்கிற முறைகளைப்பற்றியெல்லாம் ஆராய்வதற்கு ஒரு 'வல்லுனர்க் குழு' அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை நம்முடைய முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நாம் பணம் கடன் வாங்குகிறோம். ஆனால், அந்தக் கடனை வசூலிப்பதில் மேலே உள்ள மத்திய சர்க்கார் எவ்வளவு கெடுபிடியாக நடந்துகொள்ளுகிறது என்று அறிஞர்கள் பலர், பல தடவை குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறார்கள். ஆகையால், அப்படி ஒரு வல்லுனர்க் குழு ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை நான் வரவேற்கிறேன்.

எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் காரமான வார்த்தைகளை அந்த இடத்திலிருந்து பேசினார்கள். பல கண்டனங்களை அள்ளித் தெளிப்பார்கள் என்று நான் அவரிடமிருந்து முதலில் எதிர்பார்த்தேன். ஆனால்—அவர்கள், நம்முடைய முதல்வர் அவர்கள்—இந்த மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் குறிப்பிட்ட பல யோசனைகளைச் சொல்லி, 'அது இல்லையே', 'இது இல்லையே', 'அவைகளெல்லாம் எங்கே?' என்று கேட்டார்கள். அவைகளெல்லாம் எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே இருக்கின்றன. காலமும் நிதி வசதியும் இடம் கொடுக்குமானால் அவைகளையெல்லாம் நாங்கள் நிறைவேற்றாமல் செல்ல மாட்டோம். அவைகள் எங்களுடைய தேர்தல் அறிக்கையில் இருக்கின்றன என்பதை மட்டும் இங்கே குறிப்பிடுவதற்கு ஆசைப்படுகிறேன்.

நிதி நிலைமையும் மத்திய அரசின் உறவும் இந்தக் கட்டத்தில் இருக்கின்ற நிலையில், நம்முடைய மாநில அரசானது மக்களுடைய நன்மைக்கான வழிகளில் ஏராளமான பணத்தைச் செலவிட

வேண்டியதாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். நீர்ப்பாசனத்திற்கு நாம் செலவிடுகிறோம். நீர்ப்பாசனத்திற்கு என்று பெரிய அணைக்கட்டு, சிறு அணைக்கட்டு என்று 100 கோடி, அல்லது 50 கோடி, அல்லது 25 கோடி ரூபாய் என்று ஒரு தொகை ஒதுக்குகிறோம். அந்தத் திட்டங்களிலிருந்து திரும்ப வருகின்ற தொகை எவ்வளவு என்று பார்த்தால், திரும்ப வருகின்ற தொகை நமக்கு எதும் இருக்காது; மக்களுக்கு நன்மை செய்கின்ற ஒரு காரியமாகத்தான் முடியும். அதேபோல், ஆண்டொன்றுக்கு 54 கோடி ரூபாய் கல்விக்காக நாம் செலவழிக்கிறோம். இந்த 54 கோடி ரூபாயை நாம் முதல் போட்டுவிட்டு, அந்தத் தொகையை முதலாகப் போட்டதிலிருந்து எவ்வளவு வருமானம் வரும் என்று நாம் எண்ணுவதற்கு முடியாது. ஏனென்றால், இது மக்களுடைய நன்மைக்காகச் செலவழிக்கின்ற தொகையாகும். இப்படி மக்களுடைய நன்மைக்காக நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் போன்ற பல துறைகளிலே நாம் ஏராளமாகச் செலவு செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய அரசு செலவிடுகிற தொகையைக் குறித்து அவர்கள் வருமானத்தை எதிர்பார்க்கின்ற நிலை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் ஏராளமான வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மத்திய அரசாங்கம் வைத்திருக்கிற ஆலைகள் நமது மாநிலத்தில் இருக்கின்றன. பெரம்பூர் கோச் பாக்டரி இருக்கிறது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது, திருச்சியிலே பாய்லர் ப்ளாண்ட் இருக்கிறது. இந்த மூன்றும் மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்களாகும். மத்திய அரசு இவைகளிலே போட்டிருக்கிற முதலுக்குக் கிட்டத்தட்ட ஆண்டொன்றுக்கு ஏராளமான வருமானம் (ரிடர்ன்) வருவதற்கான வழிகள் இருக்கின்றன. ஆனால், நம்முடைய மாநில அரசு ஆரம்பிக்கின்ற சிறு சிறு திட்டங்கள், சிறு சிறு தொழில்கள் இவைகளிலிருந்து 'ரிடர்ன்' வர வாய்ப்பு இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. மத்திய அரசு இந்த மாநிலத்தில் ஓரிடத்தில் ஒரு ஆலையை அமைக்கவேண்டும் என்றால், அதற்கான இடத்தைப் பெற்றுத் தருவது மாநில அரசு; அதற்கான எல்லா முயற்சிகளையும் செய்து தருவது மாநில அரசு. ஆனால், அவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய லாபம், அவைகளிலிருந்து கிடைக்கக்கூடிய பணம் ஏதாவது மாநில அரசுக்கு வருமா என்று பார்த்தால், வரக்கூடிய நிலை இல்லை. ஆனால், மத்திய அரசு 700 கோடி ரூபாய்க்குமேல் ஆண்டுதோறும் இரயில்வே பட்ஜெட் போடக்கூடிய அளவிற்கு அவர்களுடைய வருவாய் வளர்ந்திருக்கிறது. அந்த 700 கோடி ரூபாயில், நம்முடைய மாநிலத்திலுள்ள மக்கள் எவ்வளவு இரயில்வே கட்டணமாகச் செலுத்தியிருப்பார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தால், கிட்டத்தட்ட குறைந்தபட்சம் 30 கோடி ரூபாய் அல்லது 40 கோடி ரூபாய் செலுத்தியிருப்பார்கள். ஆனால், அதிலிருந்து நமக்கு என்ன பங்கு வருகிறது என்று பார்த்தால், ஒரு கோடி ரூபாய் கூட மாநில அரசுக்கு பங்கு வருவதில்லை. அதேபோல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்ப



ரேஷன் இருக்கிறது. ஆண்டொன்றுக்கு நம்முடைய மாநிலத்திலிருக்கும் மக்கள் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய்க்குமேல் இன்ஷ்யூர் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால், அந்த 60 கோடி ரூபாய்க்கு இன்ஷ்யூர் செய்கின்ற பணத்திலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு ஏதாவது வருமானம் வருகிறதா, ஏதாவது ஊதியம் கிடைக்கிறதா என்று பார்த்தால், எப்போதாவது ஹௌசிங் போர்டு கெஞ்சிக் கேட்டால்—ஏதோ ஒரு கோடி ரூபாய், மின்சார போர்டு கேட்டுக்கொண்டால் ஏதோ ஒரு அரைக் கோடி ரூபாய் என்று தருமம் கொடுக்கிற நிலைமையிலே அந்த இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் இருக்கிறதே தவிர, உதவி வழங்குகிற கட்டத்திலே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில், கடுமையான விதிமுறைகளையும், கடுமையான நிர்வாகச் சிக்கனத்தையும் ஏற்படுத்திக் கொண்டு நாம் இன்றையதினம் பணியாற்றிக்கொண்டு வருகிறோம்.

உலகம் பூராவுமே தமிழக அரசினுடைய நடவடிக்கைகளைப் பார்த்துப் பாராட்டுகின்ற கட்டம் இன்றையதினம் உருவாகியிருக்கிறது. 'அமைச்சர்கள்' என்று சொன்னாலே முன்பெல்லாம் என்னென்னவோ கருத்துக்கள் மக்களுடைய மனத்திலே இருந்து கொண்டிருந்தன. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் பதவியேற்ற பிறகு, இன்றையதினம் நாட்டிலே இருக்கும் மக்கள், நம்முடைய அண்ணன் ஒருவர் அமைச்சராக இருக்கிறார், நம்முடைய தம்பி ஒருவர் அமைச்சராக இருக்கிறார், நம்முடைய எண்ணங்களை எடுத்துச் சொல்லலாம், நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம் என்கிற ஒரு நல்ல நிலைமை உருவாகி இருக்கிறது. நம்முடைய அமைச்சர்கள் அத்தனை பேரும் தங்களுடைய சம்பளங்களைக் குறைத்துக்கொள்ளுவதற்கும் ஒப்புக்கொண்டார்கள். நம்முடைய சபாநாயகர் அவர்களும், மற்றவர்களும் தங்களுடைய சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள முன்வந்துள்ளார்கள். மேலும், நம்முடைய முதல்வர் அவர்கள் நிதி இலாகா பொறுப்பை ஏற்று, அதில் எந்த அளவிற்குச் சிக்கனத்தைக் கையாளலாம் என்பதைக் கண்டறிந்து வருகிறார். இந்தத் தமிழக அரசு செய்யும் காரியங்களை, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற எல்லா மாநிலங்களும் இன்றையதினம் போற்றிப் பாராட்டியிருக்கின்றன. நிர்வாகத்திலே பல்வேறு பிரிவுகளையும் ஆராய்ந்து, ஏராளமான பிரிவுகளிலே இருக்கின்ற பதவிகளை மாற்றியமைத்து, நல்ல முறையில் திட்டங்களையும், சிக்கனத்தையும் கடைப்பிடித்து வருகின்றோம். அதுமட்டுமின்றி, இந்த நிதிநிலை அறிக்கையில் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. விலைவாசி ஏறியிருக்கிறது என்று கனம் உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். விலைவாசி ஏறியிருப்பதற்கு யார் காரணம்? இன்றையதினம் பொறுப்பு ஏற்றிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகமா காரணம்? நமக்குச் சுதந்திரம் வந்ததும், காங்கிரஸ் இந்த நாட்டில் சுபிட்சத்தை உருவாக்கப் போகிறோம் என்று சொல்லி, எப்படி எப்படி உதவாக்கரை திட்டங்களையெல்லாம் தயாரித்து, நடவடிக்கைகள்

எடுத்து, நாட்டை கடன்கார நாடாகக் கொண்டு வந்தது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். இந்தச் சூழ்நிலையை உருவாக்கியது யார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். 1962-63-லிருந்து விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றதென்றால் அதற்கு என்ன காரணம்; மத்திய அரசு சரியான நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்பது ஒருபுறம் இருக்கட்டும், ஏராளமான திட்டங்களைப் போட்டார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் விவசாயத்தை வளப்படுத்த வேண்டுமென்பதற்காக 2,300 கோடி ரூபாய் திட்டம் போட்டார்கள். ஒழுங்காக விவசாயம் உருப்பெற்றதா என்று கணக்குக்கூடப் பார்க்கவில்லை. அடுத்து, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 4,800 கோடி ரூபாய் என்று போட்டார்கள். நாட்டிலே இருக்கின்ற கனரகத் தொழில்களை வளர்ப்பதற்காக 4,800 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டார்கள். நாட்டிலே இருக்கின்ற ஒரு சிலர் பணக்காரர்களாக ஆகவே, மத்திய அரசாங்கம் போட்ட திட்டம் பயன்பட்டது. இதனை மறைந்த நம் பண்டித நேரு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஒருசிலரை பணக்காரர்களாக ஆக்க ஏராளமான திட்டங்கள் போட ஆரம்பிக்கிறபோது விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. மத்திய அரசினுடைய பொருந்தாத போக்கினாலும், மத்திய அரசினுடைய நிர்வாகக் குறைவினாலும் இன்றையதினம் விலைவாசி ஏறி, அதனுடைய பலனை நாம் அனுபவித்துக் கொண்டு வருகிறோம். இதனை நம்முடைய நிதிநிலை அறிக்கையில் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். "புத்துயிரும் புது மெருகும் பெற்று மிளிரும் புதியதோர் பொருளாதார அமைப்புக்கு உணவுப்பொருள்களின் விலைவாசிக் குறைப்பே திறவுகோலாக அமையும் என்பது இவ்வரசின் அழுத்தமான கருத்தாகும்" என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைத்தால் அதன்மூலமாக எல்லாப் பொருள்களினுடைய விலைகளும் இறங்கிவிடும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கருத்தாகும். நான் இரண்டு மூன்று நாட்களுக்கு முன், அமெரிக்கப் பொருளாதார நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன். "எந்த நாட்டிலாவது விலைவாசி உயர்ந்தது என்றால், முதலில் உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்கும் முயற்சி எடுத்துக்கொண்டால், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தலாம்" என்ற கருத்து அந்த அமெரிக்க இதழில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசியல் வாதிகளின்—பொருளாதார நிபுணர்களின் கருத்து மட்டுமல்ல, நாட்டு மக்களுடைய மனநிலையும் அதுவே என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். உணவுப் பண்டத்தின் விலை குறையுமேயானால், மற்றப் பொருள்களின் விலை தானாகவே குறையத் தொடங்கிவிடும்.

அதனாலேயே, நம்முடைய அரசாங்கம் ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டே தீருவது என்று நடவடிக்கை எடுத்தது. அதைப்பற்றி விவாதத்தைத் துவக்கி வைத்த உறுப்பினர் ஒரு வார்த்தை பாராட்டிச் சொல்லக் கூடாதா? அந்த எண்ணம்—அந்தத் துணிவு



V211,31 N67
N67.2.23



ஏன் முன்பிருந்த அரசுக்கு ஏற்படவில்லை? மக்களுடைய பிரச்சினைகளைக் கண்டு அணுக வேண்டிய அரசாங்கம் பயந்து கொண்டிருந்தது. இன்றையதினம் இருக்கின்ற அரசாங்கம் அந்த எண்ணத்தை மாற்றுகின்ற வகையில்—மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையில்—ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்ற திட்டத்தைப் படிப்படியாக அமுலாக்கும் எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அரசினுடைய நடவடிக்கைகளினால் அங்காங்கு விலை குறைய ஆரம்பித்திருப்பதை நாம் பார்க்கிறோம். இதன் காரணமாக நம்முடைய கஜானாவுக்கு 5 கோடி ரூபாய்க்குமேல் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பையும் பொருட்படுத்தாமல் துணிவோடு நாம் இந்தச் செயலில் ஈடுபட்டு வருகின்றோம். நம்முடைய மக்களுக்கு—ஏழை மக்களுக்கு, பட்டாளிகளுக்கு, என்.ஜி.ஓ.-க்களுக்கு சகாயம் செய்ய வேண்டிய திட்டத்திற்குப் பண உதவி செய்யுங்கள் என்று நாம் மத்திய அரசைக் கேட்டால், அந்தக் கோரிக்கையை அவர்கள் நிராகரித்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை மத்திய அரசாங்கமே கேட்டறிந்து, நம்முடைய யோசனையை ஏற்று, அதற்கு வேண்டிய உதவிகளை அளிக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மாநிலத்திற்குத்தான் இப்படிச் செய்திருக்கிறார்களே தவிர, கோதுமை உணவு சாப்பிடும் மாநிலத்தின் அரசுகளுக்கு, அந்த மாநிலங்களுக்கு, 118 கோடி ரூபாய் கடனும் மானியமுமாக அளிக்க மத்திய அரசு தயாராக இருக்கிறது. கோதுமை சாப்பிடும் மக்களுக்கு 118 கோடி ரூபாய் கடனாகவும், மானியமாகவும் தருவது ஒரு நல்ல காரியம் என்று நாம் பாராட்டுகிறோம். ஆனால், அதேசமயத்தில் மத்திய அரசினர் கோதுமை உணவுகொள்ளும் மக்களுக்குச் செய்த உதவியை, இங்கே இருக்கின்ற—நம்முடைய மக்களுக்கு ஏன் செய்யக் கூடாது? இங்கே இருப்பது திராவிட முன்னேற்றக் கழக அரசு, மத்தியில் இருப்பது காங்கிரஸ் அரசு. மாநில அரசு வேறு கட்சியினதாக இருக்கிறதென்று மத்திய அரசு எண்ணிக்கொண்டால், இந்தத் திட்டம் நல்ல முறையில் வெற்றிகரமாக உருவாக்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் காங்கிரஸ் தலைவர்கள் மூலமாக மத்திய அரசை வற்புறுத்த வேண்டுமென்று இங்குள்ள காங்கிரஸ் நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

64997

நம்முடைய நண்பர் திரு. விநாயகம் அவர்கள் தலைவர்களைத் தானே என்கிறார். அவரை நான் தலைவர் வரிசையில் வைத்துத் தான் சொன்னேன்; மறுப்பதென்றால், அது அவர் விருப்பம். இந்த நிதிநிலை அறிக்கையில் நாம் புஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு அளித்திருக்கிறோம். "நஞ்சை நிலத்திற்கு வரி விலக்குத் தரக் கூடாதா? எங்களுடைய அரசாங்கம் தருவோம் என்று சொன்னதே" என்று இனிமேல் பேசுகின்ற உறுப்பினர்கள் பேசக் கூடும். நஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு அளிப்பது என்பதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதைப்பற்றி இதே மன்றத்தில் நம்முடைய முன்னாள் முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் அவர்கள்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 ஜூன் 19

'ஸ்டேட்மெண்ட் ஆன் லாண்ட் ரெவின்யூ" என்று ஒரு அறிக்கை வைத்தார்கள். அந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால் நன்கு தெரிய வரும். அந்தக் காரணத்தினலேதான் வரிவிலக்கு அளிப்பதைப்பற்றி ஆராய்வதற்கு ஒரு குழு போட வேண்டுமென்ற ஒரு கருத்து இருந்து வருகிறது.

அடுத்தபடியாக, 'எல்லாவற்றையும் தேசிய மயமாக்குவோம்' என்றெல்லாம் காங்கிரஸ் சொல்லிக் கொண்டிருந்த நேரம் ஒன்று இருந்தது. . எங்கும், எல்லாம் தேசியமயமாக்கப்பட்டனவா? என்று கேட்டால், பதில் காண்பது அரிது. கடந்த பத்தாண்டு களாக வலியுறுத்தப்பட்டு வந்த கருத்து என்னவெனில், தனி யாருக்குச் சொந்தமாக இருக்கின்ற மின்சார வினியோகத் துறை நிறுவனங்களை ஏன் அவர்கள்வசம் விட்டுவைத்திருக்கிறார்கள்? அப்போதிருந்த ஆளும் கட்சியினர் செய்த தவறினல் இன்றைய தினம் இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த நிறுவனங்களை அந்தக் கொள்கையை அமுலாக்க வேண்டுமென்று ஆசையோடு இன்றையதினம் அந்த துறைகளைத் தன்வசமாக்க திட்டமிட்டிருக்கிறது. அதன் மூலம் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று சொன்னலும் அதை எப்படி யாவது கொள்கைக்காக அமுலாக்க வேண்டுமென்று இந்த அரசு முன் வந்திருக்கிறது. திட்ட வேலைகளுக்காக முன்பு 75 கோடி ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருந்தது. ஆனல் இப்போது திட்ட வேலைகளுக்காக 85 கோடி சொச்சம் ஒதுக்கியிருக்கிறோம். ஒன்பது கோடிக்கும் அதிகமாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை 1965-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இதே மன்றத்தில் நம்முடைய முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலனர் அவர்கள் குறிப்பிட்டதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அவர் அப்போது 1967-ல் ஏராளமான நெல் நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தியாகி விடும், அப்போது அதை எப்படி மார்க்கெட் செய்வது என்பது தான் பிரச்னையாக இருக்கும். தமிழ் நாட்டில் தேவை போக மித மிஞ்சி இருக்கப்போகிற அந்த நெல்லை—எங்கெங்கு அனுப்பலாம் என்பதை இப்போதே கண்டறிந்து வைத்துக்கொள்ள ஓர் அதிகாரியைப் போடப்போவதாகச் சொன்னர்கள். ஓர் அதிகாரி யையும் போட்டார்கள். 1967-இல் அதிகப்படியாக இருக்கப் போகிற நெல்லை எங்கே கொண்டுபோய் விற்கலாம், பஞ்சாபில் விற்கலாமா, உத்தரப்பிரதேசத்தில் விற்கலாமா என்று பார்ப்பதற் காக ஓர் அதிகாரியையும் நியமித்தார்கள். அவர் கேரளத்திற்கு எந்த எந்த ரக அரிசியை அனுப்பினல் ஏற்றுக்கொள்வார்கள், மகாராஷ்டிரத்திற்கு எந்த ரக அரிசி அனுப்பப்படவேண்டும் என்ப தாக ஓர் அறிக்கையையும் கொடுத்தார்கள். 1967-இல் நான் நாம் நம்முடைய தேவையையே சமாளித்துக்கொள்ள தடுமாற வேண்டி யிருந்தது. இப்படி முன்பு இருந்த அரசாங்கம் அறிவிப்புச் செய்கிற அளவில் நின்றதே தவிர எதையும் துணிந்து செயலாற்ற வில்லை. அப்போது இருந்த அரசு மூன்ருவது ஐந்தாண்டுத்



1967 ஜூன் 19] [திரு. இராம. அரங்கண்ணல்]

திட்டத்தை துவக்கி நடத்தியபோது 53 லட்சம் டன்னக இருக்கும் உணவு உற்பத்தி 70 லட்சம் டன் அளவுக்கு உயரும் என்ற நம்பிக்கையைத்தான் தெரிவித்தார்கள். அந்த அளவுக்கு உற்பத்தி செய்வதற்கான வேலைகளை அவர்களால் உறுதியுடன் எடுத்துக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக 52 லட்சம் டன் அளவே தான் உற்பத்தி இருந்தது. பலவகையான நல்ல பல திட்டங்கள் அவர்கள் மனதில் இருந்தாலும், அந்தத் திட்டங்களை நடத்திக் கொடுக்கக்கூடிய அதிகாரிகள் அரசாங்கத்தில் இருந்தாலும், அந்தத் திட்டங்களைச் செய்து பார்ப்பதற்கான துணிச்சல் இல்லாமல் இருந்தார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் துணிச்சலாக நல்ல பல முடிவுகளை மேற்கொள்ள ஆரம்பித்து இருக் கிறது. நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களும், மாவட்டந்தோறும் சென்று விவசாயிகளை எல்லாம் மாநாடுகளின் மூலமாகக் கூட்டி, அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டு, நீர்ப்பாசனத் துறையை எப்படி அபிவிருத்தி செய்வது என்கிற முறையில் பல காரியங்களை ஆற்றி வருகிறார்கள். வருகின்ற ஆண்டு அதிக விளைச்சலை ஏற்படுத்துவதற்காக 17 லட்சம் ஏக்கராவில் முப்போகச் சாகுபடியை மேற்கொள்வது என்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு 5 லட்சம் ஏக்கராவில்தான் முப்போகச் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் இவ்வாண்டோ 17 லட்சம் ஏக்கராவில் முப்போகச் சாகுபடியைச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவிட்டது. மத்திய அரசு இதற்காக நம்மைப் பாராட்டி, நாம் கேட்காமலேயே பல உதவிகளைச் செய்ய முன்வரா விட்டாலும் நாம் கேட்கிற சிறு உதவிகளையாவது அளிக்க முன் வரலாம். பதினேழு லட்சம் ஏக்கராவில் நாம் முப்போகச் சாகுபடியைச் செய்வது என்ருல் நமக்கு எட்டு லட்சம் டன்னுக்கு மேல் உரவகைகள் தேவைப்படுகின்றன. இதைப் பெற்றுத் தர வேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. ஆனல் அவர்களோ நமக்கு 4 லட்சம் டன் தான ஒதுக்குவதாக இருக் கிறார்கள் இதையும் நாம் நன்ருக உணர்ந்துகொள்ள வேண்டும்.

மேலும் இந்த அரசு அமெரிக்காவின் உதவியைப் பெற்று "வேளாண்மை வளர்ச்சி அமைப்பு" என்பதாக ஒரு அமைப்பு ஏற்படுத்தி உற்பத்திப் பெருக்கத்திற்கு நல்ல முறையில் காரியம் ஆற்ற வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறது. அதுபோலவே, ரஷ்ய உதவியுடன் புதுக்கோட்டை பகுதியில் குடுமியான்மலை என்ற இடத்தில் 3,500 ஏக்கராப் பரப்புள்ள நிலத்தை நஞ்சை நிலமாகச் சாகுபடிக்குக் கொண்டுவர திட்டமிடப்பட்டிருக்கிறது. அதுபோலவே இந்திய-ஜெர்மன் கூட்டு முயற்சியாக நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு உற்பத்திச் சீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது.

அதுபோலவே தொழில் துறையிலும் அந்நிய உதவிகளைப் பெற்று பல காரியங்களைச் செய்ய இருக்கிறது. கல்வித்துறையை எடுத்துக் கொண்டாலும் 54 கோடிக்குத் திட்டமிட்டிருப்பதைப் பார்க்கலாம்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1967 ஜூன் 19

புதுமுக வகுப்பைப் பொறுத்த வரையில் 1,500 ரூபாய்க்குக் குறைவாக வருஷ வருமானமுள்ள ஏழைப் பெற்றோர்களின் குழந்தைக்கு —அவர்கள் பிராமணர்களாக இருந்தாலும் சரி, பிராமணரல்லாதாராக இருந்தாலும் சரி, சாதி பார்க்காது இலவசக் கல்வி அளிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமின்றி, சென்னையைப் பொறுத்த வரையில் நீண்ட நாள் கனவாக இருந்த குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண காவேரித் திட்டத்தை அமுலாக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது. கூவம் ஆற்றையும், பக்கிங்காம் கால்வாயையும் படகுகளில் போக்குவரத்துக்கு ஏற்றதாக அமைப்பதோடு, கடல்நீரைப் பாய்ச்சி அதன் நாற்றத்தைப் போக்க இந்த அரசு முன்வந்திருக்கிறது.

கடைசியாக தேசியமாக்கும் கொள்கையின் அடிப்படையில் 75 மைல்களுக்கு மேலாக ஓடுகிற பஸ்கள் அனைத்தையும் சர்க்காரே ஏற்று நடத்துவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பர்மிட் எந்த எந்தக் காலத்தோடு முடிவடைகிறதோ அந்த அந்தக் காலத்தில் அவை படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

அதுமட்டுமின்றி கலப்புத் திருமணம் செய்துகொள்கின்றவர்களுக்கு பொற்பதக்கம் வழங்கி ஊக்குவிக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது. இப்போதே அப்படித் திருமணம் செய்துகொண்டவர்கள் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளின் படிப்பை உத்தேசித்து யாருடைய சாதியைக் குறிப்பது, சலுகை பெற என்ற நிலை இருக்கிறது. ஆகவே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசக் கல்விச் சலுகையும், அவர்களுக்கு உத்தியோகச் சலுகையும் அளிப்பது என்ற முறையை இந்த அரசு வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேரணி அமைத்திடும் திட்டத்தைப்பற்றி நல்ல விளக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. யார் யாருக்கு நேரம் கிடைக்கிறதோ அவர்கள் ஒன்று சேர்ந்து பொதுக் காரியங்களில் ஈடுபட இது உதவியாக இருக்கும் என்பது கருத்தாகும். இந்தச் சேரணியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தான் இருப்பார்கள். இது செஞ்சேனையைப் போன்ற படையாகத்தான் அமையும் என்பதான கருத்து ஏற்படுகிறது. இத்தகைய பயம் ஏன் வரவேண்டும்? அந்தச் சேரணியில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கலாம். எல்லோருமே இருக்கலாம். அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து நாட்டின் நல்வாழ்வுக்காக, நல்வளத்திற்காக பாடுபடவேண்டுமென்ற கருத்தோடு இது அமைக்கப்பட்டிருக்கிறது. இதை நல்ல முறையில் வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

அதற்கடுத்தபடியாக வரி போட்டிருக்கிற முறைகளை எடுத்துப் பார்த்தாலும் திராவிட முன்னேற்றக் கழக அரசு உத்தமமான



1967 ஜூன் 19] [திரு. இராம. அரங்கண்ணல்]

அரசு என்பதை உணர முடியும். இதுவரை வரி என்று எடுத்துக் கொண்டால் தாங்கக் கூடியவர்கள் மீது போடுவது என்றில்லாமல் வரி பளுவைத் தாங்க முடியாதவர்கள் மீதும் திருப்பித் திருப்பிப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் இம்முறை வரி பளு தாங்கக் கூடியவர்கள் மீது சுமத்தப்படுகிறது. விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்களே என்று சொல்லலாம். எந்தெந்தப் பொருள்கள் மீது விற்பனை வரியை உயர்த்தி இருக்கிறார்கள்? ஆடம்பரப் பொருள்கள் மீது விற்பனை வரியை உயர்த்தினால் என்ன கேடு வந்துவிடும்? ரெப்ரிஜிரேட்டருக்கு வரி உயர்த்தினால் என்ன? எத்தனை பேர் ரெப்ரிஜிரேட்டர்கள் வைத்திருக்கிறார்கள்? கார்களுக்கு உயர்த்தினால் என்ன? கார் வாங்குகிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? மது சாக்குகளின் மீது வரி போட்டால் என்ன? நேற்றைய தினம் ஒருவர்கூடப் பேசிக்கொண்டிருந்தேன். அன்று அவர்கள் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு மது சாக்குகளின் மீது வரி போட்டிருக்கிறார்கள். இன்னும் அதிகமாகக் கூடப் போடவேண்டும். கறுப்பு மார்க்கெட்டில் அதைவிட பத்து மடங்கு அதிகமாகக் கொடுத்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். 'இப்படி வரி விதிப்பை எடுத்துக்கொண்டாலும் யார் யாருக்குத் தாங்கும் சக்தி இருக்கிறதோ அவர்கள் மீதே போடப்பட்டுள்ளது. அதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. இந்த அரசு அடக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட அரசு. தமிழக அரசு என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதை கண்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டு மக்களின் நன்மைக்காகவும், நல்வாழ்வுக்காகவும் பாடுபட இந்த அரசு முன்வந்திருக்கிறது. எல்லா மக்களுக்கும் அடிப்படைத் தேவையாக இருக்கிற உணவு, குறைந்தபட்ச வசதிகளைச் செய்து தர தயாராய் இருக்கிறது. அதன் முன்னோடிதான் இந்த நிதி நிலை அறிக்கை என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, I am extremely grateful for having been given an opportunity to speak a few words on the final budget for this year. The Chief Minister has tried his best to make a good job of what limited resources he has been given. முற்பகல் 10-30

At the outset I would like to point out that the resources available to the State fall mainly under four categories. They are Tax on Vehicles about Rs. 15 crores, Sales Tax about Rs. 54 crores, Other Taxes and Duties—these consist of Entertainment Tax, Electricity Tax and Urban Land Tax—about Rs. 14 odd crores, and Stamps about Rs. 10 crores. All these together come to less than Rs. 100 crores. With this limitation the Chief Minister has to prepare this budget. When we keep these points in mind, I am sure that much of our criticism will be very fair. The main items of tax are Sales Tax and Tax on Vehicles. The Chief Minister has done his best; he has managed to raise taxes under these heads reasonably. If this position is borne in mind, there will not be much confusion.

[Dr. H. V. Hande] [1967 ஜூன் 19

Income-tax is one of the biggest sources of income for this State. There has been a 'Statement on Resources' made by the previous Chief Minister in the Legislative Assembly on 3rd November 1965. I shall just read an extract from that statement **for** the information of the House.

"**The House will recall that the current year's Budget had** envisaged a revenue deficit of nearly Rs. 7 crores and subsequently we had to sanction a further increase in the rates of dearness allowance of public servants entailing an additional burden of **Rs. 2 crores in the current year and Rs. 3.4 crores in a full year. The** House will be glad to learn that the Finance **Commission** has made full allowance for this additional expenditure in its estimates in providing for devolution of resources to this State. The Finance Commission's recommendations in other respects too are generally fair. The share of the States in income-tax revenue has been raised from 66-2/3 per cent to 75 per cent and in the **allocation of this divisible pool among the States, the share** of Madras has been raised from 8.13 per cent to 9.34 per cent". The main problems that confronts us is that we are not getting enough amount of income-tax, as much income-tax as we would like to get. Hon. Members are aware that there was a lot of controversy as to the share of the income-tax that the State should get from the Centre. A city in Uttar Pradesh, Madras State or Mysore State will not be able to get so much income-tax because the headquarters of the companies which pay income-tax will be in Calcutta or Bombay. Most of the companies which are assessed to income-tax have their headquarters in other States. **If the revenue from income-tax is over Rs. 100 crores, Bombay** will get over Rs. 75 crores and Madras will get between Rs. 30 crores and Rs. 40 crores. I am not able to follow how exactly this 75 per cent of income-tax is distributed to the States. The present position is that the State is getting 75 per cent of the divisible pool as against the old position of 66-2/3 per cent. My submission is that the increase in the amount of income-tax that we receive has not been much. I shall read the figures. The budget estimate for 1966–67 is Rs. 10.88 crores, the revised estimate **for 1966–67 is Rs. 11.45 crores and the budget estimate (revised)** for 1967–68 is Rs. 11.96 crores. What is the present percentage of income-tax revenue that is obtained by this State is not clear. I was a little unhappy with the way in which the budget speech was prepared. I would like to make a suggestion and this suggestion can be incorporated only in the next budget speech. We could have in the budget speech itself the salient features and a couple of pages could be devoted to them. When we have the salient points, we will be able to come to a conclusion instead of having **to wade through a number of books. While the share of the States** has been raised from 66-2/3 per cent to 75 per cent, i.e., an **increase of 8-1/3 per cent, the share of Madras has gone up from 8.13 per cent to only 8.34 per cent. The increase in income-tax in the last two years has not been more than Rs. 1 crore. Whether**



1967 ஜூன் 19] [Dr. H. V. Hande]

**this source has been fully tapped is the point on which I would like the Hon. Chief Minister to deal with in his reply to the general discussion on the budget.**

The next point is about the non-gazetted Government Officers. When the present ruling party was in the Opposition, they promised that they would look into the grievances of the non-gazetted government officers and give them substantial relief. At that time, **we also joined with them in the demand. We should have made** an attempt to meet their demand. I am quite confident that the Chief Minister will sympathetically consider my demand. The main thing about which non-gezetted officers feel sore is that they **have not been given City Compensatory Allowance which is given** to the Central Government servants in 'A' class cities.

**I hope the Chief Minister will consider my proposal to incorporate** in this House the practice that has been in vogue in the Lok **Sabha. After presenting the budget, the Ministry gives some freedom to the members of the ruling party, they assess the temper** of the House, they feel the pulse and feelings of the Members and then show some concessions. In fact I had made this suggestion when the Congress Ministry was in power. The Members of the **Treasury Bench come with the pre-determined notion that they** should pass into law whatever has been incorporated in the Bill. If the practice that I have suggested is put into effect here, I am sure it will go a long way to ameliorate the sufferings of the people who are voicing their suffering through us. When we express the **grievances of the people, the Members on the Treasury Benches** can apply their mind to them. If any serious lacunae are pointed out by the Members the Ministers can look into and rectify them. In the Railway Budget some concessions have been given after knowing the temper of the House. The previous Finance Minister also made a number of concessions after hearing the views of the **Members. There is no room for party feelings in this matter.** The problems are the same, whether they be in the areas represented by the members of the party in power or by the members in the Opposition. Whether a Member represents Tiruttani or Park Town or any other constituency, the problems are common and the people represent the same difficulties whether **they represent them to the members of the ruling party or the** members in the Opposition. Though the acceptance of my suggestion will cause some inconvenience to the officers, it will confer a great benefit on the public.

I would like to touch upon a few points here and there. The most important point is about agriculture. We have taken upon ourselves the task of making available to the public, rice at one rupee a measure. It is a noble task, a task which is going to be of great help to a large number of poor people especially in the urban area. We have to take into consideration certain other aspects. Production of food is the most important thing that should be considered in this connection. I am explaining all these

[Dr. H. V. Hande] [1967 ஜூன் 19

things so that all aspects may be taken into consideration. I am not saying that the Ministry has not taken all these aspects into consideration. Any way it is my duty to bring these points to the notice of this House.

Now, the point that has to be properly considered is the effect that the supply of rice at Re. 1 per measure will have on the farmer and whether he will be given the same procurement price which he would have been normally getting before. Has there been any natural law of economics operating in this State? Supposing there is a natural law of economics operating in this State and what is the price the farmer would be getting now, is the point to be considered. Now, it has been stated that the supply of rice at Re. 1 per measure is an artificial measure. Nobody can dispute that this is an artificial measure, and this is a compulsory measure. This has not come about as a result of law and supply demand or on account of any law of economics operating. We have by force and by the statute compelled the farmer to give rice at a particular rate. What is the rate and how it should be fixed, is the point which we have to deal with. When the detailed individual demand comes up for discussion, I may have some ideas to give. But one thing I must point out. The enthusiasm of the farmer must not be dampened. Now what is the position with regard to food production? The Hon. Chief Minister has frankly stated—I must congratulate him for that—that the food production has not been stepped at all during the last three years. It is a rather a pathetic picture. Even when the last Ministry was in power, I had quoted extensively facts and figures to convince them that there has been practically no increase in food production during the Third Plan period. That is the point which we should honestly address ourselves to. Though the statistics may show that there is an increase in food production, really there is no increase in food production. I know definitely that the previous Ministry had very honestly admitted that the statistics had betrayed them and there was no increase in food production. Now, nobody, for that matter, no nationalist will say that he does not want an increase in food production. So, on account of the grave blunder committed by the previous Ministry in regard to food procurement, the farmer has been completely ruined. Especially the present ruling party must take into their heads to see that the same blunder is not repeated. I have always been saying—because things have not changed—that the officers concerned go and harass the farmers especially the poor farmers. Rich farmers know how to grease them or how to put oil in the right joint but the poor farmers are not in a position to do such things and consequently they are subjected to the inexorable torture of the officials. Some Ministers may be aware of it or some of them may not be aware of it. Also, when Ministers go on tour the officials collect a couple of farmers. When the Ministers ask them, whether they are being harassed, they say that they are not harassed. But really they are harassed and I do not want this state of affairs to be repeated during the tenture of the present Ministry.



1967 ஜூன் 19] [Dr. H. V. Hande]

Now, the most important thing that I want to stress is, that in whatever measure we take, there should not be any room for increased troubles to the people and we must consider whether the artificial reduction of the price would affect the farmer and what would be the ultimate result after five or ten years. If we continue to give troubles to the farmer, one day he will definitely get disillusioned and think of coming to cities. They may think that a taxi-driver's job is much better than that of a farmer who had to slog for a number of days both during morning and night. So if we create such an atmosphere and that sence of feeling, the frustrated people might migrate from the villages to the cities and we might be forced to stop them. This can be stopped only if we give proper incentive to the farmer. The supply of rice at Re. 1 per measure is a brilliant idea but while implementing it, we should see that no farmer is injured, in the sense that his phychology is not hurt. If that could be taken care of, then it is a glorious thing. The grant of subsidy is a good thing which is followed in other countries like England where free milk is given to women and children. There is nothing new in it and there is nothing wrong in it. But the point is that the milkman there is properly paid. Now, here in spite of the Five-Year Plans of Rs. 200 crores and the huge expenditure incurred on the agricultural programme of 40 to 50 crores we have not got the expected results. That is a thing which we should bear in mind before we think of increasing the number of facilities in a statutory way or increasing the number of places for implementing the one-rupee-a-measure scheme.

Now, Sir, with regard to Industries, I may stress a few points. Due to paucity of time, I will be very brief. I would like to point out very clearly that there has been no substantial growth in the industrial sector during the last five years. We have given the impression in this House as well as in the other House and also outside, that there has been a wonderful development of industries during the Third Plan period. I completely differ from that. The employment potential in the Madras State has increased by only 17 per cent though the Madras State is considered to be an advanced State. But what is the increased employment potential when we take the whole country including Madhya Pradesh, Assam and Himachal Pradesh into consideration. The increased employment potential is to the extent of 27 per cent. But in the Madras State it is only 17 per cent, and the number of educated unemployed is on the increase. If we analyse all these things, we will know the amount of discontent that has crept into the masses especially the poor people. We should realise our limitations and also the fact that the Madras State has not advanced industrially much. Today the most important thing is the unemployment problem and we the hon. Members belonging to the different parts of the Madras City are very much seized of the problem. The people from our constituencies come and ask for jobs. From where are we to give them jobs? There is no job to give them. Unless our economy progress and the industries grow on a large scale, we cannot give employment to a large number

of people. Unless we give incentives to the industrialists, nothing can happen. What has happened during the last Five-Year Plan period? Only a few industrial estates were started. Have they given enough employment? No. Take the case of the Punjab A Punjabi manufactures safety pins in a small hut and he goes in a cycle and sells them. They are sold in the Moore Market at rockbottom prices. But here in the industrial estates, such articles are not manufactured at a cheap rate. But we can present to the world, a very beautiful picture about these industrial estates and tell the foreign dignitaries that we are advanced industrially. We can also show them the Industrial Estates at Guindy and Ambattur. I know what is done in these Estates. No work is done on a large scale there. It is only a show-piece or a show-window undertaken by the Publicity Department of the Government. What is the quantum of production there? Is it possible for them to compete with the Punjabis? The unemployment problem has been wiped out in the Punjab. But here the unemployment problem is serious and nothing has been done to tackle it. It will be very difficult for the M.L.A's to perform their duties as long as this unemployment problem among the educated continues. This point has to be understood in the proper perspective. We should not go on imagining that we are industrially advanced. The employment potential in Madras State has increased only by 17 per cent, whereas the All-India figure is 27 per cent. Who has got the right to come forward and say that we have advanced? I am not criticising anybody personally. We have been completely prevented from knowing the truth; we have been given imaginary facts and figures. I was very much pleased when I heard that the Leftist Communist Chief Minister of Kerala had started inviting to Kerala, capitalists from other States. I was happy about it and I congratulate him. What is it that he has attempted to do? He has attempted to give more employment to persons in his State. We can incorporate this wonderful idea here also. We can invite industrialists and help them to start industries. If that is done, it will be a wonderful thing. During the last five years, all that happened was there were a few companies which put a few more branches. A few tubelights were put outside and were showing to all dignitaries. Nothing else has happened in this State during the last five years. We should stop obstructing industrialists; we need not give them finance. When we give them loans, there is a tendency to waste the money and the money goes down the drain. What happened to the Aluminium Company started near Mettur? The Company sent to all Members first class fare to visit their works. I did not at all appreciate it. In fact I asked the previous Minister for Industries whether a private owner would have done it if his own money had been invested in it. The Governmnet have taken some shares in it and the Secretary to Government, Industries Department is a Member of the Board statutorily.

I will take ten more minutes, refer to two points and conclude my speech.



The problem of the Salem Steel Plant has not at all been viewed from the correct perspective. That is my humble submission. There is no question of any tussle between the Centre and the State; there is no question of who establishes the Salem Steel Plant. There is the Kanjamalai iron ore with 35 to 60 per cent iron content. This iron ore could be converted and made to earn foreign exchange. But the problem has been confused by clubbing this steel plant with the other steel plants. There is a completely different picture with regard to the Salem Steel Plant. Salem Steel Plant need not be a steel plant at all. We are making a big mistake about it. It can be started without foreign exchange. We have got persons in West Germany and Japan who are prepared to shoulder the burden, and the negotiations are all over. Even now we can start on a rudimentary basis a pig iron plant instead of a steel plant. We can start pelletisation. Pelletisation is nothing new; crude ore is taken and it is converted into pure ore. We can send this pure ore to Japan, England and West Germany and those countries are ready to buy it. The iron content of ore in England is less than 30 per cent. We can send the pellets to other countries with the co-operation of the Central Government. The Central Government need not at all consider this as a prestige issue. Just Rs. 1 crore will do to start the pig iron plant. If the Central Government is adamant and do not want to sanction a steel plant, let them at least give us a pig iron ore pelletising plant. Bokaro Steel Plant has been a waste. This view is shared by my leader Mr. M. R. Masani and has been expressed by him in the Parliament. Bokaro Steel Plant is a loss and a big waste. We can show by our frugal and cautious methods that Salem Steel Plant can be a success whose product could be utilised throughout the country and not only in the Madras State. We will earn foreign exchange by exporting pellets for two or three years and then start the steel plant. If co-operation is received from the Central Government, wonderful things can be done.

With regard to nationalisation of bus service, I would like to offer a few remarks. I would like to make out very clearly the stand of the Swatantra Party on this point. There are three methods of transport. One is competitive transport under which different parties compete. Government and private enterprise may compete or different private enterprises may compete. The second method is complete nationalisation and no other party is allowed in the field. The third method is to give permit to only one company to run the buses. This is what happened in the time of the last Ministry. Permits were given to certain persons to the exclusion of others and it automatically became a monopoly. Members of a particular party had the majority of the bus routes. I do not want to discuss whether it is right or wrong. I have incessantly attacking this monopoly in season and out of season, both inside and outside the legislature. The party had to keep the

Government in good humour to get what he wanted. We are one with the D.M.K. in our opposition to protected capitalism. Along with the D.M.K. we oppose tooth and nail this permit-licence-quota business. Whether bus service should be completely nationlised is the question. I was told the other day that the moment the Government said that they were going to compete, that very moment there was competition between the State and private enterprise and the fares began to fall. This is the crux on which the ideals of the Swatantra Party are built. We want competition between sector and sector and between agency and agency. If the element of competition is introduced in the transport system, the rates will fall. There has been loss in the Madras City transport, because there has been no competition. If the present Ministry brings about competition between Government Transport and any other transport, it will be a great boon to the passengers. There will be a steep fall in prices. One medical man knocks his head against another man in private practice. One is afraid that the other doctor will steel a march over him. Doctors in a Government hospital do not behave as private doctors behave. I must congratulate the Ministry of Transport for introducing bonus system for conductors. The bonus system is based on the principle of the Swatantra Party that if a man works harder he gets more money.

* **திரு. ப. மகாதேவன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்
மு பகல் 11-00 முன் வைத்த நிதி நிலை அறிக்கையின் பேரில் பேசுவதற்கு எனக்கும் வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி சொல்லிக்கொண்டு ஒன்றிரண்டு கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன்.

நான் சொல்லும்போது இந்த நிதி நிலை அறிக்கை அல்லது பட்ஜெட் மிகவும் குழப்படி பட்ஜெட் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. மிகவும் ஆர்வத்தோடு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு முதல்வர் அவர்கள் இந்த பட்ஜெட்டைக் கொண்டுவந்திருந்தாலும் மக்கள் மத்தியில் இது மிகவும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும். ஏனென்றால், இதை வரி போடாத பட்ஜெட் என்று சொல்ல முடியாது; வரிச் சலுகைகள் கொடுத்தும் இருக்கிறார்கள்; கொடுக்காமலும் இருக்கிறார்கள். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல மலருக்கு வலிக்காமல் தேனை எடுக்க முயற்சித்திருக்கிறார்கள். இது ஏதாவது பலன் அளித்திருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது.

உதாரணமாக பஸ்களை தேசீயமயமாக்குவதை, சமதர்மவாதிகள் சோஷலிசத்தை ஆதரிப்பது போல நாங்களும் அதை ஆதரிக்கிறோம். எதையும் படிப்படியாகச் செய்வோம் என்று சொல்லும் அரசினர் இதை ஒரேயடியாகச் செய்திருக்கலாம். இத்தனை மைல்களுக்கு மேல் என்று சொல்லாமல் முழுவதுமாக





என்று சொல்லியிருக்கலாம். 'படிப்படியாக' என்பது நமது முதல்வர் அவர்களுடைய வார்த்தை. அவர்கள் படிப்படியாகச் செய்யும் திட்டத்தை ஒரு படி அரிசித் திட்டத்திலும் செய்திருக்கிறார்கள். ஒரு படி அரிசித் திட்டத்தை காங்கிரஸ்காரர்களும் வரவேற்கிறோம். நான் இங்கே முன்பே ஒரு முறை [illegible]. 'நீங்கள் கொடுத்தால், நாங்களும் [illegible] என்று. முதல்வர் அவர்கள் ஒரு படி அரிசி பற்றி அறி[illegible] என்னை நிருபர்கள் கேட்டபோது நான் அதை வரவேற்றிருக்கிறேன். மாவட்டங்களைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் கொடுக்கப்படாமல், எந்த மாவட்டத்திற்குக் கொடுத்திருக்க வேண்டுமோ அங்கு கொடுக்கவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் மில்கள் கிடையாது. ஒரே ஒரு கூட்டுறவு மில்லைத் தவிர வேறு மில்கள் கிடையாது. அதிக அளவுக்கு வேலை கொடுக்கும் நிலச்சுவான்தார்கள் இல்லை. அங்கே தொழிற்கூடங்கள் இல்லை. வேலைக்குச் சென்றாலும் கிடைப்பது கஷ்டம். அப்படியே கிடைத்தாலும் 1¼ ரூபாய், 1½ ரூபாய்க்கு மேல் கிடைக்காது. சென்னையில் பழைய, பட்டாணிக்கடலை விற்றாலும் 2 ரூபாய், 2½ ரூபாய் கிடைத்துவிடுகிறது. வேறு வீதியிலே ஏதாவது கடைகள் முதலியவை வைத்தால் நாள் ஒன்றுக்கு 10 ரூபாய் கிடைத்துவிடுகிறது. இப்படி தொழில் வாய்ப்புகள் இருக்கும் இந்த சென்னை நகரத்திலே கொடுத்திருக்கிறார்கள். கோயம்புத்தூரிலே கொடுத்திருக்கிறார்கள். நாம் சரித்திரத்தில் காணாத நிகழ்ச்சி என்று உறுப்பினர் ஜோம்ஸ் சொன்னது போல, 85 கிலோ கொண்ட ஒரு கோட்டை நெல் எங்கள் பகுதியில் 90 ரூபாயாக ஆகியிருக்கிறது. டெவலப்மெண்ட் கவுன்சிலில் 'எங்கள் அறிவுக்கு எட்டிய வரையில் அந்தமாதிரி வந்ததில்லை' என்று சொன்னார்கள். எங்கள் அறிவுக்கு என்ன, பாட்டன், முப்பாட்டன் அறிவுக்கு எட்டிய வரையில் அந்தமாதிரி வந்ததில்லை. 100 ரூபாய் அளவை எட்டிவிடும் என்று நான் நினைக்கிறேன். அந்த சோக நிகழ்ச்சி நிகழத்தான் போகிறது. விளவங்கோடு தாலுகா கன்னியாகுமரி மாவட்டத்தில் நாலில் ஒரு தாலுகாவாக இருக்கிறது. அங்கு ஃப்ரீ டிரான்ஸ்போர்ட் கிடையாது. எந்தத் தாலுகாவிலிருந்தும் அரிசி அங்கு கொண்டுபோகக் கூடாது என்பது சட்டம். இந்த நிலையில் அங்கே முழு அளவு ரேஷன் கொடுத்திருக்கவேண்டும். வாங்கிச் சாப்பிட ஒரு படி அரிசி கொடுத்திருந்தால் பாராட்டலாம். இருந்தாலும் இந்த ஒரு படி அரிசித் திட்டத்தைப் பாராட்டத்தான் செய்கிறோம். ஒரு படி அரிசித் திட்டம் ஏழைகளுக்கு நல்ல திட்டம். இந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் கொண்டு வரவேண்டும். நமது முதல்வர் அவர்களே கூறிய தெனாலிராமன் கதை போல இல்லாமல், நன்மை பயக்கும் திட்டத்தைக் கொண்டு வரும்போது ஏற்படக்கூடிய பயன் எல்லோருக்கும் கிடைக்கும் முறையில் செய்யவேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பி.யூ.ஸி. கல்வியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு சலுகை கொடுத்திருக்கிறார்கள்—வரவேற்கிறேன். அதுவும் கொஞ்சம் செய்தும் செய்யாதது போலச் செய்திருக்கிறார்கள். ஏழை மாணவர்களுக்குச் சலுகை கொடுத்திருப்பது பாராட்டத் தக்கது. முன்னாள் முதலமைச்சர் காமராஜ் அவர்கள் சொன்னது போல, 'முன்னமேயே சிலருக்கு சலுகைகள் இருக்கின்றன; அதோடு எல்லோருக்கும் கொடுப்பது என்றால் 4 கோடி ரூபாய் செலவு ஆகிறது; கொடுப்பதை எல்லோருக்கும் கொடுத்து விடுவோம்' என்று கொடுத்திருக்கலாம். இல்லையென்றால், சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்தலில் நின்று வந்த பிறகு சட்டப் பிரகாரம் செலவுக் கணக்கைக் கொடுப்பதில் கள்ளக் கணக்கு கொடுப்பது போல, பெற்றோர்களுடைய வருமானத்தைச் சொல்லும்போது குறைத்துச் சொல்ல வேண்டி வருகிறது. நாணயம், நேர்மை நாட்டிலே அவசியம். நமது முதல்வர் அவர்களும், அமைச்சர்களும், அங்கத்தினர்களும் அந்தப் பண்பு நாட்டிலே அவசியம் வேண்டுமென்று விரும்புவார்கள். இப்போது உள்ள முறையில் இது போன்று பொய் சொல்லும் நிலைமை வரும். அந்த நிலைக்குச் சூழ்நிலையை உண்டாக்குகிறது. அதற்கு இன்னும் மூன்று கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தால், எல்லா மாணவர்களுக்கும் இலவசக் கல்வி கொடுத்திருக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிலவரி நீக்கம் புன்செய் நிலத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். புன்செய் நிலத்திற்குக் கொடுத்ததை நன்செய்க்குக் கொடுத்திருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. நன்செய் விவசாயிகள் கள்ளர்களாக, கறுப்புச் சந்தைக்காரர்களாக எண்ணப்படுகிறார்கள். விலையும் தகுந்த அளவுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏனென்றால், விலையை அவர்களுக்கு உயர்த்திக் கொடுத்தால், வாங்குகிறவர்களுக்கு விலை கூடிவிடுகிறது. ஆனால், அவர்களுக்கு வேறு சலுகைகள் செய்யவேண்டும், உரங்கள் கொடுக்கவேண்டும், பொறுக்கு விதைகள் கொடுக்கவேண்டும், நிலவரியை எடுத்துவிட வேண்டும் என்று முன்னே இருந்தவர்கள் எண்ணினார்கள். புன்செய்ப் பயிர்களான மஞ்சள், கரும்பு போன்ற பயிர்கள் காய்கறிகள்—அவர்களுக்கு நல்ல செழிப்பு. அவர்களுக்குக் குறைக்க வேண்டாமென்று சொல்லவில்லை. அதோடு நாட்டு மக்களை வாழ வைக்கவேண்டும் என்று வயற்காட்டில் உழைக்கும் நன்செய் விவசாயிக்கு ஏன் கொடுக்கவில்லை என்று எண்ணும்போது, அறிவுத் திறன் படைத்த அமைச்சரவை சிறிது தவறிவிட்டதோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. புன்செய்க்கு முன் நன்செய்க்குக் கொடுத்திருக்க வேண்டுமென்பது என் கருத்து.

அடுத்து, பட்ஜெட்டைப் பார்க்கும்போது, எதற்கு எடுத்தாலும் பெரும்பகுதி மத்திய அரசாங்கத்தைக் குறை சொல்லும் பாணியில் இருக்கிறது. ஆகாத மருமகளைப்பற்றி மாமியார் குறை சொல்லு



வதுபோல, 400 கோடி கடன் இருக்கிறது என்று அடிக்கடி சொல்லுவதைப் பார்க்கிறோம், பட்ஜெட்டிலும் வந்தது. ஆஸ்தி ஒன்றும் தேடி வைக்கவில்லையா? தொழிற்கூடங்களை ஏற்படுத்த வில்லையா? தரிசு நிலங்களை, பம்பு செட்டு போட்டு பாசனவசதி செய்துகொடுத்து, சோலைவனங்களாக ஆக்கவில்லையா? ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு தகப்பனுக்கு நான்கு பிள்ளைகள். அவருடைய 4 லட்சம் ரூபாய் ஆஸ்தியை தலைக்கு ஒரு லட்சம் ரூபாயாகப் பிரித்துக் கொடுத்து கடைசியாக, 4,000 ரூபாய் கடன் வாங்கியிருக்கிறேன் அதை இன்னும் கொடுக்கவில்லை, அதை தலைக்கு 1,000 ரூபாயாகக் கொடுத்து விடுங்கள் என்று சொன்ன போது, 'கடன்காரத் தகப்பன் போகிறான் பார்' என்று சொன்னது போல இருக்கிறது. வளர்ந்துகொண்டிருக்கிற திட்டங்கள், ஆஸ்திகள், சொத்துக்கள் எல்லாவற்றையும் மறந்து—நன்றி மறப்பது தமிழர் பண்பு அல்ல, பேசுவது வருத்தத் தக்கது. திரு. அரங்கண்ணல் அவர்கள் ஒரு படி அரிசித் திட்டத்தைப்பற்றி திரு. மார்ட்டின் அவர்கள் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லையே என்று கூறினார்கள். சொல்லுகிறோம். முன்னே இருந்தவர்கள் வைத்திருக்கிற ஆஸ்திபற்றிக் கூற வேண்டியது நல்லவர்கள் கடமை, நாட்டவர்கள் கடமை என்று சொல்லிக்கொள் கிறேன்.

வேளாண்மை வருமானத்தின் மேல் வரி விதித்திருக்கிறார்கள். செங்கோட்டை, கன்னியாகுமரி பகுதியை உதாரணமாகக் கூறினார்கள். அங்கே நிரந்தரமான ஒரு முறையில் வரி தேவை என்று எண்ணினார்கள். மேலும், வருவாய்த் துறை அதிகாரிகளைப் போடுகிறார்கள். அக்ரிகல்சுரல் இன்கம்டாக்ஸ் அதிகாரிகளுக்கு விவசாயத்தைப்பற்றித் தெரிவது கிடையாது. நன்றாகக் காய்க்கும் தென்னை மரத்தில் எத்தனை காய்கள் காய்க்கும் என்று கேட்டு வைத்துக்கொண்டு, நிலத்தின் பாங்கைப் பார்க்காமல், இத்தனை மரம் என்றால் இத்தனை காய்கள் காய்த்துக் குலுங்கும் என்று எண்ணுகிறவர்கள். எங்கள் ஊரில் அவ்வாறு ஒரு கதையே உண்டு. ஒரு அதிகாரி மரச்சீனிக்கிழங்கைப் பார்த்து அது எங்கே விளைகிறது என்று கேட்டு பூமிக்குக் கீழே செடியின் மூட்டில் (வேரில்) விளைகிறது என்று தெரிந்து கொண்டாராம். பக்கத்தில் இருந்த ஒன்றைப் பார்த்து, அது என்ன என்று கேட்க, பனங்கிழங்கு என்று தெரிந்துகொண்டாராம். பனங்கிழங்கு என்றால், அதுவும் கிழங்குதானே என்று திரும்பிப் போகிறபோது பனை மரத்தை வெட்டில் தோண்டிப் பார்த்து கிழங்கு இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்தாராம் ஆங்கில நாட்டிற்குச் சென்று படித்துவிட்டு வந்த விவசாய அதிகாரி ஒருவர். விவசாய வருமான வரி இலாகாவில் இருக்கக்கூடிய அதிகாரிகள் விவசாயத்தைப் பற்றித் தெரிந்தவர்கள் அல்ல. பட்ஜெட்டிலேகூட அரசினர் கூறி இருக்கிறார்கள். அதிகாரிகள் தொல்லை கொடுக்க முடியுமோ என்று கூறியிருக்கிறார்கள். அதை எப்படி நீக்க முடியும் என்று தெரியவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, குளங்களை ஆழப்படுத்த வசதி செய்திருக்கிறார்கள். இப்போது—உண்மையான கழகத் தொண்டர்கள் என்று சொல்லமாட்டேன்—புதிதாகக் கழகத் தொண்டர்கள்—"துண்டர்கள்"—தோன்றியிருக்கிறார்கள், கறுப்பு-சிவப்பு துண்டு போட்டுக் கொண்டு. அவர்கள் மண்வெட்டியை எடுத்துக்கொண்டு கிளம்பி விடுகிறார்கள் சென்று குளத்தை வெட்டுகிறார்கள், அண்ணா சொன்னார்கள் என்று. அநேக நண்பர்கள் தரிசு நிலங்களைப் பயிர் செய்கிறார்கள். நானும் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதைக் கேட்டேன். எனக்குத் தெரிந்த வரையில், தாங்களாக தங்கள் நிலங்களை தரிசாகப் போட்டிருந்தால் பயிர் செய்யலாம் என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தான் சொல்லியிருப்பார்கள். துண்டர்கள் என்று சொன்ன வகுப்பினர், குளத்திலும், 5 ஏக்கர், 10 ஏக்கர் என்று குளத்தில் மடையை வெட்டி உடைத்து பயிர் போடுகிறார்கள். அங்கு அதிகாரிகள் சென்றால், 'நீங்கள் கேட்க வேண்டியதில்லை, மேலிடத்தில் சொல்லியாகி விட்டது' என்று சொல்லுகிறார்கள். அதனால் 500 ஏக்கர்களுக்குப் பாய வேண்டிய தண்ணீர் அந்த அளவுக்குப் பாய முடியாமல் போகிறது. இதை நினைத்துப் பார்க்கும்போது சீரணி எந்த நிலையில் செயல்படும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால், காக்கிச் சட்டையைக் கண்டு கதர் சட்டை பயப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னாலும் சொன்னார்கள். கறுப்பு-சிவப்பு கரையுள்ள உடை அணிந்தவர்கள் போலீஸ்காரர்களைக் கண்டு பயப்படவேண்டியதில்லை என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சீரணி அமைக்கும்போது, அவர்கள் கையில் மண்வெட்டி முதலிய ஆயுதங்கள் கொடுக்கப்படும் பொழுது, காங்கிரஸ்காரர்களின் வரைத் தோட்டங்களை அழிப்பதற்கு அவை பயன்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக கதர் உடை திட்டம் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கண்டக்டர் என்று சொல்லக்கூடிய டிக்கெட் கொடுப்பவர்களுக்கும், டிரைவர் என்று சொல்லக்கூடிய ஓட்டுபவர்களுக்கும் கைத்தறி ஆடை முதலாவதாகக் கொடுத்துப் பார்ப்போம், அதிலும் லாபம் இல்லாமல் இருந்தால் பிறகு மில் துணியைக் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் வள்ளுவர் வழி நடப்பவர்கள். காங்கிரஸ்காரர்களைவிட காந்திஜியின் பக்தர்களைவிட, வள்ளுவர் வழி நடப்பவர்கள் கட்டாயம் கதருக்கு உதவி செய்யவேண்டும். வள்ளுவர் பெருமான் செய்த தொழில் கதர்த் தொழில். அவர்கள் உடுத்தியிருந்தது கதர் என்று சொன்னால் அது மிகையாகாது. பத்தொன்பதாவது நூற்றாண்டில்தான் முதன்முதலில் பம்பாயில் மில் துவக்கப்பட்டது. அதற்கு முன்னால் கையினால் நூற்று, கையினால் நெய்த கதர் ஆடையைத்தான் வள்ளுவர் அணிந்தார். ஆகவே, கைத்தறிக்குக் கொடுப்பதைவிட கதருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பொதுப்பணித் துறை அமைச்சர்



அவர்கள் கண்டக்டர்கள் குறள் படிக்கவேண்டும் என்று சொன்னது நல்லதுதான். குறள் படித்தவர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பஸ்ஸில் விளக்கம் கேட்டால் கூட சொல்லவேண்டும் என்று கூறினார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அவர்கள் அப்படி கூறினார்களோ என்னவோ தெரியாது. பத்திரிகைச் செய்தியைப் பார்த்துச் சொல்கிறேன். பஸ்ஸில் விளக்கம் கூறுவது சரியல்ல என்று நினைக்கிறேன். கண்டக்டர் ஒரு விளக்கம் சொன்னால் பஸ்ஸில் இருப்பவர் இன்னொரு விளக்கம் சொல்லலாம், பண்டிதர் இன்னொரு விளக்கம் சொல்லலாம், பஸ் போய்ச் சேரவேண்டிய இடத்திற்குப் போகாது. திருக்குறளை எல்லோரும் படிக்க வேண்டியதுதான். பண்பாட்டிற்காக அதைப் படிக்க வேண்டும். அங்கத்தினர்களாக இருப்பவர்கள் எல்லோரும் அதைப் படிப்பது நல்லதுதான். படித்துப் பார்த்து பொது மேடையிலே எப்படிப் பேசவேண்டும் என்ற பண்பைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சீரணி செம்மையாக செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். பொற்பதக்கத் திட்டம் ஒன்று கொண்டு வந்திருக்கிறார்கள். கொடுக்கலாம். அதேபோல ஆசைக்கு ஒரு ஆண், அன்புக்கு ஒரு பெண் என்று குழந்தை பெறுகிறவர்களுக்கு ஒரு பொற்பதக்கம் இல்லாவிட்டாலும், வெள்ளிப் பதக்கமோ, பித்தளைப் பதக்கமோ கொடுக்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தால் நாட்டுக்கு நலமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டம் சில ஊர்களுக்கு, சில மாவட்டங்களில் அமுலாக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். நாகர்கோவிலில் ருசியான தண்ணீர் நிறையவும் கிடைக்கும். ஆனால், மேட்டுப் பகுதியிலிருந்து ஹைலெவல் டாங்குகள் மூலம் கொண்டுவர வேண்டும். டாங்குகள், தொட்டிகள் போதாது என்ற நிலைமையில் அரசாங்கம் நகரசபைகளுக்கு கடன் கொடுத்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல என்னுடைய தொகுதியில் ஒரு காலனி இருக்கிறது. உதிரப்பட்டி என்ற ஒரு சிறு ஊர். அங்கே பழைய ஆறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. கல்லூரிக்குப் போகிறவர்களும், உயர் நிலைப் பள்ளிகளுக்குப் போகிறவர்களும் அதைக் கடந்து செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அங்கு ஒரு சீர்கேடான நிலைமை இருக்கிறது. மனிதப் பண்பு உள்ளவர்கள் அந்த நிலையை உடனே மாற்றவேண்டும். அந்த ஆற்றில் நிறையத் தண்ணீர் இருக்கும் பொழுது பெண்கள் ஆடைகளை நனைத்துக் கொண்டு; ஈர உடையில் கல்லூரிக்குப் போகவேண்டியிருக்கிறது. நிலைமையைப்பற்றி சொல்லத் தேவையில்லை. கற்பனை செய்து கொண்டுதான் பார்க்க வேண்டும். கற்புடைய பெண்கள் எப்படி அந்த ஆற்றைக் கடந்து செல்வது என்று வருந்தக்கூடிய நிலை இருக்கிறது. மனிதப் பண்புடன் இந்த நிலைமையை அணுகி, கட்டாயம் இதை அமைச்சர்

அவை மாற்ற வேண்டும், இதற்குப் பரிகாரம் காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உலகையருவி குடிநீர் திட்டம், பொய்கை அணைத்திட்டம் என்ற இரு திட்டங்களையும் உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நம்முடைய முதல்வர் சமர்ப்பித்த முதல் பட்ஜெட் என்று சொல்கிற முறையில் நன்றாக இருக்கிறது என்று கூறி அவர்கள் பாராட்டினார்கள். நானும் அந்த முறையில் பாராட்டிக் கொண்டு, இருக்கக் கூடிய குறைகளை நிவர்த்திக்கவேண்டும் என்று கேட்டு, இல்லாதவைகளுக்காக வருந்திக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. வி.பி. ஆசைத்தம்பி** : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் புதிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு சமர்ப்பித்திருக்கிற வரவு செலவுத் திட்டத்தை ஆதரித்து, நடைபெறுகிற விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு முன்பு பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் தரப்பிலே இருந்து பேசுகிற பொழுது, நல்லதைப் பாராட்டத்தக்க அளவுக்கு அவர்கள் பேசாமல், இன்னும் பழைய பாணியிலேயே அவர்கள் பேசிக் கொண்டு வருவது மிகவும் வருந்தத்தக்கது. இந்தத் தேர்தலிலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பலர் தரக்குறைவாக மேடைகளில் பேசியது தான் காரணம் என்பதை அவர்கள் உணர்வார்கள். எனவே, அந்தக் காரணத்தினால்தான் இந்தப் பக்கத்தில் ஆளும் கட்சியில் இருந்தவர்கள் இன்றைக்கு அந்தப்பக்கம் எதிர்க்கட்சியின் வரிசையில் உட்கார்ந்திருக்கிறார்கள். இன்னும் அதேமாதிரி நிலை நீடிக்குமானால், கோட்டையிலிருந்தே வெளியே போகும் அளவுக்கு பொதுமக்கள் செய்துவிடுவார்கள் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் அது மணக்கும், அதற்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற பண்பாட்டை இந்த நாடு வளர முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கைக்கொண்டிருப்பதால், அந்தப் பண்பாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்ந்து வந்திருக்கிற காரணத்தினால், இன்றைக்கு நாங்கள் ஆளும் கட்சியாக இருப்பதற்கு அதுதான் முழுமுதற் காரணமாகும். இதே பண்பாட்டோடு காங்கிரஸ்காரர்களும் இருக்க வேண்டும். முதலமைச்சராக பேரறிஞர் அண்ணா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவுடனேயே பழைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களை நேரிடையாகப் போய்ப் பார்த்து வாழ்த்துக்களைப் பெற்றார்கள். அது மாத்திரமல்ல, எங்களுடைய கட்சி ஆட்சிக்கு வரக்கூடாது என்று தேர்தல் வரைக்கும் பாடுபட்டுக் கொண்டிருந்த பெரியார் ராமசாமி அவர்களை திருச்சிவரைச் சென்று போய்ப் பார்த்து அவர்களுடைய வாழ்த்துக்களைப் பெற்றார்கள். அது மாத்திரமல்ல, அகில இந்திய காங்கிரஸ் தலைவர், பெரு மதிப்பிற்குரிய காமராஜ் அவர்கள் டெல்லியிலிருந்து வந்தவுடனேயே அவர்களைப்



போய்ப் பார்த்து வாழ்த்துக்களைப் பெற்றார்கள். சட்டப்படியோ, சம்பிரதாயப்படியோ முதலமைச்சர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே இத்தகைய காரியங்களைச் செய்யவேண்டுமென்பது கிடையாது. இருந்தபோதிலும், முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்களைப் பார்த்தார்கள் என்று சொன்னால், அது அவர்களுடைய, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பண்பாட்டைக் குறிக்கும். அத்தகைய பண்பாடு காங்கிரஸ் வட்டாரத்திலும் இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பத்தில் இந்த உரையின் மீது பேசிய அருமை நண்பர் திரு. மார்டின் அவர்கள் பழைய கள், புதிய மொந்தை என்றெல்லாம் பேசினார்கள். மது விலக்கு இந்த ராஜ்யத்தில் அமுலில் இருக்கிற காரணத்தினால் அவர்கள் அப்படிப் பேசவேண்டிய தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். அதுமாத்திரமல்ல, பொதுவாக மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில், நல்லதை நல்லது என்று வரவேற்று, கெட்டதைக் கெட்டது என்று சொல்லுங்கள். அதை விட்டு, வெறும் வார்த்தைகளை, கேலி மொழிகளை எதிர்க்கட்சியினர்கள் பேசிக்கொண்டிருந்தால், விவாதத்தினால் எந்தப் பயனும் ஏற்படாது என்பதை சபாநாயகர் அவர்கள் மூலம் நான் தெரியப்படுத்திக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

புதிய அரசாங்கம் ஏற்பட்டு மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. என்பது எல்லோருக்கும் தெரியும். தேர்தல் தினம் பிப்ரவரி 15-ம் தேதி வரைக்கும் இந்த நாட்டினுடைய நிலைமை என்ன, இன்றைக்கு இந்த நாட்டினுடைய நிலைமை என்ன என்பதைக் கொஞ்சம் நாம் ஒப்பிட்டுப் பார்த்தோம் என்று சொன்னால், இந்த மூன்று மாத காலத்தில் புதிய அரசாங்கம் ஏற்பட்டதற்குப் பிறகு நல்ல பெரிய மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். தேர்தலுக்கு முன்பு ரூ. 3, 4 கையிலே வைத்துக்கொண்டு அரிசிக்கு நாம் அலையவேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது. ஆனால், இன்றைய தினம் நாடு பூராவிலும் எல்லா இடங்களிலும் அரிசி தாராளமாக கிடைக்கிறது. சட்டபூர்வமான ரேஷன் உள்ள இடங்களைத் தவிர மற்ற இடங்களில் உள்ள கிராமங்களில் எங்கு பார்த்தாலும் ரூ. 1.93 காசுக்கு மேற்படாத அளவுக்கு நல்ல அரிசி நாடு பூராவிலும் கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, விலைவாசியைப் பொறுத்த வரையில் அந்த அளவுக்கு அரிசியின் விலை குறைந்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. அது தவிர, இன்னும் பல முக்கியமான பொருள்களின் விலை இறங்குமுகமாக இருக்கிறது என்பதை உணவு அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அருமை நண்பர் திரு. மார்டின் அவர்கள் பேசும்பொழுது ஜீரகம், கடுகு போன்ற தினமும் சிறு அளவு தேவைப்படுகின்ற பொருள்களின் விலை உயர்ந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். உள்ள

படியே இருக்கலாம். ஆனாலும், மூன்று மாத காலத்திற்குள்ளாக அரிசித் திட்டத்தின் பேரில் கவனத்தைச் செலுத்தி விலைகளைக் குறைத்திருப்பதை பாராட்டவேண்டும். அப்படிப் பாராட்டக் கூடிய பண்பு வேண்டும். ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று தேர்தல் காலத்தில் கூறியதை ஒட்டி நாங்கள் பதவிக்கு வந்த பிறகு காரியங்களைச் செய்து வருகிறோம். அப்பொழுது, ஆறு மாதகாலம் பொறுத்திருப்போம், எங்கே போடுங்கள் பார்க்கலாம் என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். அந்த அளவிற்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடமுடியாது என்று அவர்கள் எண்ணியிருந்த காலத்தில் எங்கள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்னையிலும், கோவையிலும் ரூபாய்க்கு ஒரு படி மே மாதம் பதினைந்தாம் தேதி முதல் போடப்படும் என்று மே தின விழாவில் வெளியிட்டார்கள். அப்படி தைரியமாகச் செய்த செயலைப் பாராட்டாமல், காங்கிரஸ்காரர்கள் ஏன் சென்னையிலும், கோவையிலும் மட்டும் என்கின்ற பிரச்சினையைக் கிளப்பினார்கள். இன்றைக்கு இங்கே பேசும்போது கூட நண்பர் மகாதேவன், ஏன் சென்னையிலும், கோவையிலும் மட்டும் போட வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அது பழைய அரசாங்கத்தின் பாபத்தின் முடிவுதான், வேறொன்றும் இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். பழைய சர்க்கார், இந்த இரண்டு நகரங்களிலும்தான் சட்டபூர்வமான ரேஷன் வைத்திருந்தார்கள். அந்தக் காரணத்தினாலே, அந்த இரண்டு இடங்களில் முதலில் இத்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். அடுத்து, குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கும் இடங்கள் என்றும், அதன் பிறகு சுற்றுப்புறங்கள் என்றும், இன்னும் 6, 7 மாதங்களில் எல்லா இடங்களிலும் இந்த சர்க்கார் ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று நாடு பூராவிலும் நிலைமையை ஏற்படுத்த இருக்கிறார்கள். அந்த முயற்சியைப் பாராட்டாமல், வரவேற்காதபடி, வாழ்த்தாதபடி, ஏதோ தாக்கிப் பேச வேண்டும் என்று தரக் குறைவாகப் பேசுவது நல்லதல்ல. மூன்று மாத காலத்தில் இந்த சர்க்கார் சாதித்திருப்பதைப் பார்க்க வேண்டும். ஒன்று, ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட்டிருப்பது; இரண்டாவது, போக்குவரத்துத் துறையில் பஸ் கட்டணத்தைக் குறைத்திருப்பது; மூன்றாவது, 75 மைல்களுக்கு மேற்பட்ட ரூட்டுகளை தேசீயமயமாக்க ஒரு செலவும் இல்லாமல் செய்ய இருப்பது; நான்கு நில வரியை ஒரு பகுதியில் ரத்து செய்வது; ஐந்து, பி.யூ.ஸி. படிப்புக்கு ஒரு பகுதியினருக்கு இலவசமாக்கியிருப்பது; ஆறு, காவிரித் திட்டத்தை ஆரம்பிக்க பணம் ஒதுக்கியிருப்பது; ஏழு, கூவம் அபிவிருத்தித் திட்டம் போட்டிருப்பது; எட்டு கலப்பு மணத்தை ஊக்குவிப்பது; ஒன்பதாவதாக, சிறு வியாபாரிகளுக்கு விற்பனை வரியிலிருந்து மாறுதல் கொடுத்திருப்பது, இந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார், கடந்த மூன்று மாத காலத்தில் நல்ல பல திட்டங்களை செய்திருக்கும்போது அதற்கு ஆக்கபூர்வமான யோசனைகளைத் தரவேண்டுமே தவிர, வார்த்தைகளைக் கொட்டுவது சரியில்லை. அவர்கள் வார்த்தைகளைக் கொஞ்சம் அளந்து பேசினால்தான்





அவர்களை மக்கள் வெறுக்காமல் இருப்பார்கள். அவர்கள் பேசும்போது, முதல் அமைச்சருக்கு நாவாட்சியைக் கொடுத்ததே அல்லாமல் நாட்டின் வாட்சியைப் போக்கவில்லை என்றெல்லாம் பேசுவது, அறியாமையால் இருக்கவேண்டுமே தவிர வேறொன்றும் இல்லை. காரணம், இன்றைக்கு நாவாட்சி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், 20 வருஷகாலமாகக் காங்கிரஸ் பொறுப்பில் இருந்ததால் தான். அவர்களுடைய ஆட்சியில் ஏற்பட்ட செயல்களின் விளைவுகளை நாம் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோமே தவிர வேறொன்றும் இல்லை. எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. மகாதேவன், தகப்பன் மகன் கதையைப் பற்றிச் சொன்னார்கள். தகப்பன் பிள்ளைகளுக்குக் கடன் சுமைகளை வைத்து விட்டுச் சென்றால், எப்படிக் கொஞ்சம் நாள் பிடிக்குமோ எல்லாவற்றையும் சரிசெய்ய அந்த வகையிலே, இந்த நாட்டில் காங்கிரஸ் ஆட்சியில் உயர்ந்திருக்கும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த, வரிகளைக் குறைக்க, வருவாய் இல்லாமல் இருக்கும் சர்க்கார் துறைகளைச் சரிசெய்ய, காலம் பிடிக்கும். அந்தக் காரியங்களை இந்தச் சர்க்கார் உடனடியாகச் செய்ய முடியாது. ஒன்றன்பின் ஒன்றாகத்தான் செய்ய வேண்டும் என்கிற நிலையில் இருக்கிறோம். அந்த அளவிலே இருக்கும்போது, ஏதோ 10, 15 ஆண்டுகள் பதவியில் இருந்து எதுவும் செய்யவில்லை என்பது போன்று நண்பர் மார்டின் அவர்கள் பேசினார்கள். அப்படி அவர்கள் பேசியது வருத்தத்தக்கதாக இருந்தது. அதற்குக் காரணம் ஒரு கால் வேறாக இருக்கலாம். அவர் இன்றுவரை வேறு துறையில் இருந்தவர். காங்கிரஸ் பற்றியும், கழகத்தைப் பற்றியும் அவருக்குத் தெரியாது. ஏதோ சர்க்கார் என்றால் தொடர்ந்து இருக்கும் என்று கருதியிருப்பார், அந்த நினைப்பிலே பேசியிருப்பார் என்று நினைக்கிறேன்.

விலை உயர்வைப் பொருத்த வரையில், அரிசி விலையைக் குறைத்திருக்கிறோம். அதன் காரணம் என்னவென்றால், அரிசி விலை குறைந்தால், மோரும் ஊறுகாயும் வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொள்ளலாம். மற்றவைகளின் விலைகளைக் குறைக்க அதன் பிறகு முயற்சி செய்யலாம். படிப்படியாகச் செய்யலாம். அந்த வகையில்தான் இன்றைக்கு அரிசியை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறது இந்தச் சர்க்கார். ஆகவே, மற்றப் பொருள்களைப் பொருத்தவரையில் எந்தக் குறைப்புமே இருக்காது என்று யாரும் நினைக்கத் தேவையில்லை. சர்க்கார் நடவடிக்கை எடுக்கிறது என்பதையும் கனம் உணவு அமைச்சர் கேள்வி நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, யாரும் உணவுப் பண்டங்களின் விலைகள் ஏறுகின்றன என்று கவலைப்படத் தேவையில்லை.

பட்ஜெட்டைப் பற்றிப் பேசும்போது, திரு. மார்டின் அவர்கள் வரிவிதிப்பு மூலம் வருமானத்தைப் பெருக்குவது என்பது தவறானது. வரி விதிக்காமலே வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இன்றைக்கு இந்த பட்ஜெட்டிலே

கூடுமான வரையில், ஆடம்பரப் பொருள்களுக்குத்தான் வரியை உயர்த்தியிருக்கிறது. சிறு வியாபாரிகளுக்குச் சலுகை என்கிற வகையில் ரூ. 10 ஆயிரம் என்பது, 15 ஆயிரம் என்று உயர்த்தப் பட்டிருக்கிறது. ஆனால், நண்பர் மாறன் அவர்கள், வரிமூலம் வருமானத்தைச் சர்க்கார் அதிகப்படுத்திக்கொள்வது கூடாது என்று சொன்ன வாதத்தை உண்மையிலேயே வடக்கே இருக்கும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நேற்று வரைக்கும் இந்த நாட்டைப் பொருத்தவரையில், ரெயில்வே கட்டண விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. கோவைக்கும் சென்னைக்கும் இருந்த பிரயாணக் கட்டணம் 2.50 ரூபாய் வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. சென்னைக்கும் திருச்சிக்கும் உள்ள கட்டணம் இரண்டு ரூபாய் உயர்ந்திருக்கிறது. ரெயில்வே ஸ்டேஷனில் நுழைவுக் கட்டணம் பத்துக் காசிலிருந்து 15 காசாக உயர்ந்திருக்கிறது. ஆக, இப்படி மத்திய சர்க்கார் நம் மீது வரிமேல் வரியாகப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் அந்த மாதிரி எதுவும் போடவில்லை. இந்த அரசு பதவிக்கு வந்தவுடனேயே பஸ் கட்டணத்தைக் குறைத்திருக்கிறார்கள். திருச்சிக்கும் சென்னைக்கும் உள்ள கட்டணம் இரண்டு ரூபாய் குறைந்திருக்கிறது. அதற்காக இந்தச் சர்க்காரைக் காங்கிரஸ் உறுப்பினர்கள் போற்றியிருக்கவேண்டும். இந்தச் சர்க்கார் பஸ் கட்டணத்தைக் குறைக்க வழிவகை செய்யும் போதுதான், மத்திய சர்க்கார் டீசல், பெட்ரோல் இவற்றிற்கு வரியைக் கூட்டி இருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இந்தச் சர்க்கார் செய்யும் காரியங்களுக்காக இந்தச் சர்க்காரைக் காங்கிரஸ்காரர்கள் பாராட்டவில்லையென்றால், அவர்களிடம் மக்களுக்கு இருக்கும் கொஞ்சநஞ்ச அபிமானத்தையும் இழந்துவிடுவார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

உணவுப் பொருள்களில், அரிசியை ரூபாய்க்கு ஒரு படி என்று போட்டதோடு அல்லாமல், ஓட்டல்களிலும் 80 காசுக்கு சாப்பாடு போட ஓட்டல் முதலாளிகளை அழைத்து பேசி திட்டமிடும் நேரத்தில், ரெயில்வே ஓட்டல்களில் முன்பு ரூ. 1.15-க்கு ஒரு சாப்பாடு என்றிருந்தது, இன்றைக்கு ரூ. 1.86 என்று உயர்த்தப் பட்டிருக்கிறது. அப்படி உயர்ந்திருக்கும் சாப்பாட்டிலும் ரசம் கிடையாது, நெய் கிடையாது. அந்த அளவுக்கு மத்திய அரசின் திட்டங்கள் நம் திட்டங்களைப் பாதிக்கின்றன. கனம் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இந்த உண்மையை உணர்ந்து, ரெயில்வே நிலையங்களில் இருக்கும் சர்க்கார் ஓட்டல்களில் விலையைக் குறைக்க வேண்டும் என்று, வடக்கே இருக்கும் சர்க்காரோடு வாதாடி, ஒரு போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள், நாங்கள் தயார். (ஆரவாரம்). அந்த நிலையில் நம்முடைய சர்க்கார் இங்கே 80 காசுக்கு சாப்பாடு போடத் தயாராக இருக்கிறது. ஆகையால்
முற்பகல் 11-30 இதைப்பற்றி நாங்கள் பேசுகிறபோது, மத்திய சர்க்காரையே தாக்குவதாக இருக்கிறதே என்று திரு. மகாதேவன் கூடக் குறைப்



பட்டுக் கொண்டார்கள். இருக்கிற குறைகளைச் சுட்டிக் காட்டாமல் முடியாது. மத்திய சர்க்காரும் நாமும் ஒன்று. அவர்கள் தகப்பன் என்றால், நாம் பிள்ளைகள் என்ற தன்மையிலே இருக்கும்போது, நமக்குத் தேவையானதைக் கேட்டுப் பெறக்கூடிய உரிமை நமக்கு இருக்கிறது. ஆகையால், அந்த அடிப்படையில், அவர்கள் என்ன என்ன தவறு செய்கிறார்களோ அதை நாம் சுட்டிக்காட்டித்தான் ஆக வேண்டும். விலைவாசிகளை உயர்த்திக்கொண்டே இருப்பது அவர்கள்தான். இங்கே வாழ்க்கைச் செலவு உயருகிறது என்றால், கிராக்கிப்படி கேட்கிறார்கள். நம்மைக் கேட்காமலேயே வடக்கே இருக்கும் சர்க்கார் வரிகளைப் போடும்போது, அதன் காரணமாகவே இங்கே செலவு உயரும்போது, அந்த அளவை ஈடுகட்டுவதற்கு உரிய வகையில், மத்திய அரசு வரி போட்டு வசூலிக்கும் வரித் தொகையில் நமக்குரிய பங்கு விகிதத்தையும் உயர்த்த வேண்டும். ஆக, இந்த நிலைமை இருக்கிறபோது, அதை உயர்த்தும்படி கேட்க உரிமை நமக்கு இருக்கும் காரணத்தால்தான் மத்திய சர்க்காரைப் பற்றி நான் இங்கே பேசுகிறனே தவிர, வேறு எந்தக் காரணத்தினாலும் அல்ல.

இங்கே அமர்ந்திருக்கிற ஒன்பது அமைச்சர்களை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு அமைச்சரும் அவரவர்கள் துறையில் நல்ல பல காரியங்களை இந்த மூன்று மாத காலத்தில் ஆற்றியிருக்கிறார்கள். முதலாவதாக, ஸ்தல ஸ்தாபன அமைச்சர் திரு. முத்துசாமி அவர்களை எடுத்துக் கொள்ளுவோம். Block development என்பது நேற்றுவரை Black development ஆக இருந்ததே தவிர, அது Block development ஆக இல்லை. அதை மாற்றியமைக்கக்கூடிய திட்டத்திலே அவர்கள் தீவிரமாக இருக்கிறார்கள். அடுத்து, சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் செய்த சாதனையைப் பார்ப்போம். நேற்று வரை ஆஸ்பத்திரிகளில் எல்லாம் ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவ உதவி கிடைப்பதிலே இருந்த சங்கடங்களையெல்லாம் நீக்கி, தாறுமாறாக ஆஸ்பத்திரி சாமான்களெல்லாம் பயன்படுவதை, அமைச்சர் அவர்கள் ஆஸ்பத்திகளுக்கு இன்ஸ்பெக்ஷன் செய்தது மூலமாக, ஓரளவு மாற்றி அமைத்திருக்கிறார்கள். அதே போல், கூட்டுறவுத் துறையிலே இருக்கும் ஊழல்களையெல்லாம் போக்கி, தொழிலாளர்கள் விஷயத்திலே என்ன முன்னேற்றம் செய்யவேண்டும் என்பதிலே கவனமாக இருந்து, மை காஃபி பார் மூடிக் கிடக்கும் நிலையில் அதை மீண்டும் திறப்பதுபற்றித் தொழில் அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அடுத்து, அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், ஆரம்பப்பள்ளியிலிருந்து அதிகாரிகள் அமர்ந்திருக்கிற இந்தக் கோட்டை வரையில் இருக்கிற ஒவ்வொரு இடத்திலும், ஆதித் திராவிட சமுதாயத்தினருக்கு 16 சதவிகிதம் இடம் ஒதுக்கவேண்டும் என்பதிலே தீவிரமாகத் திட்டம் தீட்டி வருகிறார்கள். விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள், விலைவாசி உயர்வதற்கும், விவசாயப் பொருட்களின்

உற்பத்திச் செலவு உயர்வதற்கும் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, உர வினியோகத்தில் ஊழல், பம்ப் செட்டுகளுக்குக் காலா காலத்தில் கனெக்ஷன் கிடைப்பதில்லை என்பவைதான் அதற்குக் காரணம் என்பதைக் கண்டறிந்து, அதற்குரிய வேலைகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். உணவு அமைச்சரைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. அவர்தான், ஆரம்பத்திலேயே ஒரு படி அரிசித் திட்டத்தை இன்றைக்கு அமல்படுத்தியிருக்கிறார்கள். அதே மாதிரி, போக்குவரத்துத் துறை அமைச்சர் கலைஞர் திரு. கருணாநிதி அவர்கள் பஸ் போக்குவரத்துத் துறையில் பல நல்ல காரியங்களைச் செய்திருப்பதை நான் சொன்னேன். எழுபத்தைந்து மைல்களுக்கு மேற்பட்ட பஸ் ரூட்களைச் சர்க்கார் உடைமையாக்குகிற திட்டத்தைப் பாராட்டக் காங்கிரஸ்காரர்களுக்குத் தைரியம் இல்லை. (திரு. பி. ஜி. கருத்திருமன்: பாராட்டுகிறோம்.) நீங்கள் பாராட்டவில்லை. "120 மைலுக்கு நாங்கள் வைத்தோம், அதை 75 மைலாகக் குறைத்திருக்கிறீர்கள்" என்று நீங்கள் தந்திரமாகப் பேசுகிறீர்களே தவிர, வேறொன்றுமில்லை. நீங்கள் 120 மைலுக்கு வைத்தபோது, தனியார் பஸ்ஸும் போய்க்கொண்டிருந்தது; சர்க்கார் பஸ்ஸும் போய்க்கொண்டிருந்தது. ஆனால், சர்க்காருக்கு வருமானம் இல்லை; நஷ்டம் வந்தது. இப்பொழுது வைத்திருக்கிற திட்டத்தின்படி, 75 மைலுக்குமேலே தனியார் யாரும் சர்க்கார் பஸ்ஸுக்கு போட்டியாக பஸ் விட முடியாது. உங்களுடைய திட்டத்திற்கும் எங்களுடைய திட்டத்திற்கும் வித்தியாசம் இதுதான். நீங்கள் என்ன செய்கிறீர்கள்? பாம்புக்குத் தலையாகவும், மீனுக்கு வாலாகவும் இருக்கிறீர்கள். இதுதான் உங்களுடைய சோஷலிசமே தவிர, உண்மையான சோஷலிசம் என்பது உங்களுடைய பேச்சிலேயே கிடையாது; உள்ளத்திலும் கிடையாது. 'இதுதான் உண்மையான சோஷலிசத் திட்டம்' என்று சொல்லி, நீங்கள் ஒரு பக்கம் தனியார் கம்பெனியைக் கொழுக்க வைத்திருக்கிறீர்கள். இன்னொரு பக்கத்தில் [illegible] நஷ்டம் வருவதற்கும் வழி வகுத்தீர்கள். இனிமேல் எந்தக் காரணத்தைக்கொண்டும் சர்க்கார் போக்குவரத்துத் துறையில் நஷ்டம் வராத [illegible] இப்பொழுது மாற்றியமைத்திருக்கிறோம். ஆக, இந்த அளவிற்கு இன்றைக்குப் போக்குவரத்து அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் மாற்றியமைத்ததை [illegible] பேசியிருக்கிறீர்கள். அதை இனி பாராட்டித்தான் வேண்டும். நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். பஸ் வைத்திருக்கிறவர்கள் எல்லோரும் கிளர்ந்தார்கள். தேசியமயமாக்கப்பட்டால் எங்களுக்கு நஷ்டயீடு கிடைக்காது என்று. ஜமீந்தாரி முறை எடுக்கப்பட்டபோது நஷ்டயீடு கிடைத்ததைப்போல் தங்களுக்கும் நஷ்டயீடு கிடைக்கவேண்டும் என்று பஸ் வைத்திருப்பவர்கள் கிளர்ந்தார்கள். யாருக்கும் நஷ்டயீடு இல்லாத முறையில், தந்திரமாக இப்படி செய்து முதலமைச்சர் அவர்களும் போக்குவரத்து அமைச்சர் அவர்களும் இந்தத் திட்டத்தை இன்றைக்கு வகுத்திருப்பதைக்





குறித்து நாம் எல்லோருமே அவர்களைப் பாராட்ட வேண்டுமே தவிர, நீங்கள் இதைத் திரித்துப் பேசுவது தவறான காரியம் என்று நான் காங்கிரஸ் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆக, அந்த அளவிற்குப் பாராட்ட வேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

இன்னும் ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் குறிப்பிட்டு உரையை நான் முடித்துக்கொள்ளுகின்றேன். சிரணியைப்பற்றிக் காங்கிரஸ் தரப்பிலே மிகவும் பயப்படுகிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன்—பயப்படவேண்டிய அவசியம் இல்லை. காங்கிரஸ் தரப்பிலே பயப்படுவதற்குக் காரணம், பல காங்கிரஸ்காரர்கள் நேற்று காங்கிரசிலே சேர்ந்தவர்கள். அதனால்தான் அதைப்பற்றி அவர்களுக்குப் பயம் ஏற்படுகிறது. 'சிரணி' என்கிற வார்த்தைதான் புதியதே தவிர, வேறொன்றுமில்லை. காந்திஜி இருந்த காலத்திலே அரிசனக் காலனிகளுக்குச் சென்று சமூக சேவை செய்வதற்காக ஆட்களைத் திரட்டினார்கள். காங்கிரஸ்காரர்களையும் திரட்டினார்கள், தனிப்பட்ட முறையிலும் ஆட்களைத் திரட்டினார்கள். காந்திஜி அந்தக் காலத்தில் செய்த காரியத்தைத் தான் இந்தச் சர்க்காரும் சிரணி என்ற பெயரில், சேவையில் ஆர்வமுள்ளவர்களை ஒன்று திரட்டி—சர்க்காருக்குச் செலவு இல்லாதபடி—பல நல்ல காரியங்களைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். இன்றைக்கு நாடு பூராவும் கிராமங்களுக்கும் 'மெயின் ரோடு'க்கும் பாதை இணைப்பே இல்லாத பல கிராமங்கள் இருக்கின்றன. இந்தக் கிராமங்களிலிருந்து மெயின் ரோடுக்குப் பாதை போடவேண்டுமென்றால், பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன்தான் அதைப் போட வேண்டும். ஆனால், இன்றைக்கிருக்கும் 'ரெட் டேபிஸம்' என்று சொல்லக்கூடிய முறையிலே இது உடனடியாக நடக்காது. அந்த மாதிரி இருக்கிற இடங்களை சர்வே செய்து, மொத்தக் கணக்கை எடுத்துக்கொண்டு, ஆங்காங்கே சிரணியைக் கொண்டுபோய், வாரத்திற்கு ஒரு நாளோ, இரண்டு நாளோ, ஒரு மைல் ரோடாக இருந்தாலும் சரி, மம்மட்டி, கடப்பாறை போன்ற கருவிகளைச் சர்க்கார் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுக்குமென்றால், ஒரே நாளில் அந்த ரோடைப் போட்டு, கிராமத்தையும், மெயின் ரோட்டையும் இணைத்துவிட முடியும். இம்மாதிரி இணைக்கும் காரியத்தில் என்ன நடக்கும் என்று கேட்டால், சர்க்காருக்குச் செலவு மிச்சம். அது மாத்திரம் அல்ல. நான் இன்னும் சொல்லுகிறேன். எழுபத்தைந்து மைலுக்கு மேல் தனிப்பட்ட முதலாளிகள் பஸ் ஓட்ட முடியாத நிலையில், கஷ்டப்படப் போகிறவர்கள், இம்மாதிரி ரோடு போட்டு எல்லாக் கிராமங்களையும் மெயின் ரோடுகளோடு இணைத்துவிட்டால், அந்தக் கிராமப் பக்கமாவது அவர்கள் ரூட்டுக்கு அப்ளை செய்யலாம், அந்தப் பக்கம் அவர்கள் பஸ் விட இந்தச் சர்க்கார் வழிவகை செய்யும். எனவே,

[திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி] [1967 ஜூன் 19

இம்மாதிரி காரியங்களுக்குத்தான் சிரணியே தவிர, வேறு எந்தக் காரியத்திற்காகவும் இல்லை. ஆகவே, பயப்பட வேண்டிய அவசியம் இல்லை.

அது மட்டும் அல்ல. ஏதோ வாழைத் தோட்டம் ஒன்றைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஏதோ செய்துவிட்டார்கள் என்று புகார் கூறிப் பேசினார்கள். அதைப்பற்றி மாத்திரம் சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன். அந்த வாழைத் தோட்டப் பகுதியைப் பொறுத்த வரையில், அது புறம்போக்கு நிலம் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்தப் பகுதியிலே பாதை அமைப்பதற்கு இடையூறாக மரங்கள் இருந்தன. அவற்றைச் சிலர் வெட்டியிருக்கிறார்கள்—அதற்கும் கழகத்திற்கும் சம்பந்தம் இல்லை—அந்தப் பகுதியிலே இருக்கிறவர்கள் செய்திருக்கிறார்கள். சட்டப்படிப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தனியாருடைய வாழைத் தோட்டத்திலே புகுந்து, கழகத்துக்காரர்கள் இம்மாதிரி அக்கிரமம் பண்ணிவிட்டார்கள் என்று கட்டுப்பாடாக நாடு பூராவும் காங்கிரஸ்காரர்கள் பேசி வருகிறார்கள். நாங்கள் அந்த மாதிரி செய்யவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ளுவதோடு மாத்திரமல்ல; இன்னொன்றும் சொல்லுகிறேன். இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்திலே, குடியரசு தினத்திலே கறுப்புக் கொடி பறக்கவிட வேண்டியது என்று எங்கள் கட்சி முடிவுகட்டி, நாங்கள் எல்லாம் எங்களுடைய சொந்த வீடுகளில் கறுப்புக்கொடி கட்டியிருந்த நேரத்திலே, எங்களையெல்லாம் அப்போது இருந்த சர்க்கார் சிறைச்சாலைக்குள்ளே அடைத்துவிட்டு, எங்கள் வீடுகளில் பெண்டு பிள்ளைகள் இருக்கும்போது காங்கிரஸ்காரர்கள் புகுந்து, அந்தக் கொடியை இறக்க வேண்டும் என்று சொல்லி, அப்போதிருந்த போலீஸ் இலாக்கா அதற்கு உதவியளித்து, பல தனிப்பட்ட வீடுகளிலே இருந்த கொடிகளை அகற்றியிருக்கிறார்கள். நீங்கள் கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வளவு பயங்கரமாகத் தனியார் சொத்துக்குள்ளே புகுந்து, அந்தக் கொடியை இறக்கக் கூடிய அளவிற்குக் குண்டர்களுக்குப் பழைய ஆட்சியில் இருந்த போலீஸ் இடம் கொடுத்தது என்று சொன்னால், அதைவிடக் கேவலம் எதுவும் இருக்க முடியாது. ஆனால் இன்றைய சர்க்காரைப் பொறுத்த வரையில், அப்படி ஏதாவது ஒரு சம்பவம் காட்ட முடியுமா? எங்கும் கிடையாது. போலீசிலே யாருமே தலையிடுவது கிடையாது. அந்த அளவிற்குப் போலீஸ் இலாக்கா மட்டுமல்ல; எல்லா இலாக்காக்களும் நிம்மதியாக இன்றைக்கு அதனதனுடைய வேலைகளைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றன. ஆக, இம்மாதிரி இருக்கும் ஒரு புதிய சர்க்காரைத்தான் காங்கிரஸ்காரர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்லுவேன். மல்லிகை என்றால் மணக்கும். மல்லிகை மணக்கிறது என்று ஒப்புக்கொண்டால்தான் உங்களை மக்கள் சந்தேகிக்கமாட்டார்கள். மல்லிகை மணக்கவில்லை என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னால், அவர்களைத்தான் மக்கள் சந்தேகிப்



1967 ஜூன் 19] [திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி]

பார்கள் என்று சொல்லிக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவந்த முதல் அமைச்சர் அவர்களுக்கும், இந்த அமைச்சரவைக்கும் பொதுமக்களின் சார்பாக நன்றி தெரிவித்து, விடைபெற்றுக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. என். சங்கரய்யா : துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, 1967–68-ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மீது, இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்ஸிஸ்டு) கட்சியினுடைய உறுப்பினர் என்ற முறையில் சில கருத்துக்களை இப்பொழுது தெரிவிக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்ட உரையிலே, புஞ்சை நிலங்களின் மீது இருக்கக்கூடிய அடிப்படைத் தீர்வையை நீக்கியதையும், பஸ் போக்குவரத்தை நாட்டுடைமையாக்குவது பற்றியும், விவசாய வருமான வரிச் சட்டத்திலே உள்ள ஓட்டைகளை நீக்கி, அந்த வரியின் மூலமாக இன்று அரசுக்குக் கிடைக்க வேண்டிய வருமானத்தை உயர்த்துவதற்காகச் செய்து இருக்கக்கூடிய ஏற்பாட்டைக் குறித்தும், அசையாப் பொருள்கள் மீது இதற்கு முன்பு செலுத்தப்பட வேண்டிய ஸ்டாம்ப் கட்டணத்தைச் செலுத்தாமல் ஏமாற்றிக்கொண்டிருக்கக்கூடிய முறையை மாற்றி, முறையாக அந்தக் கட்டணத்தை வசூலிப்பதற்கும், தஞ்சையிலே மூன்று தனியார் கம்பெனிகள் நடத்தக்கூடிய மின்சாரக் கம்பெனிகளை அரசு, விவசாய உற்பத்தியினுடைய நலனைக் கருதி மேற்கொள்ளுவதைப்பற்றியும், இன்று இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய சிறிய வியாபாரிகள் செலுத்தக்கூடிய விற்பனை வரியைப் பொறுத்தவரையில், வரம்பை 15,000 ரூபாய் அளவிற்கு உயர்த்தியும், இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய ஆண்டொன்றுக்கு ரூ. 1,500-க்கும் அதற்குக் குறைவாகவும் வருமானம் பெறக்கூடியவர்களின் பிள்ளைகளுக்குக் கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் இலவச கல்வி அளிப்பது பற்றியும் நாங்கள் வரவேற்கிறோம் என்பதை நான் முதலிலே சொல்ல விரும்புகிறேன்.

இன்று கனம் முதலமைச்சர் அவர்கள், தம்முடைய உரையிலே மத்திய அரசுக்கும், மாநில அரசாங்கங்களுக்கும் இடையே இருக்கக்கூடிய உறவு முறைகளிலுள்ள சிக்கல்களைப்பற்றி விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த அம்சங்களில் எல்லாம் எங்களுக்கு உடன்பாடு உண்டு என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்று, மத்திய அரசாங்கம் மாகாண சர்க்கார்களுக்குக் கொடுக்கும் விகிதத்தைக் காட்டிலும் மிகத் தாராளமான முறையில் அதிகமான அளவில் உதவ வேண்டும். இந்த நாட்டிலே உள்ள மாநிலங்களுடைய கோடிக்கணக்கான மக்களுக்கு வசதி செய்யத் தேவையான வருமானத்தை நாம் பெறுவதற்கு வேண்டிய வழிவகைகளை மத்திய அரசு செய்ய வேண்டும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

இதுபோல மாநில அரசுக்கு அதிகாரங்களும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்பதை முற்போக்கு எண்ணம் படைத்த எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். இந்த முறையிலே, முற்போக்கு எண்ணங்களைக் கொண்ட ஜனநாயகத் திட்டங்களை, மத்தியிலே ஆட்சி செய்யக்கூடிய ஆட்சி, கட்சி வித்தியாசங்களைப் பாராமல் நல்ல நல்ல திட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது நாட்டுக்கும் மக்களின் நலனுக்கும் உறுதுணையானது. உதாரணமாக, இங்கு பேசிய காங்கிரஸ்காரர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், மத்திய ஆட்சி உண்மையிலேயே நாட்டு மக்களுக்கு வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்றால்-வெளிநாட்டு-இந்தியப் பெரு முதலாளிகள் கையில் இருக்கும் வாணிபத்தைத் தன்னுடைய ஏக போக ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். இதனால் 100 கோடி வரை வருமானம் கிடைக்குமென்பதை அறிஞர்கள் கூறியுள்ளதை நாம் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பாங்குகள் மீது சமூக ஆதிக்கம் சம்பந்தமாக அவரது கட்சித் தீர்மானத்தையே கைவிட்டு விட்டு, பாங்கி முதலாளிகளையே கூட்டி உடனே ஆலோசனை கேட்கிறார். மயிலே மயிலே இறகு போடு என்று கேட்கிறார். பாங்கு முதலாளிகள் தங்களின் பாங்குகள் மீது அரசாங்க ஆதிக்கம் ஏற்படவேண்டுமென்று சொல்வார்கள்? இந்த நாட்டிலே பாங்குகளைத் தேச உடைமையாக்குவது என்பது எங்கள் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கட்சிக்கும் ஏனைய முற்போக்குக் கட்சிகளுக்கும் உடன்பாடான விஷயமாகும். இதுபோல் இன்றைக்கு மாநில அரசாங்கம் பணம் கேட்க முன்வந்தால், அவசியம் அதிகமாக இருந்தும் தர முடிவதில்லை. நம்முடைய நாட்டில் 1962-63-லிருந்து விலைவாசிகள் உயர்ந்திருப்பதற்கு முக்கியமான காரணம் ராணுவச் செலவுகள் உயர்ந்திருப்பதுதான். அயல் நாடுகளுடன்—முக்கியமாக அண்டை நாடுகளுடன் சுமுகமாகப் பிரச்னைகளைத் தீர்த்தால் நம்முடைய நாட்டின் ராணுவச் செலவில் பெரும்பகுதியைக் குறைக்க முடியும் என்ற அபிப்பிராயம் நாட்டிலே ஆழ்ந்து வேர்விட்டு வருகிறது. இது வெறும் கொள்கைப் பிரச்சினை மட்டுமல்ல. 900 கோடி ரூபாய் ராணுவத்திற்குச் செலவாகிறது. ஆனால் மற்ற அத்தியாவசியத் தேவைகளுக்குப் பணம் கேட்டால் இல்லை என்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக முக்கியமானது என்னவென்றால் இன்றைக்கு நாட்டிலே விலைவாசி கட்டுப்படாமல் ஏறிக்கொண்டே போகிறது. இது மற்றச் செலவுகள் எல்லாவற்றையும் உயர்த்தியிருப்பதைப் பார்க்கிறோம். இப்பிரச்னைகள்பற்றி நாட்டிலே ஒரு பெரு முயற்சியின் காரணமாக மாற்றம் காணமுடியும்.

ஆகவே, உதவி சபாநாயகர் அவர்களே, இதைக் கூறிவிட்டு, இன்று சபை முன்னால் இருக்கும் அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்று பஸ் போக்குவரத்துத் துறையில் 75 மைல்களுக்கு மேலாக ஓடும் பஸ்களை எடுத்துக்கொள்வது என்று செய்திருப்ப



தான முடிவு முற்றிலும் சரிதான். ஒருசமயம் காங்கிரஸ் கட்சியினரே நெடுந்தூர பஸ்களை எடுத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். என்னைக் கேட்டால் 50 மைல் தூரத்திற்கு மேல் ஓடும் பஸ்களை எடுத்துக்கொள்வதுகூட முற்றிலும் நியாயமானதாக இருக்கும். எக்ஸ்பிரஸ் பஸ்களைத் தவிர 75 மைல்களுக்கு மேலாக ஓடும் பஸ்கள் பெரும்பாலும் அதிகம் இல்லையென்று நான் கருதுகிறேன். பஸ்களை நாட்டு உடைமை ஆக்குவதில் 50 மைல்களுக்கு மேற்பட்ட பஸ்களை எல்லாம் எடுத்துக்கொள்வது என்பது நன்றாக இருக்கும் என்கிற கருத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். டவுன் பஸ்களைப் பொறுத்தவரை அவ்வளவாக வருமானம் வரக்கூடியதாக இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். டவுன் பஸ்களை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அந்தப் பெரும் பளுவை நம் நாட்டில் உள்ள முதலாளிகள் ஏன் சுமக்க வேண்டும்? எந்தெந்த முனிசிபாலிட்டிகள், நகரசபைகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறதோ, அந்த நகர சபைகளுக்கு எல்லாம் மாநில அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை நகரத்திலே உள்ள நகரசபை தாங்கள் டவுன் பஸ்களை எடுத்து நடத்தத் தயார் என்று கூறுகிறது. மதுரை நகரிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய தொழில் டி.வி.எஸ். ஸ்தாபனம். டவுன் பஸ்களை நடத்த மாநில அரசு வழி செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பஸ்களுக்குப் போடப்பட்டுள்ள கட்டணத்தைப்பற்றி எங்களுக்கு ஓர் ஐயம். தனிப்பட்ட முதலாளிகள் இன்றைக்கு அவர்களுடைய பஸ்களில் மீண்டும் கட்டணம் உயர்த்தாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, புஞ்சை நிலத்திற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த வரி விகிதத்தை அடுத்து நஞ்சை நிலத்திற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் விவசாய வருமான வரியை இன்னும் நல்ல முறையில் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருப்பதைக் குறித்து நான் பாராட்டுகிறேன். அதிலே வரி செலுத்துவதற்கான முறை நன்முறையில் ஏற்பட்டு பெருநிலக்கிழார்களின் மீது அவர்கள் கொடுக்கக்கூடிய வகையில் நிச்சயிக்கப்படும். இந்த விவசாய வருமானத்திலிருந்து எவ்வளவு வருமானம் அதிகமாகக் கிடைக்கிறது என்பது சொல்ல முடியாதென்று சொல்லப்படுகிறது. நாம் போடக்கூடிய முறையிலே கணிசமான வருமானம் இதிலே வரும். நஞ்சை நிலத்திலே கூட நிலவரிக்குப் பதிலாக விவசாய வருமான வரி இன்று முற்போக்கான எல்லா நாடுகளிலும் சிறப்பாக பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த வரியை நல்ல முறையில் வசூலிக்க செயல்படுத்த வேண்டும். இதனால் பெருநிலக்கிழார்

களிடமிருந்து பல கோடிக்கணக்கான ரூபாய்கள் கிடைக்கும் என்று நம்புகிறோம். சிறிய விவசாயிகளுக்கு இந்த வரியிலிருந்து பாதிப்பு ஏற்படாது.

அடுத்தபடியாக, விற்பனை வரியைப் பொறுத்தமட்டில் ஒன்பது மாதங்களில் 3.75 கோடி ரூபாய் கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 4 கோடி ரூபாய் என்ற அளவிலே இது கிடைக்கும் என்று நம்புகிறேன். எண்ணெய் வித்துக்கள், சணல் மீது உள்ள வரியை 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்திற்கு உயர்த்த வேண்டாம். அதுபோல நிலக்கடலை மீது போடப்பட்டுள்ள 1½ சதவீதம் விற்பனை வரியை 2 சதவீதம் ஆக உயர்த்தாமல் இருந்தால் நலமாக இருக்கும். நிலக்கடலை என்பது நம் நாட்டில் உள்ள ஏராளமான ஏழை மக்களின் உணவுத் தேவையில் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்யக்கூடியது. இதன் மேலான வரியை உயர்த்தாமல் இருப்பது நல்லது என்பதை அமைச்சரவையின் ஆழ்ந்த கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒருமுனை விற்பனை வரிக்கு உட்பட்ட பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரியை ½ சதவீதம் கூட்டுவது என்று முடிவு எடுக்கிறபோதே மிகவும் பொறுப்போடு காப்பி, தேயிலை மண்ணெண்ணெய் மீது உயர்த்தவில்லை. மற்றப் பண்டங்களின் மீது உயர்த்துகிறபோதும் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, அவை உயராமல் இருக்க செய்வதுதான். ஆகவே விலைவாசிகளை உயரச் செய்யக் கூடிய நிலை இதனால் ஏற்படும் என்றால் வரி விதிப்புச் சம்பந்தமான மசோதாக் கொண்டு வரும்போது இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் துறையில், மதுரை கலெக்டர் அவர்கள் உரம் விநியோகிக்கும் நேரத்தில் அந்த அந்தப் பட்டாதாரர்களுக்கு நேரிடையாக உரம் விநியோகிப்பதற்கான கார்டு வழங்கும் யோசனை சர்க்கார் கவனத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். அதைப்பற்றிய குறிப்பு முதல் அமைச்சர் அவர்கள் உரையில் காணப்படவில்லை. அவ்வாறு ஏற்பாடு செய்தால் உரம் முறையாகக் கிடைக்கக்கூடும்.

அடுத்தபடியாக, சென்ற கூட்டம் முடிந்த பிறகு விவசாய அமைச்சர் அவர்கள் மதுரை மாவட்டத்திற்கு வந்து அங்கிருந்த கடமலைக்குண்டு மலைப் பிரதேசத்தில் காட்டு இலாக்காவுக்குச் சொந்தமான இடத்தில் பலகாலமாகச் சாகுபடி செய்துகொண்டிருந்தவர்களுக்கே அந்த நிலத்தை உரிமையாக்குவதுபற்றி எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கையைப் பாராட்டுகிறேன். இதுபோல சர்க்காருக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள், காட்டு இலாக்கா நிலங்கள் அனைத்தையும் கொடுத்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் எங்கெங்கு காட்டு இலாக்காவினரால் பாண்டிக்கப்படாமல், விவசாயத்திற்கு ஏற்றதாக, இடங்கள்





இருக்கின்றனவோ அவற்றை நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். மேலும் இன்றையதினம் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற அடித்தளத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு ஊக்கமும், உற்சாகமும் கொடுக்க வகை செய்யவேண்டும். குத்தகைதார், வாரம்தார்களுக்கு நிலத்தில் இருந்து வெளியேற்றப்படாத வகையில் நிரந்தரப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இன்றையதினம் பல குத்தகைதாரர்கள், வாரம்தாரர்கள் நிலத்தில் இருந்து வெளியேற்றப்படுகிற நிலைமை இருக்கிறது. தஞ்சை போன்ற மாநிலத்தில் இன்றுள்ள நிலைமையைக் கருதி—உடனடியாக இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

உணவுக் கொள்முதலை எடுத்துக்கொண்டாலும் முன்பு 10 ஏக்கருக்கு மேற்பட்டவர்களிடம் உள்ள மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவையும் அரசாங்கம் கொள்முதல் செய்வது என்று சொல்லப்பட்டது. தற்போது 5 லட்சம் கொள்முதல் செய்துவிட்ட காரணத்தினால் அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று அந்த கிராமத்தவர்கள் மொத்தமாக இவ்வளவு நெல் கொடுத்துவிட்டால் போய்விடுவதாக ஒப்பந்தம் செய்துகொண்டு போய்விடுகிறார்கள். இதன் காரணமாக கிராமங்களில் உள்ள பெரும் நிலக்காரர்களிடம் நெல் தங்கிவிடுகிறது. அவர்கள் அதன் விலையை உயர்த்தி விற்க முற்படுகிறார்கள். ஆகவே அரசாங்கம் முன்பு சொன்னதுபோல மார்க்கெட்டபிள் சர்ப்ளஸ் பூராவையும் கொள்முதல் செய்ய ஆவன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். வருகிற அறுவடையிலும் அப்படிச் செய்தால்தான் எல்லாப் பகுதிகளிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்ற முடியும்.

கடைசியாக ஒரே ஒரு விஷயம். எதிர்பாராத வகையில் சட்டமன்றத்திற்கு ஒரு மைல் தூரத்திற்கு முன்னால் ஊர்வலமோ, கூட்டமோ நடைபெறக்கூடாது என்பதாக ஓர் தடை உத்தரவு இரண்டு தினங்களுக்கு முன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. முன்பு இதுபோல தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் திரு. மதியழகன் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்து அதை மிக வன்மையாகக் கண்டித்து இருக்கிறார்கள். இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஆட்சிப் பொறுப்பில் வந்து இருக்கிறபோது அதேபோன்றே இப்படி ஓர் தடை உத்தரவு பிறப்பிப்பதில் பொருள் இல்லை. மக்கள் ஊர்வலமாகவோ, கூட்டமாகவோ வந்து தங்கள் குறைகளை, கஷ்டங்களை அமைச்சர்களிடத்தில் எடுத்துச் சொல்வதற்கு தடை இருக்கக் கூடாது. இதுபற்றி இன்றையதினம் என்னுடைய கட்சித் தலைவர் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி ரெப்ரசெண்ட் செய்திருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்களும் ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறார். ஆகவே முற்போக்கான காரியங்களை ஆக்கபூர்வமான காரியங்களை இந்த அமைச்சரவை செய்கிறபோது எங்களது முழு ஒத்துழைப்பும் இருக்கும் என்று கூறி, ஆக்கபூர்வமாக எங்களது நேசக் கரத்தை நீட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[1967 ஜூன் 19

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது எழுந்து நின்று பேசுதல் வேண்டும். உட்கார்ந்து கொண்டு சொல்வது பேரவையின் நடைமுறைக்கு உகந்தது அல்ல. எனவே உறுப்பினர்கள் பேசுகின்றபொழுது எழுந்து நின்று பேச வேண்டும். குறிப்பாக திரு. கே. விநாயகம் அவர்களை அவர்கள் பேசும்பொழுது எழுந்து நின்று பேச வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. முனு. ஆதி : கடத்தல் என்பது அப்பொழுது 100, 50 என்ற அளவில் லாரிகளில் கடத்திச் சென்றார்கள். அதையெல்லாம் இப்பொழுது முன்னேற்றக் கழக ஆட்சி வந்தவுடன் கண்டு பிடித்தார்கள். அவர்களையெல்லாம் மக்களாகவே போலீசில் ஒப்படைத்திருக்கிறார்கள். மக்களும், கழகத் தொண்டர்களும், கள்ளக் கடத்தல்காரர்களை யெல்லாம் போலீசில் ஒப்படைத்ததன் காரணமாகத்தான் இன்று கள்ளக் கடத்தல் என்பதே கிடையாது. கள்ளக் கடத்தல் காரர்கள் எங்கெங்கே தேக்கி வைத்திருக்கிறார்களோ, அவர்கள் எப்படியாவது கொண்டுபோக வேண்டுமென்று எங்கெங்கே தேக்கி வைத்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் இப்பொழுது கடத்தல் செய்யமுடியவில்லை. அவர்கள் கடத்திச் சென்று விற்பதற்கு முடியவில்லை, இதனால் அவையெல்லாம் அப்படியே தேங்கிக் கிடக்கின்றன, அவர்கள் வெளியிலே கொண்டு வரவும் முடியவில்லை, கொண்டு வந்தால் தாலுகா சப்ளை ஆபீசர் கைப்பற்றுவார் என்பதால் அதையெல்லாம் இன்னும் அப்படியே தேக்கி வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட கள்ளக் கடத்தல்காரர்களையெல்லாம் பிடிப்பதில் மக்களாக முன்வந்து அரசாங்கத்துடன் ஒத்துழைத்தார்கள். அவர்களே அவர்களை எல்லாம் தேடிப் பிடித்து விட்டார்கள். அதனால்தான் இந்த அரசாங்கத்தை ஏழைகள் அரசாங்கம் என்று தைரியமாகச் சொல்லிக் கொள்வதில் நாங்கள் பெருமையடைகிறோம். இத்தனை ஆண்டுகளாக இருந்து ஆட்சி நடத்தியவர்கள் 500 டன் வைத்து விட்டுப் போனார்கள். ஆனால் இன்றுள்ள அரசாங்கம் 3 மாதத்தில் 5 லட்சம் டன் சேர்த்தோம். இதன்மூலம் என்ன தெரிகிறது என்றால் இந்த நாட்டில் பற்றாக்குறை என்பது இல்லை; கள்ளக் கடத்தல் செய்ததால்தான் பற்றாக்குறை ஏற்பட்டது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடு வதைப்பற்றிச் சொல்கிறார்கள். என்னிடத்திலே ஒரு பெரிய காங்கிரஸ்காரர்கூடச் சொன்னார்; ரூபாய்க்கு ஒரு படி அரிசி நீங்கள் தைரியமாகப் போட்டு விட்டீர்கள். நீங்கள் 1971-ஆம் ஆண்டு 1½ படி ரூபாய்க்கு அரிசி போட்டுவிட்டால், நாங்கள் தேர்தலில் ஆட்களை நிற்கவைக்கக்கூட முடியாமல் போய்விடும், என்று சொன்னார். மூன்று மாதங்களிலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று வந்துவிட்ட பிறகு, ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, 1½ படி அரிசி அல்ல, 2 படி அரிசிகூடப் போடமுடியும். காரணம், மக்கள் சக்தி எங்களிடத்திலே இருக்கிறது. சோஷலிச அடிப்படையில், ஏழைகள் அரசாங்கமாக இயங்குகிறது இந்த அரசு



1967 ஜூன் 19] [திரு. முனு. ஆதி]

என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். முன்பு காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடந்தபொழுது, கோட்டையிலே செவர்லட் அல்லது பிளைமவுத் போன்ற கார்கள்தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு இரவும் பகலும் பாடுபடுகின்ற தொழிலாளர்கள், ரிக்‌ஷா தொழிலாளர்கள், வண்டியிழுக்கின்ற தொழிலாளர்கள், கம்பெனித் தொழிலாளர்கள் இவர்கள் எல்லாம் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்காகக் கூடிவருகிறார்கள். மனநிறைவோடு போகிறார்கள், இது ஒன்றே போதும் இந்த அரசு ஏழைகள் அரசு என்பதற்கு உதாரணம் ஏழைகள் கோட்டையிலே நிறைந்து இருக்கின்ற நிலைமையைப் பார்த்தாலே இங்கே சமதர்மம் எப்படி நிலைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அடுத்ததாக, பஞ்சாயத்து யூனியன்களைப்பற்றி ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் இருப்பதால் பணம் விரயமாகத்தான் படுகிறது. இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன்கள் இல்லாமல் இருப்பதைத்தான் பெருவாரியான மக்கள் விரும்புகிறார்கள். எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமென்றால், எக்ஸ்டன்ஷன் ஆபிசர் ஃபார் இன்டஸ்ட்ரிஸ் என்று ஒரு அதிகாரி இருக்கிறார். முன்பு ஒரு யூனியனுக்கு ஒரு அதிகாரி தான் இருந்தார். ஆனால் ஒருவர் மட்டும் இருந்தால் கேடு என்று நினைத்து, இப்பொழுது இரண்டு பேர்களைப் போட்டிருக்கிறார்கள். ஒருவருக்கு 10 ஆயிரம் என்ற கணக்கில் இரண்டு பேர்களுக்கும் அவர்கள் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்காக 20,000 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்தத் தொகையில் சுமார் 4,000 அல்லது 5,000 ரூபாய் அவர்களுடைய சம்பளத்திற்காகவே கொடுத்துவிடுகிறோம். மீதம் இருப்பது 15,000 ரூபாய்தான். அந்த ரூபாயை வைத்துக் கொண்டு ஏப்ரல், மாதத்தில் ஒரு தச்சுப் பட்டறையை ஆரம்பித்தால் அதை மே அல்லது ஜூன் மாதத்திற்குள் மூடிவிடுகிறார்கள். இப்படித்தான் பண விரயம் செய்யப்படுகிறது.

அடுத்தபடியாக, எக்ஸ்டன்ஷன் ஆபீசர் ஃபார் பஞ்சாயத்து அந்த அதிகாரியை எடுத்துக்கொண்டால் அவர் பஞ்சாயத்துத் தலைவர்கள் செய்கின்ற தவறுகளுக்கு உடந்தையாக இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏனென்றால், அவர்கள்தான் ஆடிட்டிங் அதாரிட்டியாக, தணிக்கை அதிகாரியாக இருக்கிறார்கள். இதனால் சேர்மன் அதிகாரியைப் பார்த்து, 'இந்தத் தவறு இருக்கிறது. இதை விட்டுவிடு' என்று சொல்கிறார். இப்படிப்பட்ட நிலைமைகளின் காரணமாக பணம்தான் விரயமாகி வருகிறது; நன்மை ஒன்றும் ஏற்படுவதில்லை.

அடுத்ததாக, எக்ஸ்டன்ஷன் ஆபீசர் ஃபார் கோவாப்ரேடிவ்ஸ் என்று இருப்பவரை எடுத்துக் கொண்டால் அவரும் ஒன்றும் செய்வதில்லை. தூங்கிக் கொண்டே சம்பளம் வாங்கும் நிலைமைதான் இருந்து வருகிறது. எக்ஸ்டன்ஷன் ஆபீசர் ஃபார் மைனர் இரிகேஷனை எடுத்துக் கொண்டால் அவர்கள் நல்ல முறையில்

[திரு. மு.னு. ஆதி] [1967 ஜூன் 19

இரிகேஷன் வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்று அரசு நினைக்கிறது. ஆனால், அவர்கள் இரண்டு மூன்று வரிகளைக் கூட சரியான முறையில் கவனிப்பதில்லை. அங்கேயுள்ளவர்கள் இது சம்பந்தமாக ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் இவர்களைப் பார்த்து அவர்களுடைய ஒத்துழைப்பின்மூலம் அவைகளைப் பார்க்க வேண்டும்.

அடுத்ததாக, எக்ஸ்டென்ஷன் ஆபீசர் ஃபார் ரூரல்வேஸ் என்பவரை எடுத்துக்கொண்டால், அவர் இணைப்புப் பாதைகள் போடுவதைக்கூட சரிவரச் செய்ய முடியவில்லை. ஒரு இடத்திற்கு இணைப்புப் பாதை அதாவது, லிங்க் ரோடு போட வேண்டுமென்று சொன்னால் அந்தப் பஞ்சாயத்து பாதித் தொகையை ஐந்து ஆயிரம் ரூபாய் வரை கொடுக்க வேண்டியிருக்கும். மொத்தம் 10 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றால், அதற்கு மீதியுள்ள பாதியை பஞ்சாயத்து யூனியன்தான் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாட்டினால் அங்கே எந்தவிதமான லிங்க் ரோடுகளும் போடப்படுவதில்லை. காரணம், ஒரு பஞ்சாயத்தை எடுத் களும் போடப்படுவதில்லை. காரணம், ஒரு பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டால் அதனுடைய வருமானமே 1,000 ரூபாயாகத்தான் எப்படி 5,000 ரூபாய் வரை அதனால் கொடுக்க முடியும்? ஆகவே, லிங்க் ரோடு போடும் வேலையும் அவர்கள் செய்வதில்லை. அரசாங்கம் என்ன நினைக்கிறது என்றால், இரிகேஷன் வேலைகளையும், லிங்க் ரோடு போடுகின்ற வேலைகளையும் பஞ்சாயத்து யூனியன்கள் கவனிக்கின்றன என்று நினைக்கிறது. ஆனால், நடைமுறையில் பார்த்தால் அப்படி நடப்பதே இல்லை. அவர்கள் என்ன பாதையைப் போட்டுத் தருகிறார்களா, விளக்கைப் போட்டுத் தருகிறார்களா, பட்டாத் தருகிறார்களா என்று தான் கேட்கிறார்கள். ஆகவே, அதற்கெல்லாம் காரணம் என்னவென்றால் ஏற்கனவே இருந்த அரசு வகுத்த திட்டம் நடைமுறையிலே செயல்படவில்லை. ஆகவே லிங்க் ரோடு போடுவது, மைனர் இரிகேஷன் போன்ற வேலைகளையெல்லாம் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்து எக்ஸ்டென்ஷன் அதிகாரியே ஆடிட்டிங் அதிகாரியாக இருக்கக்கூடாது. பஞ்சாயத்து யூனியன்களின் முன்னேற்றத்திற்காகத்தான் அந்த அதிகாரிகள் இருக்கிறார்களா என்றால் உண்மையில் அப்படிப் பணியாற்றவில்லை. எனவே பஞ்சாயத்து யூனியன்களே தேவையற்றவை என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயம். அதனால் பல கோடி ரூபாய்கள் விரயமாக்கப்படுகின்றன. எனவே, பழைய முறைப்படியே அந்த அந்த இலாகாக்கள் சம்பந்தப்பட்ட வேலைகளைப் பொறுப்பில் வைத்துக் கொண்டால்கூட நல்லது என்று நினைக்கிறேன்.

டிரான்ஸ்போர்ட்டைப் பற்றி முன்பு பல முறை பேசியிருக்கிறேன். முன்பு ஸ்டேஜுக்கு 30 காசுகள் வாங்கினார்கள். இன்றைக்கு சாதாரணமாக ஸ்டேஜுக்கு அரசாங்க பஸ்களில் 14 பைசா வாங்கப்படுகிறது. அதைப் பார்த்து முன்பு ஆர்.டி.ஓ.



1967 ஜூன் 19] [திரு. மு.னு. ஆதி]

அனுமதி பெற்று 30 பைசா வசூலித்து வந்த தனிப்பட்ட பஸ் சொந்தக்காரர்கள் கூட 14 பைசா என்று குறைந்துக் கொண்டார்கள். காஞ்சிபுரத்திற்குச் செல்ல முன்பு 2 ரூபாயாக இருந்தது தற்போது ஒன்றரை ரூபாயாகக் குறைந்திருக்கிறது. அரசாங்க பஸ்களில் கட்டணத்தைக் குறைத்த காரணத்தால் தனிப்பட்ட பஸ் முதலாளிகளும் குறைத்துக் கொண்டார்கள். முன்பு நஷ்டம் என்று சொன்ன பஸ் முதலாளிகள் இப்போது எப்படிக் குறைத்துக் கொண்டார்கள்? இதையெல்லாம் உன்னிப்பாகக் கவனிக்கிற பொது மக்கள் இதுதான் சமதர்ம சமுதாயத்தைச் சிருஷ்டிக்கக் கூடிய அரசு என்று உணர்ந்து பாராட்டுகிறார்கள்.

எந்த ஊரை எடுத்துக் கொண்டாலும் குடி- மனைப் பட்டா, விவசாயம் செய்யும் புறம்போக்கு நிலங்களுக்கு பட்டா வழங்குவதில் தேக்க நிலைமை இருக்கிறது. கடந்த 20, 25 ஆண்டுகளாக ஏழை அரிசன மக்கள், விவசாயிகள் பயிரிட்டுக் கொண்டு வரும்படியான நிலத்திற்குப் பட்டா இல்லாத காரணத்தால் தண்டத் தீர்வையாக 100 ரூபாய், 180 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஜமாபந்தியின்போது கூட 60 ரூபாயாக இருந்ததை 180 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பட்டா வழங்கப்பட்டால் 15 அல்லது 20 ரூபாய்தான் கொடுக்க வேண்டிய நிலையில், தற்போது அவர்கள் தண்டத் தீர்வையாக ரூ. 180, ரூ. 200 என்று கட்ட வேண்டிய நிலையில் ஏழை அரிசன மக்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். தாசில்தார், ஆர்.டி.ஓ. நேரடியாகப் பார்த்து நியாயம் என்று தெரிந்தால் உடனடியாகப் பட்டா வழங்க வழி செய்ய வேண்டும். சில புறம்போக்கு நிலங்களுக்கு அரசாங்க அனுமதி பெற்றுத்தான் பட்டா வழங்க வேண்டிய நிலைமை இருப்பினும் அவற்றுக்கும் ஆர்.டி.ஓ. லெவலிலேயே பட்டா வழங்க அதிகாரம் கொடுக்கலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கை மாவட்டத்தில் காட்டு இலாகா மூலம் பணம் செலவழிக்கப்படுகிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் காட்டு இலாகா மூலம் வருமானம் இருக்கிறது. ஆனால், செங்கை மாவட்டத்தைப் பொறுத்தவரை செலவழிக்கப்படக் கூடிய பணத்திற்கு வருமானம் இல்லை. என்னுடைய தொகுதியில் 1,200 ஏக்கர் நிலத்தைக் காட்டுப்பகுதி என்று வைத்திருக்கிறார்கள். அதிலிருந்து வருமானமே இல்லை. அந்த பூமி நல்ல செழிப்பான பூமி. காட்டு இலாகாவால் உபயோககரமாகப் பயன்படுத்த முடியாத அந்தகைய நிலங்களை எல்லாம் விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'ரேணி' பற்றி மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது ஒரு சிறப்பான அம்சம். மக்களோடு நேரடித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு அது ஒரு சிறப்

பான அமைப்பு. முன்பு கிராம சேவக்குகள் என்று வைத்திருந்தார்கள். அந்த கிராம சேவக்குகளின் வேலைகள், வேலைகளைப் பார்த்தால் கணக்கில் அடங்காது, காங்கிரஸ் கட்சியை வளர்ப்பதற்காக கிராம சேவக்குகளை வைத்திருந்தார்கள். ஆனால், இந்தச் சேனையினருக்குக் கருவிகள் கொடுக்கப்பட்டு ஏரி குளங்களைத் தூர் எடுத்தல், சீர் செய்தல் போன்ற நல்ல காரியங்களைச் செய்வதற்காக இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக வைத்திருந்த கிராம சேவக்குகள் போன்றவர்கள் அல்ல இவர்கள். இந்தச் சேனை உண்மையிலேயே மக்களுக்கு உதவி செய்வதற்காக அமைக்கப்பட்டிருக்கிற சேனை.

இந்த வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டிய வரவு செலவுத் திட்டம்; மக்களுக்குத் தெரியாமல் இருந்ததை தெரிய வைக்கின்ற வரவு-செலவுத் திட்டம்; மத்திய அரசாங்கம் ஏமாற்றிக் கொண்டு வருவதை எடுத்துக் காட்டுகின்ற வரவு செலவுத் திட்டம்; ஏழைகளோடு தொடர்பு கொண்டு சமதர்ம ஆட்சியை உருவாக்குகின்ற திட்டம்; இத்தகைய வரவு செலவுத் திட்டத்தை முழு மனத்தோடு ஆதரித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. ந. தருமலிங்கம்: சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசாங்கத்தின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரையாற்றுகின்ற வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் நாடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நல்ல திட்டங்களை அடிப்படையாக வைத்து நாடு மகிழக் கூடிய வரவு-செலவுத் திட்டத்தை நமக்கு ஒப்புவித்தார்கள். அவ்வாறு ஒப்புவிக்கின்றபோது, தமிழக அரசாங்கம் 1959-ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்திற்குத் தரவேண்டிய கடன் தொகையையும், இன்றைய தினம் வளர்ந்திருக்கின்ற கடன் தொகையையும், 1950-ம் ஆண்டில் தர வேண்டிய வட்டித் தொகையையும், இன்றைய தினம் தரவேண்டிய வட்டித் தொகையையும் குறிப்பிட்டு இவ்வளவு பிரம்மாண்டமான சுமையுடன் கூடிய வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார்கள். இவ்வளவு சங்கடங்களுக்கிடையிலும், இவ்வளவு அதிகமாக மத்திய அரசாங்கத்திற்குக் கடனாகவும், வட்டியாகவும் தர வேண்டிய நிலையிலும், செய்ய வேண்டிய காரியங்களுக்காக, பொது மக்களுக்கு நல் வாழ்வளிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்திலே இடமிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முதல் முதலில் உரையாற்றிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் உரையாற்றத் தொடங்கியபோது அவரது முகத்தைப் பார்த்தேன். அவர் பேச ஆரம்பித்தவுடனே அவர் முகத்தைப் பார்க்காமல் இந்த அவையில் உள்ள திருவள்ளுவருடைய படத்தைப் பார்த்தேன். படத்தின் கீழ் உள்ள



"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

என்ற குறளைப் பார்த்து விட்டு, அந்த உறுப்பினருக்கும் அந்தப் பாட்டுக்கும் உள்ள தொடர்பினை நினைப்பூட்டிக்கொண்டேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டு 'எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் சொல்ல வேண்டும்' என்று பாடம் கற்றுத் தருகின்ற இந்த அவையில் வரவு செலவுத் திட்டத்தைப் பற்றியல்லாது எதையெதையோ எண்ணிப் பேசியது நம்முடைய மனத்தையெல்லாம் புண்படுத்தினாலும் கூட, நாட்டு மக்கள் உளப்பூர்வமாக இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கிறார்கள் என்பதை நான் திட்டவட்டமாகக் கூறமுடியும்.

இந்த நாட்டில் கடந்த காலத்தில் இருந்த குறைபாடுகள் இருபது ஆண்டுக் காலமாக இருந்து வருகின்ற குறைபாடுகள் என்பதை சட்ட மன்றத்திற்கு வெளியில் இருக்கும் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். இந்த 20 ஆண்டுகளாக இருக்கக் கூடிய குறைபாடுகளை நீக்கும் வகையில் மூன்று மாத காலத்திற்குள்ளாக பல திட்டங்களை வகுத்து அந்தத் திட்டங்கள் இந்த வரவு செலவுத் திட்டத்திலே குறிப்பிடப்பட்டிருப்பது மகத்தானது; அந்தத் திட்டங்கள் சக்திக்கும் அப்பாற்பட்டது என்பதைத் தமிழக மக்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நாட்டு மக்கள் ஒத்துழைப்போடு, ஆதரவோடு இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தைக் குறை சொல்லவேண்டுமென்ற எண்ணத்தில் கூறுகிறார்களே தவிர, இருக்கின்ற சங்கடங்களை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. காங்கிரஸ் கட்சி கடந்த 20 ஆண்டு காலத்தில் பொதுமக்களிடம் எதையெதைச் செய்வதாகச் சொன்னார்களோ அவற்றையெல்லாம் செய்யாது விட்ட நிலையில், இந்த அரசு மூன்றே மாதத்திற்குள்ளாக அவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறது. புஞ்சை நிலத்திற்கு வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது; 75 மைல்களுக்கு அப்பால் ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களை நாட்டுடைமையாக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் மூன்று மின் நிலையங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமாகின்றன. கலப்பு மணம் செய்து கொண்டு நாட்டுக்கு வழி காட்டியாகவும், ஒன்றே குலம் என்ற வகையில் ஜாதி மதபேதத்தை அகற்றும் வகையில் மணம் செய்து கொள்ளுகிறவர்களுக்குப் பரிசு வழங்கவும் பொற் பதக்கம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 'சேணை' என்ற பெரும் படை தமிழ்நாட்டின் சீர்கேடுகளைக் களைவதற்காக ஏற்படுத்தப்பட இருக்கிறது. விற்பனை அளவு வரம்பை உயர்த்தியதன் மூலம் 10,000 பேர்களுக்கு மேல் வரி நீக்கத்தால் பயன் பெற்றிருக்கிறார்கள். கடந்த காலங்களில் இப்படிப்பட்ட முற்போக்கு இருந்ததா என்று ஆராய வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை மொத்த வருவாயில் நான்கில் ஒரு பங்கு என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது போன்று பல நல்ல காரியங்களுக்காக தொகை ஒதுக்கி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் இது என்பது எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் அனைவருக்கும் தெரியும்.

துவக்கத்தில் பேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் புரட்சிகரமே இல்லையென்று சொன்னார்கள். எதைப் புரட்சிகரமானது என்று அவர் நினைக்கிறார் என்று தெரியவில்லை. கலப்புத் திருமணத்திற்குப் பொற்பதக்கம் வழங்குவது புரட்சி இல்லையா? 75 மைல்களுக்கு மேல் ஓடக்கூடிய பஸ்களைத் தேசியமயமாக்குவது புரட்சி இல்லையா? மின் நிலையங்களை அரசு ஏற்றுக் கொள்வது புரட்சி இல்லையா? புஞ்சை நிலத்திற்கு வரி ரத்து செய்யப்பட்டிருப்பது புரட்சி இல்லையா? 'சீரணி' என்ற அமைப்பு ஏற்படுத்த இருப்பது புரட்சி இல்லையா? அவர் எதைப் புரட்சி என்று கருதுகிறார் என்று புரியவில்லை.

சீரணியின் நோக்கத்தைப் பற்றி வரவு செலவுத் திட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சீரணிக்காக ஒதுக்கப்பட்ட தொகை பத்து லட்சம் ரூபாய். நோக்கம் தூய்மையானது என்பதை மனந் திறந்து விளக்கிச்சொன்னார்கள். அவ்வாறு விளக்கிச் சொல்லியும் அதைப் பற்றி மாலையிலே ஒரு பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது.

சீனாவில் உள்ள செங்காவலர் படைக்கும் இந்தச் சீரணிப் படைக்கும் பொருத்தமுள்ளதாக எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. இங்கு சபைக்கு உள்ளேயும் பேசிய சில கனம் உறுப்பினர்கள் அதே கருத்தைக் குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி தெளிவாக விளக்கியும், அப்படிப்பட்ட ஒரு படை இன்றையதினம் அவசியம் என்பதைப் பற்றி எடுத்துக் கூறியும், அந்தப் படையின் நோக்கம் என்ன, அது எதை எதை சாதிக்கும் என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துக் கூறியும் அது நடைமுறைக்கு வருவதற்கு முன் அந்தப் படையை சீனாவில் உள்ள வெறிபிடித்த படையோடு ஒப்பிடுவது நல்ல மரபாகவோ அல்லது நாணயம் உள்ள செயலாகவோ தெரியவில்லை. இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை எடுத்து விளக்கி இன்னின்ன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதை விட்டுவிட்டு இட்டுக் கட்டியும், புனைந்துரைத்தும், மாசுபடுத்தும் வகையில் காங்கிரஸ் அன்பர்கள் பேசிவருவதை என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஒரு மிக முக்கியமான திட்டத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிறு நீர்பாசனத் திட்டங்களுக்காக நடப்பாண்டு 11 கோடிக்கு அதிகமாக செலவழிக்கப் போவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய



தினம் உள்ள உணவு நெருக்கடியிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள பாசன வசதிகளும், வடிகால் வசதிகளும் மிக மிக இன்றியமையாதவை. ஆகவே சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது என்றாலும் நான் ஒரு கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடியில் நடைபெற்ற பாசன வசதி மாநாட்டிலும், மாயவரத்தில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கிலும் கூடியிருந்த விவசாயிகளும், ஊராட்சி மன்றத் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், ஆக எல்லோரும் ஒரு கருத்தினை வலியுறுத்திக் கூறினார்கள். இறவைப் பாசனத்திற்கு என்று விதிக்கப்படும் பெட்டர்மென்ட் டாக்சை நீக்கிவிட வேண்டுமென்று அனைவரும் கேட்டுக்கொண்டார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் அந்த வரியை நீக்க உதவி செய்யவேண்டுமென்று சபாநாயகர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று புயல் துடைப்புப் பணிக்காக 2 கோடி 50 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக கூறியிருக்கிறார்கள். ஆண்டுதோறும் புயல் யாரையும் கேட்டு வருவதில்லை. திடீரென்று ஏற்படுகிற புயல் பல பேர்களின் இழப்பிற்குக் காரணமாக இருக்கிறது. அதற்காக இவ்வளவு தொகை ஒதுக்கியிருப்பது நியாயம் என்றாலும் சென்ற ஆண்டு, 1966-ல் ஏற்பட்ட புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களுக்கு இந்தத் தொகை செலவழிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு உண்மையை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1952-54-ல் தஞ்சையில் கடும் புயல் வீசி அதனால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இன்னும் தலையெடுக்கவில்லை. உதாரணமாக திருத்துறைப்பூண்டி தாலுகாவில் அழிந்து போன கிராமங்கள் பல உண்டு. ஆகவே 1966-ல் வீசிய புயல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இந்த 2½ கோடி ரூபாயில் பெரும் பகுதியைச் செலவழிக்க வேண்டுமென்றிருப்பதை மாற்றி எங்கள் பகுதிக்கும் இந்தத் தொகையை செலவழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல தென்னந்தோப்புகளும், வீடுவாசல்களும் பாழாகிப் போயிருக்கின்றன. நவம்பர் மாதம் பிறக்கும்போதே, வங்காள விரிகுடாவில் காற்றெடுக்கும்போதே நாகப்பட்டணம், திருத்துறைப்பூண்டி போன்ற பகுதிகளில் புயல் அடித்தால் என்ன சேதம் ஏற்படுமோ என்று அந்த சேதத்தை கற்பனை செய்து கொண்டு கஷ்டப்படும் நிலை இருக்கிறது. ஆகவே புயல் வருவதற்கு முன்பே அதுகுறித்து அறிவதற்காக கால அறிவிப்புக் கருவிகளை தருவித்து வழங்கவேண்டும். இரண்டு கோடி, 50 லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கதேயென்று கூறிக்கொண்டு நம் தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் உளப்பூர்வமாக வரவேற்கத் தக்க அளவிற்கு இந்த வரவு செலவுத் திட்டம் இருப்பதால் 20 ஆண்டுக் கொடுமையிலிருந்து புது அரசாங்கம் மக்களை வாழ்விக்கும் என்று மக்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. ந. தருமலிங்கம்] [1967 ஜூன் 19

அந்த வகையில் இத்திட்டம் பயன்படும் என்று கூறி இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று இந்த அளவோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. வ. ஜார்ஜ்: மதிப்புமிக்க உதவி அவைத் தலைவர் அவர்களே, ஆளும்கட்சி நண்பர்கள் பேசும்போது எதிர்க்கட்சித் தோழர்கள் அனைவரும் அவர்களைப் பாராட்டாமல் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். மாற்றான் விட்டு முல்லை மணக்காது என்ற தோரணையில் பேசிக்கொண்டு போனார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். எதிர்கட்சியில் இருப்பவர்கள், எதிர் வரிசையில் இருப்பவர்கள் எப்போதும் அரசாங்கத்திற்கு பாராட்டு பல்லவி பாடிக் கொண்டிருக்க இங்கு வரவில்லை என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆளும் கட்சியில் உள்ள 138 பேர்கள் அவர்களுக்கு பாராட்டுப் பல்லவி பாட இருக்கிறார்கள். அது போதாதா? எதிர்க்கட்சியினர் இங்கு குறைகளை எடுத்துக் கூறத்தான் வந்திருக்கிறார்கள். இதனால் நல்லதை காணவில்லை என்பது பொருள் அல்ல. மாற்றான் விட்டு முல்லை மணக்காது என்றால் ஜாதி வேறுபாடு காரணமாக மனத்தில் வேறுபாடு இருக்கலாம். அதன் தாம் குறைந்திருக்கலாம். அதனால் மனத்தில் வேறுபாடு இருக்கலாம். அந்த மன வேறுபாட்டை எடுத்துக் கூறுவதுதான் எதிர்க்கட்சிகளின் பண்பு. அதுதான் பண்பாடான முறை என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆளும் கட்சியில் உள்ள நண்பர்கள் பஞ்சாயத்து யூனியன்கள் தேவையில்லை என்றார்கள். அதில் பல அலுவலர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதற்காக ஏதாவது இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். அது பாராட்டா? ஆளும் கட்சியினரே பாராட்டு தெரிவிக்காதபோது எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அவர்களுக்குத் தோன்றிய குறைகளை எடுத்துக் கூறும்போது ஏதோ அவர்கள் வேண்டுமென்றே செய்கிறார்கள் என்று கூறுவதில் பொருள் இல்லை. நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் சில குறைகள் இருப்பதாக முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். உண்மைதான், அதை ஒப்புக்கொள்கிறேன். அரசியல் சட்டத்தில் மாநில அரசாங்கங்களுக்கு சரியான நியாயம் வழங்கப்படவில்லை என்பது உண்மையே. நாளடைவில் கண்ட உண்மையை ஒப்புக்கொண்டு அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டியது நம் கடமையே. பைனான்ஸ் கமிஷன் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று அமைப்பதை விட அதை நிரந்தரமாக ஆக்கவேண்டுமென்ற ஆக்கபூர்வமான யோசனையை ஆதரிக்கவேண்டியதுதான். குறைகளை எடுத்துக் கூறுவதோடு இல்லாது, போராட வேண்டிய நிலை ஏற்படுமானால் போராடுவோம், பதவி துறப்போம் என்ற முறையில் அச்சுறுத்தி அமைச்சரவை செயல்படுமானால் அது நம் நாட்டுப் பண்பாட்டிற்கு, நம் நாகரீகத்திற்கு முரண்பட்டதாக பொறுக்க முடியாததாகவேயிருக்கும். நமக்கு உரிமை இருக்கிறது, கேட்கலாம். அதற்காக அரசாங்கமே போராட்



1967 ஜூன் 19] [திரு. வ. ஜார்ஜ்]

..த்தை ஊக்குவிப்போம் என்ற முறையில் பேசுவது அராஜகத்திற்கு வழிவகுப்பதேயன்றி நம் நாட்டின் நலனுக்கு வழி வகுப்பதாகாது என்று கூற ஆசைப்படுகிறேன். பாராட்டுவதற்காக நிலவரி பற்றி கூறியிருக்கிறார்கள். நண்பர் ஆசைத்தம்பி அவர்கள் கூறியதுபோல் அதைப் பாராட்டுவேன். ஆனால் அதிலுள்ள குறைகளைக் கூறாமல் இருக்க முடியாது. எனக்கு முன் பேசிய திரு. மகாதேவன் பிள்ளை அவர்கள் கூறியதுபோல் உணவுப் பிரச்னை பற்றி தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது நன்செய் நிலத்தில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். நன்செய் நில விவசாயிகளுக்கு அதிக ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டும். ப்ரொக்யூர்மெண்ட் என்று வைத்து குறைந்த விலையில் அவர்கள் விளைச்சலை அளந்து கொண்டிருக்கும் போது அவர்களை ஊக்குவிப்பதற்கு நாம் முதல் இடம் கொடுக்க வேண்டும். அதற்கு மாறாக ஒரு கோடி ரூபாய்தானே பரவாயில்லை என்று புன்செய் நிலங்களுக்கு மட்டும் சலுகை கொடுத்திருக்கிறார்கள். இவ்வாறு குறைகளை எடுத்துக் கூறும்போது எங்களை கடமை தவறியவர்கள் என்றோ அல்லது பண்பு கெட்டவர்கள் என்றோ எதிர்கட்சித் தோழர்கள் ஒருபோதும் நினைக்கக் கூடாது. அப்படி புன்செய் நிலங்களுக்கு விலக்களித்து விட்டு அதனால் ஏற்பட்டிருக்கும் இழப்பை ஈடுசெய்ய என்ன செய்திருக்கிறார்கள்? விவசாய வருமான வரியில் சில சீர்திருத்தம் செய்யப் போகிறார்கள். அப்படிச் செய்வது விவசாயிகளுக்கு ஆக்கம் அளிப்பதாக இருக்குமா? இப்போது வரிவிதிக்க லிமிட் 12½ ஸ்டான்டேர்ட் ஏக்கர் என்றிருக்கிறது. அதை வேண்டாமென்று எடுத்துக் கொள்கிறார்கள். வேளாண்மை வருமானம் உடையவர்கள் அவர்கள் அனுப்பும் கணக்குகளின் அடிப்படையில் வரி செலுத்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட வருமானத்திற்கு மேல் என்றிருக்கிறது. நம் விவசாயிகள் எல்லோரும் படித்தவர்கள் அல்ல. அவர்கள் கணக்குகள் வைத்துக்கொண்டு அரசாங்க அலுவலர்கள் தேவைப்பட்டபோது எடுத்துக் காட்ட முடியாது. ஆகவேதான் இந்த காம்போசிஷன் முறை வைக்கப் பட்டிருந்தது. அந்த லிமிட்டை வேண்டுமானால் குறைத்துக் கொள்ளலாம், ரேட்டை வேண்டுமானாலும் கூட்டிக் கொள்ளலாம். ஆனால் அந்த காம்போசிஷன் முறையை ரத்து செய்வது ஏழை விவசாயிகளுக்கு அல்லலை உண்டு பண்ணும்.

அடுத்தபடியாக, மோட்டார் வாகனவரி விதிப்பில் நிறைய பணம் கிடைப்பதற்கு இருக்கிறது. இப்போது மத்திய அரசின் திட்டத்தால் டிக்கட்டுகளின் விலையைக் கூட்ட வேண்டியிருக்கிறது. அதோடு நாமும் மோட்டார் வாகன வரியை உயர்த்தினால் பிரயாணிகள் மீதுதான் அதைத் திணிப்பார்கள். பஸ்களில் பிரயாணம் செய்கிறவர்கள் ஏழைகள். பணக்காரர்கள் என்றால் அவர்கள் தங்கள் கார்களில் செல்வார்கள். ஏழைகளைப் பாதிக்கும் வரியாக இது அமையும் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. வ. ஜார்ஜ்] [1967 ஜூன் 19

பிற்பகல் 12-30 பிறகு, பஸ்களை தேசியமயமாக ஆக்குவதைப் பாராட்டவேண்டுமென்று விரும்புகிறார்கள். தேசியமயமாக ஆக்குவதை நான் விரும்புகிறவன்தான். இது வரையில் நடந்துகொண்டிருக்கும் முறையைப் பார்க்கும்போது, இப்போது தேசியமயமாக்க வேண்டுமா என்று சிந்திக்கவேண்டும். நமது அரசாங்க பஸ் இலாகாவில் பெரும் நஷ்டமே தான் வந்துகொண்டிருக்கிறது. பொது மக்கள் பணத்தை முதலீடு செய்து, நஷ்டத்தையும் பொது மக்கள் பேரில் வரியாகத் திணிப்பது நல்லதல்ல. அதை மேலும் அதிகரிக்கும் முறையில் நாம் இப்போதே தேசியமயமாக ஆக்க வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை இல்லை. இதைச் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

இதிலே வேறு ஒரு குறை இருக்கிறது. தேசியமயமாக ஆக்க வேண்டும் என்ற ஒரு காரணத்திற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், புதிய பஸ் ரூட்ஸ் சாங்ஷன் ஆன இடங்களில் பஸ்கள் விடப்படாமல் இருப்பதைப் பார்க்கிறோம். இங்கு பஸ்கள் தேசியமயமாக ஆக்கப்படும்போது அந்த ரூட்டுகளிலெல்லாம் பஸ்களை விடுவதற்கு அதிக பஸ்கள் வேண்டியிருக்குமென்பதால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வேறு தனியார் பஸ்கள் இல்லாது ரூட்டுகள் இருந்தாலும், ரூட்டுகள் சாங்ஷன் ஆகியும் பஸ்களை விடுவதில் காலதாமதம் செய்யப்படுகிறது; பஸ்கள் விடப்படாமல் இருக்கிறது. இந்த நிலைமை வருகிறது. இதையெல்லாம் உன்னிப்பாக கவனித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ்களை தேசிய மயமாக்குவதால் பொது மக்கள் நன்மை அடைகிறார்களா என்று பார்த்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பதைப் பார்த்து உள்ளபடியே மெச்சிச் சொல்ல ஒன்றும் இல்லை. ஒரு ஏழை குடியானவன் பஸ்ஸில் ஏறுகிறான் என்றால் அவன் அலட்சியப்படுத்தப்படுவதைப் பார்த்தாலும், ஒரு ஏழைக் குடியானவன் ஒரு இடத்தில் நின்றுகொண்டு பஸ்ஸை நிறுத்திக் கையைக் காட்டும்போது காணாதது போல் போவதைப் பார்த்தாலும், அது பொது மக்களின் நன்மைக்காகச் செயல்படுவதாகத் தோன்றவில்லை. நல்ல வெள்ளை வேட்டி கட்டியவன் கையைக் காட்டினால் பஸ்ஸை நிறுத்துவதும், ஏழைக் குடியானவன் கையைக் காட்டினால் பஸ்ஸை நிறுத்தாமலேயே போவதுமான நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் உன்னிப்பாக கவனித்து, திருக்குறள் படிப்பதற்கு பதில் இந்த நல்ல பண்புகளைப் படிக்க, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலப்பு மணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் அளித்து சமுதாயச் சீர்திருத்தம் செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலும் சில குறைகள் இருக்கின்றன. தங்கப் பதக்கத்தை வைத்துக்கொண்டு அவர்கள் செழிப்பாக வாழ முடியாது; தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டதால் அவர்கள் வாழ்க்கையில் வளம் பெற முடியாது. தங்கப் பதக்கத்தை வைத்துக் கொண்டு பெருமை அடித்துக்கொள்ளலாம்; டம்பம் அடித்துக் கொள்ளலாம்; வாழ்க்கைக்குத் தங்கப் பதக்கம் வசதி செய்ய முடியாது. கலப்பு மணத்தில் பெரிய இடையூறு என்னவென்றால், இரண்டு குடும்பங்களில் இருக்கின்றவர்களுமே அவர்களைப் புறக்கணித்து விடுவார்கள். அப்படிப் புறக்கணிப்பதால் அந்தத் தம்பதிகள் வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கே சிக்கல் ஏற்படுகிறது. வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கு வசதி செய்யாமல் பதக்கம் அளிப்பதானது, பதக்கத்தை வைத்துக்கொண்டு டம்பம் அடித்துக்கொள்ளத்தான் பயன்படும். கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு, தொழில் வாய்ப்பு அளிப்பதில் முதலிடம் கொடுக்கலாம். தொழில் ஏற்படுவதற்கு கடன் வசதி கொடுக்கலாம். அவ்வாறு செய்தால் கலப்பு மணத்தை ஆதரித்து, ஜாதிக் கட்டுப்பாடுத் தடையை முறியடிக்கும் திட்டமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



பிறகு, கல்விச் சலுகைகளைப் பற்றிக் கூறினார்கள். ஏழைகளுக்குக் கல்விச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. பின்னும் மார்க் அடிப்படையிலே ஸ்காலர்ஷிப் வழங்குகிறோம். நான் முன்னமேயே இந்த மன்றத்தில் கூறினேன். நாம் கல்விச் சலுகை அளிக்கும்போது ஏழை பணக்காரர் என்று பாகுபாடு இல்லாமல், சில கோடி நஷ்டம் வந்தாலும், நாட்டின் எதிர்கால மக்கள் இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ், சுப்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் என்ற மனநிலை வேறுபாடு அடையாமல் சுபிட்சமாக வாழவேண்டுமானால் அனைவருக்குமே அளிக்கவேண்டும்; வருமான அடிப்படையில் கல்விச் சலுகை அளிப்பது என்றால் கல்லூரியிலே உடனே வசதி படைத்தவன், வசதி படைக்காதவன் என்ற வகுப்புகளைச் சிருஷ்டிக்கும் முறையில் இரு வகுப்பு மாணவர்களுக்கும் இடையில் போட்டி மனப்பான்மை ஏற்படும் என்று நான் கூறினேன். சமதர்ம சமுதாயத்தை அமைக்கவேண்டுமானால், சில கோடி ரூபாய்கள் நஷ்டம் வந்தாலும், கல்விச் சலுகையை அனைவருக்கும் அளித்திருக்க வேண்டும். பணக்காரர்களிடமிருந்து பணம் வசூலிக்கவேண்டுமென்றால் அதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. பணக்காரர்களிடமிருந்து ஃபீஸ் வாங்குவதால் மட்டும் அந்த எண்ணம் ஈடேறும் என்று கருதுவது தவறு.

இப்போது முத்திரை வரியில் மாறுதல் செய்கிறார்கள். இப்போது எவேஷன் இருக்கிறது. அதைத் தடுக்க வழிகள் செய்யவேண்டும் என்று நிதித் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையில் எவேஷன் இருப்பதைத் தடுக்க வேண்டியதுதான். திட்டம் நல்ல திட்டம்தான். ஆயினும் அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொது மக்கள் விரும்பினால் கூட, தங்கள் தேவைக்கு

ஏற்ப முத்திரைத் தாள்களை வாங்கி ஆவணங்கள் செய்துகொள்ள வசதியின்றி இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், கடந்த ஒரு வருஷ காலமாக அங்கே முத்திரைத் தாள்கள் பஞ்சம். நூறு ரூபாய்க்குப் பத்திரம் வாங்கவேண்டுமானால் 150 கொடுத்து, அடுத்த ஜில்லாவுக்குப் போய் வேறு பெயர் வைத்து வாங்கி விற்பனை செய்யும் பிசினஸ் நடக்கிறது. பத்திரம் வேண்டுமென்று சொல்லும்போது கிடைப்பதில்லை. இந்தக் குறைகளை நிவர்த்தி செய்தாலேயே முத்திரை வரி கூடுதலாகப் பெற முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது.

முத்திரை வரியைப் பொறுத்த வரையில் சொத்துக்களின் மதிப்பைக் குறைத்து எழுதும் சிக்கல்களைப் போக்க சப்-ரிஜிஸ்ட்ராருக்கு அதிகாரம் கொடுத்து கலெக்டருக்கு ரெஃபர் செய்யச் சொல்லுவதால் பொது மக்கள் வழக்காடும் நிலைமை ஏற்படும். நம் நாட்டிலே உதவிப்பதிவாளர்கள் பெரிதும் நேர்மை உள்ளவர்கள் என்ற நல்ல பெயர் சம்பாதித்திருக்கிறார்கள். ஒரு டாக்குமென்ட்டைப் பதிவு செய்யவேண்டுமென்றால் மாமூலாகக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால்தான் உடனடியாகப் பாதிக்கப்படும். இல்லாவிட்டால் ஒரு நாளில் ஆக வேண்டியதை ஒரு மாதத்திற்கு மாற்றி வைக்கப்படும் நிலைமை இருக்கிறது. இப்போது அவர்களைச் சரியான முறையில் கவனிக்காமல் இருந்தால், குறைந்த விலையில் இருக்கிறது என்று அவர்கள் மனப்பூர்வமாகச் சொல்லுவார்கள். இப்போது கூட, சட்டத் திருத்தம் இல்லாமலேயே ஒரு சர்க்குலர் இருக்கிறது என்று நினைக்கிறேன். விலை குறைந்து இருந்தால் பத்திரங்களைப் பதிவு செய்யக்கூடாது என்று இருக்கிறது என்று நினைக்கிறேன். அதை வைத்துக் கொண்டே அநேக சப்-ரிஜிஸ்ட்ரார்கள் பல இடைஞ்சல்களைச் செய்கிறார்கள். உண்மையிலேயே சப்-ரிஜிஸ்ட்ரார் கச்சேரி இருக்கும் இடத்தில் சென்ட் 100 ரூபாயாக இருக்கும்போது ஊருக்கு வெளியே 100 ரூபாயாக இருக்காது. 'இந்த இடத்தில் 100 ரூபாயாக இருக்கும்போது அங்கு ஏன் இல்லை' என்று பேரம் பேசுவதற்கு ஒரு தூண்டுதலாக இருக்கிறது. இதைச் சிந்தித்துச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன் பேசிய நண்பர் ஒருவர், 'அரிசி இப்போது எங்கு பார்த்தாலும் 90 பைசாவுக்குக் கிடைக்கிறது; விலையைக் குறைத்து விட்டோம்' என்று இறுமாப்புடன் பேசினார்கள். ஒரு ரூபாய்க்கு படி அரிசி கொடுக்கவில்லையா என்று கேட்டார்கள். இப்போது கொடுக்கக் கூடிய அரிசி கூட படி ரூ. 1.06 ஆகிறது என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அப்படிக் கொடுக்கப்படும் அரிசி கூட மூன்றாம் தர அரிசி—முதல் தர அரிசி அல்ல; இரண்டாம் தர அரிசி அல்ல. அதைப் புள்ளி விவரங்களே சுட்டிக் காட்டுகின்றன. அரசாங்கம் எதிர்பார்த்தது 80 சதவீதம் மக்கள் ஒரு படி அரிசியை வாங்குவார்கள் என்று. தரக் குறைவான அரிசி போடுவதால் 60 சதவீதம் மக்கள்தான் வாங்குவதாகப்



பார்த்தோம். நாடெங்கிலும் எங்கு பார்த்தாலும் 90 பைசா என்று இறுமாப்புடன் பேசிய நண்பரைக் கேட்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்த இடத்திலாவது 2¼ ரூபாய், 2½ ரூபாய்க்குக் குறைந்து ஒரு படி அரிசி வாங்க முடியுமா? விளவங்கோடு பகுதியில் 4 ரூபாய் அளவுக்குப் போயிருக்கிறது. மழை பெய்தபோது ஐந்து ரூபாய்க்குக் கூட அரிசி கிடைக்காத நிலைமை ஏற்பட்டதை எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறேன். படி அரிசி கொடுப்பதைக் கூட சென்னை மாநகரத்தில் கொடுப்பதற்கு முன்னால், வறட்சி அடைந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொடுத்திருக்கவேண்டும். அங்கே நாஞ்சில் என்ற பகுதி இருக்கிறது. அது நெல் வளம் செழித்த பூமி. அங்கே அரிசி ரூ. 2¼-க்குத் தான் கிடைக்கிறது. உறுப்பினர் அவர்கள் 90 காசுக்கு அரிசி கிடைப்பதாகக் கூறினார்கள். அந்த இடத்தை எங்களுக்குக் கொஞ்சம் காட்டினால் நாங்கள் அங்கே சென்று வாங்கிக்கொண்டு பயன்பெற முடியும், நாடும் பயன்பெறும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மாம்பழத்துறைத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. அதுபற்றி பட்ஜெட்டில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. பத்மநாபபுரம், குளச்சல் நகராட்சிகளுக்கும், மற்ற பஞ்சாயத்துகளுக்கும் குடிநீர் வழங்கக் கூடிய உரிய சிறிய திட்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு வழிவகைகள் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்குள்ள பாடசாலைகளை தொழில் ஸ்தாபன அமைச்சர் அவர்கள் பார்த்துவிட்டு மாட்டுக் கொட்டில் போல இருக்கிறது என்று கூறினார்கள். பாடசாலைகள் தகுதியற்ற கட்டடங்களில் இருக்கின்றன என்று கூறினார்கள். அத்தகைய பாடசாலைகளுக்கு கட்டட வசதிகள் செய்துகொடுப்பதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை என்பதைக் குறித்து நான் கவலைப்படுகிறேன்.

தக்கலை பஞ்சாயத்து யூனியனில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவதற்காக செம்பரத்திவிளை என்ற ஊரில் ரூ. 100 வாடகைக்கு ஒரு கட்டிடம் எடுத்து, மருந்து சாதனங்களும் வந்து இரண்டு வருடங்கள் ஆகியும், டாக்டர்கள் கிராமப் பகுதிக்குச் செல்ல விரும்பவில்லை என்ற குறையினால், அங்கு இன்னும் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, அரசாங்கம் இதில் உடனடியாக கவனம் செலுத்தி அங்கே சீக்கிரத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. எஸ். அக்னிராஜு: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, 1967–68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைத் தந்தமைக்கு நன்றி செலுத்திக் கொள்கிறேன்.

தமிழ் மக்கள் நீண்ட நாளைய ஆவலையும், வாழ்க்கையில் கடைக் கோடியில் உள்ள ஏழை எளிய மக்களின் எண்ணத்தையும் நிறைவேற்றுகிற வகையில் இந்த அறிக்கை அமைந்திருக்கிறது என்பதை பத்திரிகை வாயிலாக நாம் இப்பொழுது படித்துக் கொண்டு வருகிறோம். 1967 ஜூலை முதல் தேதியிலிருந்து புஞ்சை நிலங்களுக்கு உள்ள அரைப்பங்கு தீர்வையை ரத்து செய்வது, 75 மைல்களுக்கு மேலுள்ள பஸ் வழித் தடங்களை மேற்கொள்வது, இந்த மாநிலத்தில் 13 லட்சம் ஏக்கரில் ஏ.டி.டி. 27 என்ற புதுரக நெல்லை விளைவிப்பது, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 11 கோடி 69 லட்சம் ஒதுக்கியிருப்பது, ரூ. 1,500-க்குக் குறைவான வருமானமுள்ள அனைவருக்கும் ஜாதிமத பேதமில்லாமல் எல்லோருக்கும், பிற்பட்டவர்கள் அனைவருக்கும் இலவசக் கல்வி அளிப்பது, கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு சலுகை அளிப்பது, சமூக சீர்பாடு வளர்ந்திட சீரணியை அமைத்திடும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது, ரூ. 15,000-க்குக் குறைவாக வியாபாரம் செய்யும் சிறிய வியாபாரிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்துள்ளது ஆகிய திட்டங்களினால் பயன்பெறுபவர்கள் அத்தனை பேர்களும் ஏழை மக்கள், வாழ்க்கையில் கடைகோடியில் இருப்பவர்களாகும். எனக்கு முன்பு இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் இருக்கிற அவர்கள் எப்படி ஆதரித்துப் பேசமுடியும் என்ற தோரணையில்தான் எதிர்த்துப் பேசினார்கள். நாங்கள் இறுமாப்புடன் பேசுகிறோம், டம்பத்துடன் பேசுகிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். முன்னால் பேசிய அருமை உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் நாவரட்சிக்காக அடிக்கடி தண்ணீர் குடித்துக்கொண்டு பேசினார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சொற்களை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இருபது ஆண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் பார்க்கவில்லை. இருபது ஆண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த உறுப்பினர்கள் அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவார்கள் என்று நாங்கள் கருதவில்லை. நாட்டிலே முன்பு இருந்த நிலை மாறி, ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு, ஒரு சில தனிப்பட்டவர்கள் கையில் இருக்கக் கூடிய பொருளாதார அமைப்பை மாற்றி, வாழ்க்கையில் கடைகோடியில் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்திருக்கிறோம் என்ற எண்ணத்தினால்தான் அவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம்.

இந்த அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்கிற நேரத்திலே இது ஒரு ஜாதிமத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வழிகோலுகிறது என்பதையும், பொருளாதாரத்தை சமநிலைப் படுத்துவதற்கு திறவுகோலாக இருக்கிறது என்பதையும் இந்த அரசாங்கம் நல்ல ஜனநாயகத்தை உண்டாக்கியிருக்கிறது என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் என்னுடைய சில கருத்துக்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். புஞ்சை நிலம் பயிரிடுபவர்களுக்கு தீர்வை



ரத்து செய்த நேரத்தில், அதிலே ஈடுபட்டு வேலை செய்கின்ற கர்ணம், வில்லேஜ் முனிசிப் ஆகியோர்களைப்பற்றிய கேள்விக்கு இன்று காலை பதில் அளிக்கப்பட்டது. அந்த கிராம உத்தியோகஸ்தர்களுக்கு ஏதாவது சலுகைகள் அளிக்கப்படுமா, அல்லது அவர்களுடைய வேலைமுறை மாற்றப்படுமா என்ற கேள்வியெல்லாம் வந்தது. ஒரு கிராமத்தில் வேலை செய்துகொண்டிருக்கிற கிராம முன்சிப், கர்ணம் அங்கே ஒரு குட்டி சர்வாதிகாரியாக நடந்துகொண்டிருக்கிறார்கள். நான்கு, ஐந்து பஞ்சாயத்துக்களை ஒன்று சேர்த்து ஒரு யூனிட்டாக அமைத்து, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்க அதிகாரி நியமிக்கப்பட்டால், இப்படிப்பட்ட குறைபாடுகள் நீங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஏ.டி.டி. 27 நெல் ரகத்தை எல்லா மாவட்டங்களிலும் புகுத்துகிற நேரத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிக அளவுக்கு அறிமுகம் செய்திருக்கிறார்கள். தஞ்சாவூர் மாவட்டத்தைப் போன்ற பிற மாவட்டங்களிலும், குறிப்பாக மதுரை மாவட்டத்திலும் ஏ.டி.டி. 27 புதுரக நெல்லை சரியாக அறிமுகப்படுத்தினால், அந்த வகையிலே உற்பத்தியை அதிகரிக்க முடியும். அப்படிப் பட்ட புதுரக நெல்லை கூடிய சீக்கிரம் இந்த ஆண்டில் அறிமுகப் படுத்தினால் மேலும் விளைச்சல் இரட்டிப்பாவதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக சுமார் ரூ. 11 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியைக் கொண்டு மதுரை மாவட்டத்திலுள்ள ஏரிகள், குளங்கள், வாய்க்கால்கள் ஆகியவைகளை துப்புரவு செய்வதன் மூலமும், சீர்செய்வதன் மூலமும் மதுரை மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் நிலத்தில் சாகுபடி செய்ய முடியும். குறிப்பிட்டுச் சொல்லப் போனால், மதுரை மாவட்டத்தில் நிலையூர் பெரிய வாய்க்கால், 1,500 ஏக்கர் விளைவிக்கக்கூடிய வாய்க்கால் இருக்கிறது. கடந்த 20 ஆண்டுகாலமாக காங்கிரஸ் பெரியார்களிடம் இதைப்பற்றி சொல்லியும் பலன் ஏற்படவில்லை. சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்காக ஒதுக்கியிருக்கிற நிதியைக்கொண்டு இந்த வாய்க்காலை துப்புரவு செய்து, செம்மைப்படுத்தினால், மேலும் 5,000 ஏக்கர்களுக்கு அதிகமாக பாசன வசதிகிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இந்த அரசாங்கம் உடனே ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னைக்கு அடுத்தாற்போல் மதுரை மாவட்டம் இருக்கிறது என்று சொன்னாலும், திருச்சி, கோவை போன்ற இடங்களில் பெரிய தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. தொழில் வளத்தில் இந்த மூன்று நகரங்களும் வளர்ந்திருக்கின்றன.

ஆனால், மதுரை மாவட்டத்தில் மதுரை மாநகரத்தில் எந்த விதமான முன்னேற்றமும், தொழில் வளர்ச்சியும் ஏற்படவில்லை. மதுரை மாவட்டத்தில் ஒரு பெரிய தொழிற்பேட்டை வேண்டும் என்று கருதி, 2, 3 மாதங்களுக்கு முன்பு மதுரைக்கு அருகே கப்பலூர் என்ற இடத்தில் அரசாங்கம் 600 ஏக்கர் நிலம் ஒதுக்கி, அதற்கான வேலைகள் துவங்கப்பட்டன. ஆனால், இப்பொழுது அந்த வேலைகள் நிறுத்தப்பட்டு, ஏற்கனவே அரசாங்கம் எந்த நிலங்களை மேற்கொண்டார்களோ, அந்த நிலங்களை மீண்டும் விவசாயிகளுக்குக் கொடுத்துவிடுவது என்று முடிவு செய்து, அந்த நிலங்கள் இப்பொழுது வழக்கில் விடப்படுகின்றன. இதனால் அங்கிருக்கிற மக்களுக்கு கப்பலூரில் தொழிற் பேட்டை நிறுவப் படாது என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே ஒரு தொழிற் பேட்டை ஏற்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த அளவில், முன்பு பேசிய கனம் உறுப்பினர்கள் பல பேர் விளைச்சலைப் பெருக்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், கொள்முதல் செய்கிற நேரத்தில் விவசாயிகள் படுகிற தொல்லைகளைப் பற்றி சொன்னார்கள். விவசாயிகளுக்கு கொள்முதல் விலைக்கும், மார்க்கெட் விலைக்கும் இடையிலே குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 13, 14 நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தை ஈடுகட்டுகிற வகையில், விவசாயிகளுக்கு நல்ல ஊக்கமும், ஆக்கமும் கொடுக்கக்கூடிய விதத்தில் ஏதாவது சலுகை அளித்தால்தான், மேலும் விவசாயத்தைப் பெருக்குவதற்கு நல்ல ஆதரவு இருக்கும் என்று கிராமப்புற விவசாயிகள் மத்தியில் ஒரு எண்ணம் இருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணங்களை நாம் நடைமுறைக்குக் கொண்டுவருகிற வகையில், விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களை கூட்டுறவு அங்காடிகள் மூலம், தனிப்பட்ட சலுகைகள் அளித்து, அவர்களுக்குக் கிடைக்கும்படி செய்தால், விவசாயிகளுக்கு மேலும் ஆர்வத்தை உண்டாக்க அது ஏதுவாக இருக்கும் என்று கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த ஏ.டி.டி. 27 என்கிற நெல்லைப் பொறுத்தவரை ஏக்கருக்கு நான்கு மூட்டை அதிகமாக உற்பத்தியாகிறது என்று அம்கூட மதுரையைப் பொறுத்தவரையில் இந்த ஏ.டி.டி. 27 விதையை அறிமுகப்படுத்தியபோது, அதற்கு வேண்டிய உரம் கிடையாது. உரம் தஞ்சை மாவட்டத்திலே போல, மதுரை மாவட்டத்திலும் தேவைப்படும் அளவிற்கு நைட்ரேட், சல்பேட் உர வகைகள் கொடுக்கப்பட ஏற்பாடு செய்யவேண்டும். அப்பொழுது நான் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தரிசு நிலங்களில் எத்தனையோ அரிசனங்கள் விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலங்களுக்கு உத்திரவாதம் கிடையாது. பட்டா கொடுக்கப் படுவதில்லை.



ஏழை அரிசனங்கள் பட்டா கேட்டால், உடனடியாகக் கொடுத்தால் நலமாக இருக்கும். சர்க்கார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுத்து, உடனடியாக சர்க்கார் தாக்கீது அனுப்பவேண்டும். அப்படிச் செய்தால் மிக்க நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, ஸ்டாம்பு விற்பனையாளர்கள் அதிகப் பணம் கொடுத்தால்தான் பத்திரம் கொடுக்கிறார்கள். அதனால் ஏழை எளியவர்கள் வாங்க விற்க முடியவில்லை. அவர்கள் தொல்லை கொடுக்கிறார்கள். அப்படி பத்திரம் விற்பவர்களின் தொல்லையிலிருந்து விடுபட பதிவு செய்யும் அலுவலகத்திலேயே ஒரு கிளார்க்கைப் போட்டு, அவர் மூலம் விற்பனை செய்தால், லாபகரமாக இருக்கும். ரெஜிஸ்ட்ராரிடம் அந்தப் பணத்தைக் கட்டிவிட வேண்டும் என்று ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும். அப்படி ஏதோ சர்க்கார் உத்தரவு இருப்பதாகச் சொல்கிறார்கள். அதை நல்ல முறையில் அமல் நடத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கைமீது என் கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக நன்றி செலுத்தி, இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று, என் ஆதரவைத் தெரிவித்துக் கொண்டு, முடிக்கிறேன்.

* திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு இந்த பட்ஜெட்டின் விஷயங்கள் பற்றிப் பேச அனுமதி அளித்தமைக்கு முதற்கண் என் வணக்கத்தைக் கூறிக் கொள்ளுகிறேன். இன்றைக்கு நம்முன் உள்ள வரவு செலவுத் திட்டம், தமிழ்நாடு முழுவதும் மக்கள் வரவேற்கும் திட்டம். ஆனால், எனக்கு முன்னால் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், இந்த வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டு மக்கள் குழப்பம் அடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். உண்மையாகவே, கடந்த 20 ஆண்டு காலத்தில், இதே போல ஒவ்வொரு ஆண்டிலும் எந்த வரவு-செலவுத் திட்டத்தைக் கண்டு அடையாத குழப்பத்தையா இந்த பட்ஜெட் வந்தவுடனே மக்கள் அடைந்து விட்டார்கள்? (ஆரவாரம்). மக்கள் குழப்பம் அடைந்திருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இவர்கள் வேண்டுமானால் குழப்பம் அடைந்திருக்கலாம். இவர்கள் பட்ஜெட் எப்படி இருக்கும் என்று எதிர்பார்த்தார்களோ அதற்கு மாறாக வந்திருப்பதால் குழப்பமாக இருக்கலாம் என்றுதான் நான் நினைக்கிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இருக்கும் முக்கியமான அம்சங்களைப் பார்த்தால், முன்னால் பேசிய கன்யாகுமரி நண்பர் நல்ல அம்சங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன என்று சொன்னதைப் பார்த்தால், அவர்களிலேயும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. உண்மையாகவே, முக்கியமானவற்றில் குறிப்பிடத் தக்கது.

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1967 ஜூன் 19

புஞ்சை நிலத்திற்கு வரி ரத்து செய்வது என்பது. அவர்கள், காங்கிரஸ்காரர்கள், என்ன கூறுகிறார்கள்? 'ஏற்கனவே, நாங்கள் ஆட்சியிலிருக்கும்போதே, நஞ்சை புஞ்சை எல்லாவற்றிற்குமே வரியை ரத்து செய்யத் திட்டமிட்டிருந்தோம். ஆனால் திரும்பவும் நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை. புஞ்சைக்கு மட்டும்தான் வரி ரத்து செய்கிறார்கள்' என்று மக்களைத் தூண்டிவிடுவதுபோல், பத்திரிகைகளில் வந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆனால், புஞ்சைக்கு ரத்து செய்யும்போது, நஞ்சைக்கு ரத்து செய்வதும் பரிசிலனையில் இருக்கிறது என்பதை கனம் முதல் அமைச்சர் சுட்டிக் காட்டினார்கள். இன்றைக்கு 1,40,000 ஏக்கரா நிலத்தில் உள்ளவர்கள் வரி ரத்தினால் நன்மையடைவார்கள் என்று சொல்லும்போது, 20 பைசாவிலிருந்து ரூ. 1.40 வரை நன்மை ஏற்படும். அதே நேரத்திலே, அதன் மூலமாக ஏற்படக் கூடிய இழப்பு சர்க்காருக்கு ரூ. 1,60,000 என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்தே, இது ஒரு எடுத்துக்காட்டு என்பதைப் புரிந்துகொள்ளலாம். நிலக்கிழார்கள், மஞ்சள் முதலியவை சாகுபடி செய்பவர்கள், பணப்பயிர் சாகுபடி செய்பவர்களும் இதை வரவேற்பார்கள். அதே நேரத்திலே, பஸ்கள் இன்றைக்கு நாட்டு உடைமையாக்கப்படுகிறது, இதற்கு முன்னால் இருந்த அரசு தேசிய உடைமை, தேசிய உடைமை என்று வாயளவில் பேசினாலும், தேசிய உடைமை என்கிற காரியத்தில் அவர்கள் எதையும் செய்யவில்லை என்பதை நாம் அறிவோம்.

இன்றைக்கு முதல் அமைச்சர் பஸ்களை தேசியமயமாக்குவதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிவோம். அது மிக
பி.ப. 1-00 முக்கியமானது, வரவேற்கத்தக்கது. குறிப்பாக சென்னை, இன்னும் கன்யாகுமரி ஆகிய இரண்டு இடங்களிலும் ஒர்க் ஷாப்புகள் இருப்பதால் உடனடியாகச் செய்யப் படுகிறது. அதே நேரத்திலே நான் ஒரு யோசனையைக் கூற விரும்புகிறேன். மதுரை பெரிய நகரம். அதிகமான பஸ் போக்கு வரத்து உள்ள நகரம். அங்கேயும் இந்தத் திட்டத்தை அமல் நடத்த வேண்டும். அதே நேரத்திலே, 75 மைல் என்றிருப்பதை, 50 மைல் என்று கூடச் செய்யலாம். அதையும் பரிசீலனை செய்து, மதுரை போன்ற இடங்களிலும் பஸ்களை அரசே எடுக்கும் வாய்ப்பும் வசதியும் இருப்பதை ஆராய வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்து, உணவு உற்பத்திப் பெருக்கம். இது மிகவும் முக்கியமான விஷயம் என்பதை எல்லோரும் வற்புறுத்தியிருக்கிறார்கள். இன்று உணவுஉற்பத்தியில் அரசு கவனம் செலுத்தியிருக்கக்கூடிய விஷயங்களில், இரு போக சாகுபடிக்கு நிலங்களை எடுத்துக் கொள்ளுவதும் ஒன்றாகும். அதே மாதிரி, உர விநியோகம், சிறிய நீர்ப்பாசனம், பொறுக்கு விதைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதிலே நான் குறிப்பிட விரும்புவது ஒன்றுண்டு. இந்த நல்ல அம்சங்களைக் கொண்டு வருவதன் மூலமாக உணவு உற்பத்தி அவசியமாகப் பெருகும் என்பது

1967—68-ம் ஆண்டிற்கான



1967 ஜூன் 19] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

உண்மைதான். ஆனால், அதே நேரத்தில், ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளத் தவறியிருக்கிறோம் என்பதை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இத்தனை வசதிகளைச் செய்து கொடுத்தபோதிலும் கூட, மனித உழைப்பு என்பது உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகவும் அவசியம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். உணவுப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய லட்சோபலட்சம் விவசாய மக்கள், ஏழை விவசாயத் தொழிலாளிகள் இவர்களுடைய உழைப்புச் சக்தியும் மிகவும் அவசியம். உரம் அதிகமாகக் கொடுப்பது, விதை கொடுப்பது, நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுப்பது, ஒரு போக நஞ்சைகளை இரு போக நஞ்சைகளாக மாற்றுவது என்பவையெல்லாம் உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கியமானவை என்று எப்படி நாம் கருதுகிறோமோ, அதே மாதிரி, ஏழை விவசாயத் தொழிலாளிகளுடைய உழைக்கும் சக்தியும் உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகவும் முக்கியமானது என்பதை நாம் பார்க்க வேண்டும். அது ஏனோ இதில் விடப்பட்டிருக்கிறது. கவனக் குறைவினாலோ அல்லது என்ன காரணத்தினாலோ அது விடப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்கக்கூடிய உழைப்புச் சக்தியைக் கொடுக்கக்கூடிய லட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் வாழ வழியில்லாமல் தவிக்கிறார்கள். நிலத்தைச் சாகுபடி செய்து பிழைப்பதுதான் அவர்களுடைய வேலையாகும். ஆனால், அவர்களுக்கு நிலம் கிடையாது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டம், 60-40 சட்டம், நிலச் சீர்திருத்தச் சட்டம் என்று பல சட்டங்கள் போட்டிருந்தும்கூட, நிலத்தில் சாகுபடி செய்து கொண்டிருந்த பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள், இந்தத் தமிழகத்தில். அப்படிப் பரம்பரையாக உழைத்து வந்த விவசாயிகள் இன்றைக்குச் சட்டத்தின் மூலமாக நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, நிலமிழந்து நிற்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். நிலத்தில் உழைத்து, உற்பத்தி செய்ய அவர்களுக்கு ஆசை உண்டு; விவசாயத்திலே ஈடுபட வேண்டும் என்கிற நோக்கம் அவர்களுக்கு நிரம்ப உண்டு. ஆனால். அவர்கள் சட்டப்படி வெளியேற்றப்பட்டு விட்டார்கள்; நிலமில்லாமல் அவர்கள் தவிக்கிறார்கள். அவர்களுக்கு நிலம் வேண்டும். ஒரு ஏக்கர் நிலம் தன்னுடையது என்ற நிலையை அவனுக்கு இன்றைய சர்க்கார் ஆக்கிக்கொடுத்தால், அவன் தனக்காக மட்டுமல்லாமல், நாட்டுக்கும் உற்பத்தி செய்து தருவதற்குத் தயாராக நிற்பான் என்றுதான் நான் கருதுகிறேன். அப்படி நிலமிழந்த விவசாயிகளுக்கும், நிலமே இல்லாத கூலியாக இருக்கக்கூடிய பல ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கும் நிலங்கள் ஒதுக்கித் தரப்பட வேண்டும். நிலம் எங்கே இருக்கிறது? என்று கேட்கலாம். இன்றைக்குத் தரிசாக இருக்கக்கூடிய நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அரசாங்க உபயோகத்திற்குப் போக, இதுவரையில்

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1967 ஜூன் 19

உபயோகத்தில் இல்லாத, ஆனால் பயன்படக்கூடிய, நிலங்களாக இருந்தால், அந்த நிலங்களை நிலமிழந்த விவசாயத் தொழிலாளிகளுக்கு—சாகுபடியாளர் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு—தாராளமாக வழங்கி, அந்த நிலத்தில் அவர்கள் சாகுபடி செய்வதற்கு ஓரளவு நிதி உதவியும் செய்தால், நிச்சயமாக உணவு உற்பத்தி பெருக முடியும். விவசாயத் தொழிலாளிகளினுடைய உழைப்புச் சக்தியை எந்த அளவிற்கு உபயோகப்படுத்துகிறோமோ, அந்த அளவிற்கு உற்பத்தி பெருக முடியும். உணவு உற்பத்தி பெருகுவதோடு மட்டுமல்லாமல், அந்த இலட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையிலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும்; அவர்களுடைய பொருளாதாரமும் உயரும். அதன் மூலம் நாட்டின் வியாபாரம் செழிப்பதற்கும், வர்த்தகம் பெருகுவதற்கும் வகை ஏற்படும். ஆகவே, இதையும் ஒரு பிரச்சினையாகக் கருதி, இந்த மக்களுடைய பிரச்சினையைத் தட்டிக் கழிக்காமல், அதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்த அறிக்கையில் விடப்பட்டிருக்கிறது என்பதை ஞாபகப்படுத்துவதோடு, அதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதற்கு அடுத்தபடியாக ஒரு முக்கியமான அம்சம் இருக்கிறது. இதுவரையில் காங்கிரஸ் சர்க்கார் ஒரே ஒரு அம்சத்தைக் கவனிக்கத் தவறிவிட்டது—அதாவது, ஜாதி வித்தியாசத்தை அகற்ற வேண்டும் என்பது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் கல்விச் சலுகை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், 'வருமான அடிப்படையில்' என்பது அன்று விடப்பட்டிருந்தது. இன்று வந்திருக்கக் கூடிய முறையைப் பார்த்தால், நிச்சயமாக ஜாதி என்பதையே நீக்கிவிட்டு, ஏழை எளியவர்கள், வருமானத்தின் அடிப்படையிலேயே இந்தச் சலுகையை அடையலாம் என்ற ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பது முக்கியமான அம்சம் என்று கருதுகிறேன். இந்த அம்சம் எங்களாலே என்றும் கொண்டுவரப்பட்டது. ஆகவே, கொண்டுவந்திருக்கும் விஷயங்களிலே இன்னும் நன்மை பயக்கக்கூடிய முறையில் இருக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். அப்படிப் பார்க்கும்போது, இன்றைக்கு ரூ. 1.500 வரையிலும், அதற்குள்ளாக வருமானம் இருப்பவர்களும்தான் நன்மை அடைய முடியும். 1,500 ரூபாய் என்று சொல்லியிருப்பதனால், மத்திய தர மக்கள் விடப்பட்டுப் போகிறார்கள். இன்றுள்ள விலைவாசியில், மாதம் ரூ. 140 சாதாரணமாக ஆசிரியர்கள் வாங்குகிறார்கள்—அவர்களுடைய சம்பளம் மட்டுமல்ல, பஞ்சப்படியையும் சேர்த்துத்தான் அந்த வருமானத்தை அவர்கள் அடைகிறார்கள். அடிப்படைச் சம்பளம் மட்டும் என்று வைத்துக்கொண்டால், ரூ. 1,500 என்பது பொருத்தமாக இருக்கும். சம்பளமும் பஞ்சப்படியும் சேர்த்து ரூ. 1,500 என்று சொல்லும்போது, அந்த நன்மையை ஆசிரியர்களுடைய மக்கள் அடையமுடியாமற் போகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இருக்



1967 ஜூன் 19] [திருமதி கே. பி. ஜானகியம்மாள்]

கிறார்கள். தனிப்பட்ட மானேஜ்மெண்டில் உள்ள பள்ளிகளிலும் ஏராளமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். மேலும் என்.ஜி.ஓ.க்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய குழந்தைகள் இந்தக் கல்விச் சலுகையை அடைய முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகையால், குறைந்தபட்சம், ரூ. 1,500 என்று சொல்லக் கூடிய நேரத்தில், இன்றைய மதிப்பு ரூ. 1,000 ஆகத்தான் இருக்கும். ரூ. 1,500 என்று இருப்பதை ரூ. 2,000 என்று உயர்த்தினால், ஓரளவிற்கு நலமாக இருக்கும். தகுதியானவர்களுக்கும் கொஞ்சம் சலுகை கிடைக்கக்கூடும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, இரண்டாயிரம் ரூபாய் என்று உயர்த்துவது அவசியம் என்று அரசுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, கொள்முதலைப்பற்றி ஒரு வார்த்தை. மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க வேண்டும் என்ற பொறுப்பை அரசு ஏற்றுக் கொண்டதை நாங்கள் வரவேற்கிறோம். கோவையிலும், சென்னை நகரத்திலும் கொடுப்பது மட்டுமல்ல, பின்னர் படிப்படியாக, எல்லா ஜில்லாக்களிலும் கொண்டுவர வேண்டும் என்ற நல்ல எண்ணம் இருப்பதையும் வரவேற்கிறோம். இதற்கெல்லாம் முக்கியத் தேவை என்னவென்றால், சர்க்கார் கையில் அதிகப்படியான தானியச் சேமிப்பு இருக்க வேண்டும் என்பது தான். இந்த அறுவடையில் நாம் சேமித்து வைத்திருப்பது ஐந்து லட்சம் டன் தான். இன்னும் மூன்று லட்சம் டன் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், எல்லாப் பகுதிகளுக்கும், ஜில்லாக்களில் கட்டாய ரேஷன் இருக்கக்கூடிய இடத்திலும், பரீட்சார்த்த ரேஷன் இருக்கக்கூடிய இடத்திலும், ரேஷன் இல்லாத கிராமப் பகுதிகளிலும் ஓரளவிற்கு உணவு உத்திரவாதம் செய்யவேண்டுமென்றால் நிச்சயமாக 15 லட்சம் டன்னாவது அரசாங்கத்தின் கையில் கொள்முதல் செய்து வைத்திருந்தால்தான் அது சாத்தியமாகும். அதிகப்படியான ஸ்டாக் வைத்திருப்பதின் மூலமாகத்தான் அதிகப்படியான மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போட முடியும் என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையாகும். அப்படிச் செய்ய வேண்டுமென்றால், நிச்சயமாக இன்றைக்கு இருக்கக் கூடிய கொள்முதல் முறைப்படி சென்றால் நடக்காது என்பது அனுபவத்திலிருந்து தெரிந்திருக்கக்கூடிய உண்மை. இப்பொழுது கொள்முதல் செய்யக் கூடிய நேரத்தில், அங்கே இருக்கும் அதிகாரிகள், இருபது வருஷங்களாக நிலப் பிரபுக்களுக்கும் அவர்களுக்கும் இருந்த உறவு முறையின் காரணமாகவோ, என்னவோ அவர்கள் பெரு நிலக்கிழார்களிடத்தில் சென்று தைரியமாக வசூலிப்பது கிடையாது. சாதாரண மக்களிடத்தில் அவர்கள் தயக்கம் இல்லாமல் போகக்கூடிய தன்மை இருக்கிறதே தவிர, பெருநிலக் கிழார்கள் எப்போதும் விடப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மையான விஷயம். ஆயிரக் கணக்கான, நூற்றுக்கணக்கான ஏக்கர்கள் வைத்திருக்கக்கூடியவர்கள் என்று நான் சொல்லும்போது, மற்றவர்கள் சொல்லலாம், நிலச் சீர்திருத்தத்

[திருமதி கே. பி. ஜானகியம்மாள்] [1967 ஜூன் 19

தின்படி [illegible] தங்களுக்கு மேல் ஒருவர் வைத்திருக்க முடியாது என்று. ஆனால், நான் சொல்லுகிறேன், பட்டா மாறியிருக்கிறது தவிர, நிலங்களை யெல்லாம் அவர்கள்தான் அடைகிறார்கள் என்பதையும் நாம் மறுக்க முடியாது. அப்படி இருக்கக்கூடியவர்கள், இந்தக் கொள்முதலிலிருந்து இன்னும் ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகப்படியான மூட்டைகளை மறைத்து வைத்திருக்கிறார்கள்; வெளியிலே தங்கள் இஷ்டம்போல் விற்று வருகிறார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அப்படியென்றால், அந்த அதிகாரிகளை மட்டும் நம்பி, 15 லட்சம் டன்களைக் கொள்முதல் செய்வது என்பதும், ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுப்பதற்கான அளவிற்கு காரியங்களைக் கொள்முதல் செய்வது என்பதும் முடியுமா என்பதை யோசிக்க வேண்டும். ஆகவே, அதிகாரிகளை மட்டுமே நம்பியிருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய ஆணித்தரமான அபிப்பிராயமாகும். அவர்களை மட்டும் நம்பியிருந்தால், அதிக அளவை நம்மால் எடுக்க முடியாது. ஆகவே, நான் என்ன கூறுகிறேன் என்றால், அங்கங்கே, அந்தந்த ஜில்லாவில், அந்தந்தப் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள், கிராமப் பெரியவர்கள், மற்றும் காங்கிரஸ் கட்சி உட்பட எல்லாக் கட்சியினரையும் கொண்ட பிரமுகர்கள், அப்படிப்பட்டவர்களைக் கொண்ட பொதுஜனக் கமிட்டி—இல்லாத பொதுஜனக் கமிட்டி—ஒன்று இருந்தால், அந்தந்தக் கிராமத்தில், பட்டா வைத்திருக்கக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு இந்த வருஷம் என்ன விளைவு வந்தது, அதிலிருந்து என்ன கொடுத்தார்கள், பாக்கியை ஏன் கொடுக்கவில்லை, அவர்கள் வீட்டில் இன்னும் எவ்வளவு இருக்கிறது என்பதைப்பற்றி யெல்லாம் அந்தக் கமிட்டி நேரடியாகப் பார்த்து அரசாங்கத்தில் சொல்ல முடியும். அப்படிச் சொல்லக் கூடிய நேரத்தில், அதிகாரிகளும் அதில் ஒத்துழைத்து கொள்முதல் செய்ய வசதியேற்படும். அம்மாதிரி பொதுஜனக் கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த அளவிற்கு வரவேற்கக்கூடிய முக்கியமான இந்த பட்ஜெட்டை நான் முழுமனதோடு ஆதரிப்பதோடு, இந்தக் குறை பாடுகளைச் சுட்டிக் காட்டி, அவற்றை நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். காங்கிரஸ் நண்பர்கள் சொல்வது போல், அவர்களைப் போல நாங்களும் குறை சொல்லுகிறோம் என்பதல்ல. காங்கிரஸ்காரர்கள் குறைகளைச் சுட்டிக்காட்டுவது வேறு; நாங்கள் குறைகளைச் சுட்டிக்காட்டுவது வேறு. அவர்கள் வேண்டு மென்றே துஷ்பிரசாரத்திற்காகச் சுட்டிக்காட்டுகிறார்கள். நாங்கள் அரசு நல்ல முறையில் நடக்க வேண்டும் என்பதற்காகச் சுட்டிக் காட்டுகிறோம், இந்த நிர்வாகத்தைப் பலப்படுத்துவதற்காகச் சுட்டிக் காட்டுகிறோம் என்று கூறிக்கொண்டு என்னுரையை முடிக்கின் றேன். வணக்கம்.



1967 ஜூன் 19]

* திரு. பு. செ. முத்துச்செல்வன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை யின்மீது பேச எனக்கு வாய்ப்பு நல்கிய துணைத் தலைவர் அவர் களுக்கும், மன்றத்தில் உள்ள அனைவருக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து, எனது முதல் பேச்சைத் துவக்கு கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மிகவும் தெளிவான—நியாயமான—நேர்மையான—தூய்மையான எண்ணத்தோடு நிறைவேற்றப்பட டிருப்பது அனைவராலும் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். மாறாக, இந்த மன்றக் கட்சியிலே அமர்ந்திருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள், தங்களுடைய மனத்திலே அதைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணமிருந்தாலும், அப்படிப் பாராட்ட மனது துணியாது இருக்கிறார்கள். பொதுமக்களிடத்திலே போய் என்ன பேசுவது என்று புரியாமல் இருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கை பேசுவது என்று [illegible] வேண்டுமென்பதற்காகவே, மன்றத் திலே எதேனும் குறை கூற வேண்டுமென்பதற்காக, இருக்கின்ற நிலையிலே நிதிநிலை அறிக்கையை ஓரளவு பாராட்டிவிட்டு, குறைபாடுகளை எடுத்துச் சொல்லத் தயங்க மாட்டோம் என்று மிகவும் தேடித்தேடி எடுத்துச் சொன்னார்கள். அப்படிப் பேசுவது அவர்களுக்குப் பழக்கமாக அமைந்திருப்பதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. இந்த இருபதாண்டு ஆட்சிக் காலத்திலே செய்யப்படாத பல நல்ல காரியங்கள் இந்த சிறிய காலத்திற்குள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்களையும், மற்ற அமைச் சர்களையும் எவ்வளவுதான் பாராட்டினாலும் தகும். ஏழை விவசாயப் பெருமக்களும், நடுத்தர விவசாயப் பெருமக்களும் நன்மை பெறுகின்ற வகையில், விடியற்காலை மூன்று மணிக்குச் சென்று காலைப் பத்துமணி வரை தண்ணீர் இறைத்து, அந்த நிலத்திலே நெல் விளைவிக்க வேண்டிய விவசாயிகளுக்கு எல்லாம் நன்மை செய்ய வேண்டுமென்பதற்காக நில அடிப்படை வரியை—புஞ்சை நிலத்திற்கு மட்டும்—நீக்கியிருப்பது பாராட்டத்தக்க செயலாகும். வரி விலக்கு நஞ்சை நிலத்திற்கு ஏன் இல்லையென்று காங்கிரஸ் நண்பர்கள் கேட்டார்கள். அப்படி நஞ்சை நிலத்திற்கும் வரி விலக்கு அளித்திருந்தால், அதனால் வரி இழப்பு இன்னும் அதிக மாக இருக்கும் என்ற காரணத்தால், தற்போது புஞ்சை நிலத்திற்கு மட்டும் முதல்படியாக விலக்கு அளிப்பதற்கு அரசு முன் வந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்; அடுத்த ஆண்டு நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கும்போது அதனைப் பரிசீலிக்கலாம்.

அடுத்தபடியாக, இந்த நிலவரிக் குறைப்பின் மூலம் பயன் அடைகின்றவர்களைப் பார்க்கின்றபோது, நஞ்சை நிலத்திற்கு மட்டும் விலக்கு அளித்து அதனால் ஏற்படக்கூடிய விவசாயப் பெரு மக்களின் தொகையைவிட இந்த விவசாயப் பெருமக்கள் தொகை அதிகமாக இருக்கிறது. மேலும் 75 சத விகித விவசாய நில வுடைமையாளர்கள், பட்டாதாரர்கள் இதனால் பயன் அடைந் திருக்கின்றார்கள் என்று சொல்வதற்குக்கூட எதிர்க்கட்சி நண்பர்

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1967 ஜூன் 19

களுக்கு மனம் துணியவில்லையென்பதை எண்ணும்போது மனம் மிகவும் வேதனையாக இருக்கிறது. அந்த அளவிற்கு அவர்களுடைய பண்பும் மனநிலையும் இருக்குமானால் அதற்காக நான் கவலை கொள்ளவில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையில், கல்வித் துறைக்காக 54 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாகும். அது மொத்த வருவாய்த் துறையிலே 25 சதவிகிதம் என்ற அளவிற்கு இருப்பது மிகவும் பெருமைக்குரியதாகும். கல்லூரி செல்லக்கூடியவர்கள், பி.யூ.சி. வகுப்பு செல்லக் கூடியவர்கள் பயன் பெறத்தக்க வகையில், கல்விச் சலுகையாக நபரின் ஆண்டு வருமான வரம்பை ரூ. 1,200-லிருந்து 1,500-ஆக அதிகப்படுத்தியிருப்பதன் வாயிலாக, மேலும் கல்லூரிக் கல்வி பெற வழி செய்திருப்பது மிகவும் நல்ல ஒரு செயலாகும். அதுபோன்றே 1,500 என்பதை 2,000 ரூபாய் ஆக ஆண்டு வரம்பை உயர்த்தியிருப்பதன் காரணமாக மேலும் பலர் ஸ்காலர்ஷிப் பெறுகின்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ஹரிஜனங்களுக்குக் கல்விச் சலுகை கிட்டுவதுடன் அவர்கள் அதிகப் பயன் பெறுவதற்கும் வழி செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக, எனது தொகுதியிலே என்னுடைய பெருமுயற்சி இல்லாமலேயே கல்லூரி ஒன்று புத்துறம்பட்டியில் அமையவிருப்பது குறித்து என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக அறிஞர் அண்ணா அவர்களுக்கும் கல்வியமைச்சர் அவர்களுக்கும் எல்லோருக்கும் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த வரிவிதிப்பு முறையைப் பார்க்கும்போது இது ஏழை எளியவர்களையும், நடுத்தர வர்க்கத்தினரையும் வாழ வைக்கக் கூடிய முறையில்----நட் டாக்சேஷன்----நல்ல வரி விதிப்பு முறை என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆடம்பரப் பொருள்களான மோட்டார், குளிர்சாதன பெட்டிகளுக்கு அதிக வரி விதிப்பு செய்தும், காபி, டீ, மண்ணெண்ணெய் போன்றவைகளுக்கு புது வரி போடாமலேயே இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மத்திய சர்க்காரைப் பார்க்கின்ற பொழுது, அத்தியாவசியப் பண்டங்களுக்கெல்லாம் வரி போட்டு, ரசாயன உரத்திற்குக் கொடுக்கின்ற சப்சிடியையும் குறைத்துவிட்டார்கள். அப்படி மத்திய அரசாங்கம் போட்டுள்ள வரிகள் மாநில அரசாங்கத்தினால் போடப்பட்டுள்ளது என்று பொதுமக்களிடையே ஒரு தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தி விட்டது. அதேசமயத்தில் அவர்கள் இந்த அத்தியாவசியப் பண்டங்களுக்கு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதைப்பற்றி நம் காங்கிரஸ் நண்பர்கள் கவலைப்படாமல் இங்கே இந்த மாநில அரசைப்பற்றி மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



1967 ஜூன் 19] [திரு. பு. செ. முத்துச்செல்வன்]

அடுத்தபடியாக, இதற்கெல்லாம் மேலாக, நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பஸ் தொழிலை தேசியமயமாக்க மிக நல்ல முயற்சியை மேற்கொண்டார்கள். அவர் பதவிக்கு வந்த ஒரு பதினைந்து நாட்களுக்குள் பஸ் கட்டணத்தைக் குறைத்து, அதன்மூலம் நல்ல லாபத்தை அதிகமாகக் காட்டியிருக்கிறார்கள். அப்படி பஸ் கட்டணத்தைக் குறைக்க முன் வந்தது தனியார் பஸ் உடைமையாளர்களுக்குத் தொந்தரவாகக் கூட இருந்தது என்று சொன்னால் மிகையாகாது. தாங்களாகவே இப்போது முன் வந்து கட்டணத்தைக் குறைத்துக் கொள்கிற நிலையை கலைஞர் அவர்கள் செய்திருக்கிறார்கள். அடுத்து 75 மைல்களுக்கு மேலாக உள்ள பஸ் ரூட்டுகளை எல்லாம் அரசாங்கமே எடுத்துக் கொண்டு, அதன் மூலம் நல்ல வருமானம் வரும் என்கிறபோது அது பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

அடுத்தபடியாக சேலம் இரும்பாலையைப் பற்றி நிதிநிலை அறிக்கையில் காணப்பட்டிருக்கிறது. சேலம் இரும்பாலைபற்றி இன்று நேற்றல்ல, பத்து பத்து ஆண்டுக்காலமாகவே பேசப்பட்டு வருகிறது. 1962-ம் ஆண்டில் அது தேர்தல் பிரச்சினையாகவே உருவாகி, அடுத்து திருச்செங்கோடு உபதேர்தலிலும் ஒரு பிரச்சினையாக வைக்கப்பட்டது. நமது மாநிலத்தில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சியினரே மத்திய ஆட்சியில் இருந்தும் சேலம் உருக்காலைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. இப்போது 3 மாத காலத்திலேயே அதற்கான முயற்சியை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதற்காக இந்த மந்திரி சபை பதவியைத் துறக்கக்கூடத் தயங்காது என்பதாக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது எத்தகைய தியாக உணர்வோடு இந்த அமைச்சரவை இயங்கிவருகிறது என்பதைப் புலப்படுத்தும். அடுத்தபடியாக அமைச்சர்கள் அனைவருமே சம்பளக் குறைப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதை எதிர்க்கட்சியினர் ஒருவர்கூடப் பாராட்ட முன் வரவில்லை. சம்பளக் குறைப்பினால் ஆண்டு ஒன்றுக்கு 51 ஆயிரம் ரூபாய் அரசாங்கத்திற்கு மிச்சமாகிறது. இதைப்போல காங்கிரஸ் கட்சியினர் ஆட்சியில் உள்ள மற்ற மாநில அமைச்சர்களோ, டெல்லியில் உள்ள அமைச்சர்களோ சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள முன் வரவில்லை. இதைப் பார்த்தும் பார்க்காததுபோல இவர்கள் குறைத்துக் கொண்டுள்ளதைப் பாராட்டாமலும் இருந்து வருகிறார்கள்.

அடுத்தபடியாக மாவட்டந்தோறும் ஆயிரம் பேர் கொண்ட சேனையை அமைக்கப்போகிறோம் என்கிறபோது ஏனோ சிலர் மனதில் அச்சம் ஏற்பட்டிருக்கிறது. அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்வார்கள். இந்தச் சேனை ஏற்பட்டு விட்டால் தங்கள் கட்சிக்கு இருக்கிற அரைகுறை மரியாதை குறைந்துவிடுமோ என்ற எண்ணத்தில் நினைக்கிறார்கள். அப்படி நினைக்கத் தேவையில்லை. அது கட்சி கண்ணோட்டத்திற்கு அப்பாற்பட்டதாக அமையும் என்பதை யாரும் நிச்சயமாக நம்பலாம். ஆகவே அதைப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்பதாகக் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ப. செ. முத்துச்செல்வன்] [1967 ஜூன் 19

அடுத்தபடியாக நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நிதிநிலை அறிக்கையில் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியதாகும். நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலமாக புதுப்புது நிலங்களை எல்லாம் சாகுபடிக்குக் கொண்டுவர முடியும். அதன்மூலம் உற்பத்தியை இரண்டு மடங்காகப் பெருக்க முடியும். இதன் மூலம் ஏரி குளங்களைப் புதிதாக வெட்டவும், நீர்ப்பாசனக் கால்வாய்களை வெட்டவும் வழியிருக்கிறது. அப்படிச் செய்தால் அதன்வாயிலாக என் தொகுதி நிலங்களில் இரண்டு மடங்கு அதிகமாக விளைவிக்க முடியும். ஆகவே நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, ரூபாய்க்கு ஒரு படி அரிசி சென்னை, கோவை போன்ற இடங்களில் போடுகிறார்கள். இருபது ஆண்டுக் காலத்தில் காங்கிரஸ் ஆட்சியினரால் சாதிக்க முடியாத ஒன்றை இந்த அரசு 3 மாத காலத்தில் சாதித்திருக்கிறது. இதனால் 60 சதவிகிதம் மக்கள் பயன் அடைகிறார்கள் என்பதை எதிர்க்கட்சியினரே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதனால் 5 கோடி நஷ்டம் ஏற்பட்டாலும் இதைத் தொடர்ந்து நிரந்தரமாக நடத்துவது என்றும், மற்ற இடங்களுக்கும் விஸ்தரிப்பது என்றும் இந்த அரசு செய்துள்ள முறையைப் பாராட்டுகிறேன். இப்படிச் செய்ய முடியுமா என்று சந்தேகப்பட்ட காங்கிரஸ்காரர்களுடைய சந்தேகமும் தீர்ந்தது. இதனால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும்.

அடுத்து கலப்புத் திருமணத்தைப் பற்றி பலர் சொன்னார்கள். கலப்புத் திருமணம் என்பது எந்தக் கட்சிக்கும் சொந்தம் இல்லை. எல்லாக் கட்சியும் ஏற்றுக் கொள்ளக்கூடிய திருமணம் கலப்புத் திருமணம். அது ஏற்படுகிறபோதுதான் காந்தியடிகளின் எண்ணப்படி சாதி ஒன்று, குலம் ஒன்று என்ற நிலையை மேற்கொள்ள முடியும். கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களை ஊக்குவிப்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பாராட்ட வேண்டுமே தவிர குறை சொல்ல வகையில்லை. இப்படி நல்ல பல திட்டங்களைக் கொண்ட நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள இந்த அரசாங்கத்தைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பிற்பகல் 1-28 **மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்:** நாட்டுப் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைகின்றன. நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



1967 ஜூன் 19]

## 3. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. StatutoryRules and Orders.

189. *Notification issued with Roc. No. 198990/66-F1, Director of Rural Development, dated 16th January 1967, regarding exclution of the lical area sepecified in the appedix of the notification from Pottapalayam Panchayat in Thirupparanam Panchayat Union, Ramanathapuram District and including the same within the jurisdiction of the Kosavankundu Panchayat of Tirupparankundram Panchayat Union, Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

190. *Notification issued with G. O. P. No. 412, Revenue, dated the 27th February 1967 making an amendment to the Madras General Sales Tax Rules, 1959, published with Revenue Department Notification S.R.O. No. A-1941, dated the 28th March 1959, at pages 232-280 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 1st April 1959, as subsequently amended [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959).]*

191. *Notification issued with G.O. Ms. No. 1168, Home, dated the 22nd April 1967, making an amendment to the Madras Molasses Control and Regulation Rules, 1958, published with Home Department Notification in S.R.O. No. A-6743 of 1958, dated the 4th October 1958, at pages 150-156 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 15th October 1958, as subsequently amended. [Laid on the Table of the House under section 54(3) of the Madras Prohibition Act, 1937 (Madras Act X of 1937).]*

192. *Notification issued with G.O. Ms. No. 1199, Agriculture, dated the 30th March 1967, declaring the area of Thittagudi market specified in column (1) of the schedule of the notification and the area of ten miles around that market comprised in the villages specified in the column (2), to be notified market area of the Thittagudi market for the purpose of the Madras Agricultural Produce Markets Act, 1959 in respect of groundnut, gingelly and cotton. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

193. *Notification issued with G.O.Ms. No. 1241, Agriculture, dated the 3rd April 1967, declaring tamarind and cane jaggery in all forms, jaggery powder and brown sugar except crystal sugar manufactured in vaccum pan process as Agricultural Produce, etc., for the purposes of the Madras Agricultural Produce Markets Act, 1959. [Laid on the Table of the House under section 29 (4) of the Madras Agricultural Produce Markets Act, 1959 (Madras Act 23 of 1959).]*

## B. Reports, Notifications and Other Papers.

30. Notification issued with G.O.P. No. 250, Revenue, dated the 9th February 1967, making the Indian Registration (Filing of True Copies) Rules, 1967 under the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908).

* 31. Demands for Grants and Detailed Budget Estimates for 1967–68 (in three volumes).

* 32. Detailed Public Works Budget.

* 33. Detailed Irrigation Budget.

* 34. Plan Supplement (English and Tamil).

† 35. Statement of Posts and Scales of pay.

† 36. Government Commercial Undertakings.

† 37. Introduction to Budget (English and Tamil).

† 38. Budget Memorandum (English and Tamil).

† 39. Review of Progress for 1965–66 and Programme for 1967–68 (English and Tamil).

† 40. Detailed Budget Estimates of Revenue for 1967–68.

† 41. Notice of Demand (English and Tamil).

† 42. Annual Financial Statement (English and Tamil).

† 43. Budget Speech (English and Tamil).

† 44. Appendices to the Budget Speech (English and Tamil).

D
211,31 N67
N67.2.2.3
64997

* Despatched to Members on 15th June 1967.

† Placed on the Table of the House on 17th June 1967.

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

## IN MADRAS CITY.

Messrs ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-3.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE, LIMITED Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & CO., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4. Mount Road, Madras-2.

## IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & CO., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & CO., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & CO., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29.
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

**PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.**



| (1) | (2) | (1) | (2) |
| --- | --- | --- | --- |
| | | | |